டிசம்பர் 12 - டிசம்பர் 18, 2010 December 12 - December 18, 2010 பக்கங்கள் - 28 25.00

REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

# சுடர் ஒளி

THE SUDAROLI

வார மலர்



## லண்டன் ஆர்ப்பாட்டம் கூறும் செய்தி என்ன?

## மழைக்கு இடம்பெயர மறுத்த மக்கள்...

## உண்மைகளைக் காணுவதே விடுதலைக்கான வழி

# மழைக்கு இடம்பெயர மறுத்த மக்கள்

மழைகாலம் எப்பொழுதும் அழிவுகளை அல்லது பாதகமான விளைவுகளை மக்களுக்கு வழங்கியபடிதானிருக்கிறது. எங்கென்றாலும் மழைகால அழிவினால் தாம் பாதித்து விட்டால் மக்கள் நிவாரணங்களை கோருவார்கள். ஈழ மக்களிடம் மழை தந்த துயரம், பாதிப்புக்கள் நிறைந்த மிகவும் நெருக்கடியானதாயிருக்கிறது. நிலத்தை கொள்ளையடிக்க நிற்பவர்கள் மழையை சந்தர்ப்பமாக வைத்து மக்களை அப்புறப்படுத்தப் பார்க்கிறார்கள் என்ற சந்தேகம் எல்லா மக்களிடமும் இருக்கிறது. அதனால் மழை எத்தகைய துன்பங்களை தந்தாலும் தாங்கிக் கொள்வோம் என்ற முடிவுடன் கூடாரங்களுக்குள் மக்கள் அடங்கிப் போயிருக்கிறார்கள்.

மாரிமழை அண்மைய நாட்களில் உக்கிரம் கொண்டபடி பெய்து வருகிறது. இந்த அடை மழையால் வன்னி, யாழ்ப்பாணம், வவுனியா, ஈழத்தின் கிழக்குப் பகுதி என்று தமிழர் நிலம் வெள்ளக்காடாகிக் கொண்டிருக்கிறது. புயல் குறித்த அச்சமும் சுனாமி போன்ற கடல் பெருக்கு குறித்த பீதியும் மக்களிடம் ஏற்பட்டிருக்கின்றன. மப்பும் மந்தாரமுமாக வடக்கு கிழக்கு காணப்படுகிறது. எவ்வளவு வெயிலையும் தாங்கலாம் கொஞ்ச மழையை தாங்க முடியாதிருக்கிறதே என்று சொல்லுவார்கள். இன்று, மிஞ்சி மிஞ்சினால் இந்த மழை என்ன செய்யப் போகிறது என்ற திடம் இந்த மக்களுக்கு எப்படி ஏற்பட்டது என்பது மிகவும் வித்தியாசமானது.

மழையினால் மரம் முறிந்து விட்டது. வேலி சரிந்து விட்டது. சுவர் விழுந்து விட்டது. காணியில் பயிர்கள் அழிந்து விட்டன என்று வெள்ள அழிவு நிவாரணங்களை கோரும் மக்கள் வெள்ளம் குறித்து எதுவும் முறையிடவில்லை. வன்னியில் வெள்ளத்தில் அநேகமாக எல்லாக் கூடாரங்களுமே மூழ்கிப் போயிருந்தன



என்றுதான் சொல்ல வேண்டும். இவ்வருடம் மழை சற்று அதிகமாகவே பெய்திருப்பதாக மக்கள் கூறுகிறார்கள். பனையால் விழுந்து போனவனை மாடு ஏறி மிதித்த கதை மாதிரித்தான் எங்களின் கதை ஆகிவிட்டது என்று என்னிடம் பரந்தனைச் சேர்ந்த முதியவர் ஒருவர் குறிப்பிட்டார்.

கிளிநொச்சி நகருக்கு அண்மையில் பரந்தன் என்கிற சிறிய நகருக்கு அருகாக சில கூடாரங்கள் வெள்ளத்தில் மூழ்கிப் போயிருந்தன. யுத்தம் முடிந்து போக்குவரத்துக்கள், சுற்றுலாப் பயணங்கள், இராணுவ விருந்தினர்கள் கடைகள் என்று மிகவும் கலகலத்துப் போன பரந்தன் நகரில்தான் இந்தக் கூடாரங்கள் மூழ்கியிருக்கின்றன. நான்கைந்து அடிக்கு மேல் தண்ணீர் கூடாரத்துக்குள் நிக்கிறது. இந்த இடத்தில் நாங்கள் முன்பு வீடு கட்டி இருக்கவில்லை. மீளக் குடியேறும் பொழுது தற்காலிகமாக வாழ்ந்து கொள்ளவே இந்த கூடாரத்தை அமைத்தோம். ஆனால் வருடக்கணக்கில் இந்தக் கூடாரத்துக்குள் வாழ வேண்டி வரும் என்று நினைக்கவில்லை. வெள்ளம் வற்றிய பிறகும் இந்த கூடாரம்தான் எங்கள் வீடு. இப்பொழுது மேட்டுப் பகுதியில் குழந்தைகளும் சில பெண்களும் தஞ்சமடைந்திருக்கிறார்கள். நாங்கள் இருக்கிறோம் என்பதற்காக இந்த கூடாரத்தின் அருகாக இருக்கிறேன் என்றார் கறுப்பையா சுப்பிரமணியம். மழையில் நனைந்தபடி பீடித்துண்டுகளை அவர் புகைத்தபடி இருந்தார். உங்கள் காணியில் ஏன் இப்படி வெள்ளம் வந்தது? கடந்த காலங்களிலும் இப்படியா? என்று அவரிடம் கேட்டேன். எங்கள் காணியில் மட்டுமல்ல இங்குள்ள பல காணிகளில் வெள்ளம் நிற்கிறது. வன்னியில் பல இடங்களில் வெள்ளம் செல்ல வழி தெரியாமல் தேங்கி நிற்கிறது என்று குறிப்பிட்ட அவர் வன்னி நிலமெங்கும் பெருகிவிட்ட யுத்தகால மண்மேடுகளால்தான் வெள்ள நீர் பெருமளவில் தேங்கி நிற்கிறது என்றார்.

அந்த முதியவர் சொல்வது உண்மைதான். யுத்த காலத்தில் அங்குலம் அங்குலமாக நிலப்பகுதிகள் இராணுவத்தினரிடம் விழுந்த போது மண்மேடுகளும் வீழ்ந்தன. அந்த மண்மேடுகளை இராணுவத்தினர் தொடர்ந்தும் பாதுகாத்து வெற்றிப் பொருட்களாக வைத்திருக்கிறார்கள். யுத்தத்தின் பொருட்டு புவியியல் அமைப்புக்களுக்கு மாறாக அமைக்கப்பட்ட அந்த மண்மேடுகள் மழை நீர் வழிந்தோடுவதை தடுத்து வெள்ளம் தேங்கப் பண்ணுகின்றன. இந்த மண்மேடுகள் பல உள் வீதிகளைக் கூட தடுத்து நிற்கின்றன.

ஓயாது பெய்து கொண்டிருக்கும் அடை மழைக்கும் இடையிடையே பெரியளவில் எழும் காற்றுக்கும் ஈடுகொடுக்க முடியாத கூடாரங்களே சேதங்களுக்கு உள்ளாகின்றன. காற்றோடு பறந்து செல்கின்றன. அந்தரத்தில் கிடக்கின்றன. சுவர்கள் இல்லை. கறுப்பு நிறமான தறப்பாள்களினால் சுற்றி கட்டப்பட்ட தடுப்பை தாண்டி வெள்ளம் முதல் விஷ உயிரினங்கள் வரை எதுவும் வரலாம். சுற்றி சிறியதாய் கூடாரத்துக்குள் ஏற்ப வாரி அணைக்கப்பட்ட அணைகளையும் மேவி வெள்ளம் கூடாரத்துக்குள் நுழைகிறது.

இரணைமடுக்குளமும், கனகாம்பிக்கைக்குளமும், அக்கராயன் குளமும் தற்பொழுது நிரம்பியிருக்கின்றன. குளங்களின் மேல் பக்கமாக காட்டுப் பகுதிகளில் இராணுவத்தினரின் முகாம்கள் பெருமளவில் அமைந்திருப்பதால் வழமையான நீர் மட்டங்கள் வரை குளங்கள் நிரம்புவதற்கு படைத்தரப்பினர் அனுமதிக்கிறார்கள் இல்லை என்றும் குளங்களை திறக்குமாறு கோரப்பட்டுள்ளது என்றும் நீர்பாசன வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதனால் குளத்தின் நீர் சேமிப்பு பாதிக்கப்படுவதாகவும் குளத்தின் கீழ் பகுதிகளில் வசிக்கும் மக்களின் குடியிருப்புக்களும் அவர்களின் பயிர்களும் பாதிக்கப்படுவதாகவும் நீர்பாசன

தீபச்செல்வன்

திணைக்கள அதிகாரி ஒருவர் என்னிடம் குறிப்பிட்டார்.


இந்த மழைக்காலத்தில் கிளிநொச்சி இரத்தினபுரத்தில் குடியிருக்கும் சில மக்களின் கதையோ மிகத்துயரமானது. கிளிநொச்சி நகரின் அருகில் அல்லது புறநகரில் வாழும் சில பூர்வீகக் குடிகள் இந்த மழைக்கு இடம்பெயர மறுத்திருக்கிறார்கள். 16 வீட்டுத் திட்டம் என்கிற குடியிருப்பில் வசிக்கும் அந்த மக்கள் கடந்த சில மாதங்களாக தங்கள் காணிகளை தங்களுக்கே தரவேண்டும் என்று கோரிக்கை விடுத்து வருகிறார்கள். இந்தக் காணிகளை மக்களிடமிருந்து பறித்துக் கொள்ளும் நடவடிக்கையில் ஈடுபடுபவர்கள் மழையை தமக்கு சாதகமாக பயன்படுத்த முற்பட்டார்கள்.



ஆறுகளும், ஆற்று மரங்களும் என்று பசுமையுடன் இருக்கும் அந்தப் பகுதியை இரத்தினபுரம் தாழ்நிலப் பகுதி என்று அழைப்பார்கள். அங்கு வாழும் மக்கள் பெருமளவில் தெற்கு கலவரத்தினால் பாதிக்கப்பட்டு வந்தவர்கள். கிட்டத்தட்ட கடந்த 30 வருடங்களுக்கு மேலாக இரத்தினபுரத்தை பூர்வீகமாகக் கொண்டு வசிக்கிறார்கள். இந்த மக்கள் வாழும் பகுதி தாழ் நிலப் பகுதி என்றும் அந்தப் பகுதியை விட்டு வெளியேறிச் சென்றாலே மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. சில நாட்களுக்கு முன்பு மழை தொடங்கிய பொழுது அந்தப் பகுதிக்கு சென்ற அரச அதிகாரிகள் மக்களை பாடசாலை ஒன்றில் சென்று தஞ்சமடையுமாறும் அவர்களுக்கு நிவாரணங்களும் சமைத்த உணவும் வழங்கப்படும் என்றும் தெரிவித்த வேளையில், மக்கள் தாங்கள் இடம்பெயர மாட்டோம் என்றும் தங்களுக்கு எந்த நிவாரணங்களும் வேண்டாம் என்றும் உறுதியாக மறுத்து விட்டார்கள்.

நில ஆக்கிரமிப்புக்களும் கொள்ளைகளும் ஈழத் தமிழ் மக்களை இப்பொழுது வலிமை மிக்கவர்களாக மாற்றுகின்றன. மழைத் துயரம் ஒரு பொருட்டல்ல என்பதை சொல்கிற மக்கள் எங்கள் நிலத்தில் நாங்கள் வாழ வேண்டும் என்பதை மட்டும் உறுதியுடன் வெளிப்படுத்தி வருகிறார்கள். வெள்ளத்தின் பாதிப்புக்களை மக்கள் வெளியில் சொல்ல அஞ்சுகிறார்கள். ''வெள்ளம் வரும் பகுதி அல்லது தாழ்வான பகுதி இங்கு குடியிருப்பு ஆபத்தானது'' என்று சொல்லி காணிகளை அபகரித்து விடுவார்கள் என்று மக்கள் அஞ்சுகிறார்கள். இதனால் சேறும் சகதியுமான கூடாரங்களில் மக்கள் வாழ்கிறார்கள். கூடாரத்துக்குள் வரும் வெள்ளத்தை முடியுமானவரை தடுக்கிறார்கள்.

மக்கள் ஏன் கூடாரங்களில் இந்தப் பெருமழையை எதிர்கொள்ள வேண்டும் என்பதும், இந்த அவலங்களுக்கு ஏன் முகம் கொடுக்க வேண்டும் என்பதும் முக்கியமானவிடயங்கள். மக்கள் குடியேறிய பொழுது தற்காலிகமாக அமைக்கப்பட்ட கூடாரங்களே நிரந்தர வதிவிடங்களாக மாறிவிட்டன. பல இடங்களில் தொடங்கப்பட்ட வீடு கட்டும் திட்டங்கள் இன்னும் முடிவடையாமல் உள்ளன. கிட்டத்தட்ட மீள்குடியேறி ஒருவருடமான நிலையிலும் வீடுகள் கட்டி கொடுக்கப் படவில்லை. கட்டத் தொடங்கப்பட்ட வீடுகளுக்கு அருகாக உள்ள கூடாரங்களை வெள்ளம் நனைத்துக் கொண்டிருக்கிறது.



மழையின் துயரத்தை வைத்து மக்களின் நிலங்களை கொள்ளையடிக்க முற்படும் நடவடிக்கைகள் பல இடங்களில் அரங்கேறுவது ஒரு புறம் இருக்க. வன்னி மக்களும் யாழ் மக்களும் மழை வெள்ளத்தினால் அவலப்படுகிறார்கள் என்பதைப் பார்த்த நாவற்குழியில் அத்துமீறிக் குடியேறிய சிங்கள மக்கள், மழையினால் நாங்களும் அவலத்தை எதிர்கொள்கிறோம் என்றும் அதையும் ஊடகங்களில் வெளியிடுங்கள் என்றும் தெரிவித்திருக்கிறார்கள். நாங்களும் மீளக்குடியேறியவர்கள்தான் என்று சொல்லும் இந்த குடியேற்ற மக்கள் மழையின் தாக்கங்களை தங்கள் கூடாரங்கள் தாங்க முடியாத நிலையில் உள்ளன என்றும் தங்கள் கூடாரங்களுக்குள்ளும் வெள்ளம் புகுந்துள்ளது என்றும் தெரிவித்ததுடன் தங்களுக்கு விரைவில் வீடுகளை அரசாங்கம் அமைத்து தர வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருக்கிறார்கள்.

நாவற்குழியில் மீளக் குடியேறிய அந்தப் பகுதியை பூர்வீகமாக் கொண்ட மக்கள் மழை அவலம் தாங்க முடியாமல் மாற்றிடங்களுக்கு இடம்பெயர்ந்திருக்கிறார்கள். 330 தமிழ் குடும்பங்கள் இப்படி இடம்பெயர்ந்துள்ளன. 185 ஆக அதிகரித்துள்ள அத்துமீறிக்குடியேறிகள் தாங்கள் எந்த அரசியல் பின்னணியிலும் குடியேறவில்லை என்று தெரிவிக்கிறார்கள். தங்கள் கூடாரங்களின் முன்பாக ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தாபாய ராஜபக்ஷ போன்றோரின் படங்களை தொங்க விட்டிருக்கிறார்கள். தாங்கள் கொண்டு வந்த பேருந்துகள், ஆட்டோக்கள், கார்கள், மோட்டார் சைக்கிள்கள் என்பன நனைந்து கொண்டிருக்கின்றன என்று கவலையுடன் அவர்கள் கூறுகின்றனர்.

அடை மழையும் பெரு வெள்ளமும் தமிழ் மக்களின் நம்பிக்கையை சோதிக்கின்றன. அவலங்கள் குறித்து குரல் எழுப்ப விடாது தடுக்கின்றன. யுத்தம் தின்ற மக்களிடம் எஞ்சிய எல்லாவற்றையும் அடித்துச் செல்ல முற்படும் வெள்ளத்தைப்போல மழைக்காலத்தையும் வெள்ளத்தையும் வைத்து மக்களின் நிலங்களை பறிக்க முற்படும் நடவடிக்கைகளும் அரங்கேறப் பார்க்கின்றன. எல்லா வகைகளிலும் எமது மக்கள் மீண்டும் மீண்டும் இடர்களுக்கு முகம் கொடுக்கிறார்கள். எனினும் மக்கள் தமக்கெதிரான சவால்களை நிதானமாக எதிர்கொள்கிறார்கள். இந்த மக்களின் வார்த்தைகளில் சொல்வதானால் மழை ஓயும் என்றும் வெள்ளம் வற்றும் என்றும் நம்புவோம் என்பதை இறுதியாக குறிப்பிட விரும்புகிறேன். *

# லண்டன் ஆர்ப்பாட்டம் கூறும் செய்தி என்ன?

"விடுதலைப் புலிகளின் பிரசாரங்களை முறியடிப்பதற்கு வெளிவிவகார அமைச்சு கூடுதல் முனைப்புக் காட்ட வேண்டும்.

அண்மையில் லண்டனில் நடைபெற்ற போராட்டம் இலங்கை வெளிவிவகார அமைச்சுக்கு ஒரு சிறந்த எச்சரிக்கை சமிக்ஞையாகக் கருதப்படவேண்டும்."

சர்வதேச பயங்கரவாத ஒழிப்புத் தொடர்பான பேராசிரியர் ரொஹான் குணரத்ன மேற்கண்டவாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

லண்டன் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக மாணவர் சங்கம் விடுத்த அழைப்பை ஏற்று சிறப்புரை நிகழ்த்துவதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ லண்டன் சென்றிருந்தார்.



அவர் விமான நிலையத்தில் இறங்கிய நேரம் முதல் அவர் திரும்பும் வரை அவர் தங்கியிருந்த இடங்களைச் சுற்றி வளைத்து புலம் பெயர்ந்தவர்கள் ஆர்ப்பாட்டங்களை நடத்தினர்.

இதன் காரணமாக ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் ஜனாதிபதி ஆற்றவிருந்த உரை ரத்துச் செய்யப்பட்டது.

அவர் தங்கியிருந்த ஹோட்டல், இலங்கைத் தூதரகம், விமான நிலையம் ஆகியவற்றைப் புலம் பெயர்ந்தவர்கள் முற்றுகையிட்டதால் அவரால் வெளியில் கூட நடமாட முடியவில்லை எனச் செய்திகள் கசிந்துள்ளன.

இந்த நிலையில் ஜனாதிபதி பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சர் லியாம் பொக்ஸுடன் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

"இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு எதிர்காலத்தில் எம்முடன் இணைந்து செயற்பட விரும்பும் தமிழ் அரசியல் கட்சிகளுடன் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளோம். பலாத்காரமாக திணிக்கும் தீர்வை விட மக்களின் கருத்துக்களைப் பெற்றுக் கொண்டு நடைமுறைப்படுத்தும் தீர்வுத் திட்டமே பயனுள்ளதாக அமையும்" என்று ஜனாதிபதி அவரிடம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் கருத்து வரவேற்கப்படவேண்டியது தான். இப்போது அவர் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி. அடுத்த ஆறு வருடங்களும் அவரே சர்வ வல்லமை கொண்ட ஜனாதிபதியாக இருக்கப்போகிறார். நாடாளுமன்றத்திலும் அறுதிப் பெரும்பான்மை கொண்ட ஆட்சியை அவர் தம்வசம் வைத்திருக்கிறார்.

1978 ஆம் ஆண்டு காலத்தில் ஜே.ஆர். ஜெயவர்த்தன எவ்வாறு சர்வவல்லமை கொண்டவராக இருந்தாரோ அவர் போன்ற சர்வவல்லமை கொண்டவராக ஜனாதிபதி விளங்குகிறார்.

ஜே.ஆர். அரசமைப்பை மாற்றினார். இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை எட்டினார். இந்தியப் படை இலங்கைக்கு வருவதற்கு ஏற்பாடு செய்தார்.

அதேபோன்று ஜனாதிபதி மகிந்தவும் தனது முதலாவது பதவிக்காலத்தில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக போரை நடத்தி அவர்களை ஒழித்துக் கட்டிவிட்டார். அடுத்து அவர் வசம் உள்ள முக்கிய பணிகள் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புவதும் இனப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண்பதும் தான்.

பொருளாதார மேம்பாட்டில் வெளிநாடுகள் வழங்கும் உதவிகளை பயன்படுத்த ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார்.

போட்டா போட்டியாக களம் இறங்கியுள்ள இந்தியா, சீனா ஆகியவற்றின் உதவியுடன் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை ஜனாதிபதி முன்னெடுத்துள்ளார். அம்பாந்தோட்டை துறைமுகம், அம்பாந்தோட்டை வர்த்தக வலயம், காங்கேசன் துறை துறைமுகம், பலாலி விமான நிலையம், வீதிகள், ரயில் பாதைகள் புனரமைப்பு என பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கத் திட்டமிடப் பட்டுள்ளது.

பொருளாதார மேம்பாட்டுக்கு மறுபுறம் நாட்டில் அமைதி நிலை பேணப்படவேண்டுமானால், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும்.

இனப்பிரச்சினை இந்த நாட்டில் தீர்க்கப்படாததால் முன்னெடுக்கப்பட்ட அகிம்சை வழி, ஆயுத வழிப் போராட்டங்கள்தான் இலங்கையில் இருந்து தமிழர்கள் மேற்கு நாடுகளுக்கு செல்வதற்கு காரணம் என்ற யதார்த்த நிலையை சிங்களத் தலைமைகள் உணர வேண்டும்.

வேலைவாய்ப்பில் புறக்கணிப்பு, உயர்கல்வி வாய்ப்பில் பாரபட்சம் போன்ற காரணங்களே தமிழர்கள் மேற்கு நாடுகளுக்கு சென்று அங்கு அரசியல் தஞ்சம் கோர அடிப்படையாக அமைந்தன.

மேற்கு நாடுகளுக்குச் சென்ற தமிழர்கள், தமது உரிமைகளுக்காக அங்கு போராடி வருகிறார்கள். மேற்கு நாடுகளுடன் உறவுகளைப் பேணி அவர்கள் அங்கு முன்னெடுக்கும் செயற்பாடுகளின் வெளிப்பாடே இலங்கைக்கு நெருக்கடிகளைத் தோற்றுவித்துள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ லண்டனுக்கு சென்ற சமயம் அங்கு முன்னெடுக்கப்பட்ட போராட்டமும் புலம் பெயர்தமிழர்களின் செயற்பாடுகளின் ஓர் அங்கம் எனக் கருதப்படுகிறது. ஜனாதிபதி லண்டனில் இருந்த வேளை சனல் 4

## வெளிநாட்டுக் கொள்கையில் மாற்றம் கொண்டு வரவேண்டும்



தொலைக்காட்சியில் ஒளிபரப்பான, போர்க் குற்றம் தொடர்பான படங்களும் இலங்கைக்கு பெரும் நெருக்கடியை கொடுத்தது. இரண்டாவது பதவிக்காலத்துக்காக நவம்பர் 19 ஆம் திகதி சத்தியப்பிரமாணம் செய்வதற்கு முன்னர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ லண்டனுக்குச் செல்லத் திட்டமிட்டார். ஆனால் அந்த விஜயம் பின்னர் பிற்போடப்பட்டது.

ஜனாதிபதி அங்கு சென்றால் போர் குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்படலாம் என்று அப்போது பரபரப்புச் செய்திகள் வெளிவந்தன.

எனினும் கடந்த வாரம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ லண்டன் சென்றார். அங்கு அவருக்கு ஏற்பட்ட அசௌகரியம் குறித்து பிரதமர் டி.எம். ஜயரத்தின அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை இலக்கு வைத்து பிரிட்டனில் மேற்கொள்ளப்பட்ட புலிகள் இயக்க ஆதரவாளர்களின் எதிர்ப்புப் போராட்டத்தை ஜனநாயகத்தை விரும்பும் உலகின் எந்தவொரு நாடும் பார்த்துக் கொண்டு மௌனம் சாதிக்க முடியாது என்று பிரதமர் ஜயரத்தின கூறியுள்ளார்.

ஒரு நாட்டின் தலைவருக்கு மற்றொரு நாட்டில் வைத்து அகௌரவம் செய்தது கண்டிக்கப்பட வேண்டியது தான்.

ஆனால் அந்த நிலை ஏற்படுவதற்கான அடிப்படைக் காரணத்தைக் கண்டறிந்து அதற்கு பரிகாரம் காணுவதன் மூலமே எதிர்காலத்தில் இத்தகைய சம்பவங்கள் இடம் பெறுவதைத் தடுக்கமுடியும். இதற்கு பரிகாரம் காண வேண்டிய பொறுப்பு இலங்கையில் உள்ள தெற்குத் தலைமைகளின் கைகளிலே உள்ளது. தெற்குத் தலைமைகள் ஒன்று சேர்ந்து செயற்பட்டு அடிப்படைப் பிரச்சினைக்கு தீர்வைக் காண்பதன் மூலமே நாட்டுக்கு அபகீர்த்தி ஏற்படுவதை தடுக்க முடியும்.

கட்டுரையின் ஆரம்பத்தில் லண்டனில் நடைபெற்ற போராட்டம் இலங்கைக்கு முறையான எச்சரிக்கை என பேராசிரியர் ரொஹான் குணரத்ன தெரிவித்திருந்தார். வெளிவிவகார அமைச்சின் செயற்பாடு வீச்சுத் தொடர்பாக அவர் குறைப்பட்டிருந்தார்.

நாட்டின் உயர்வுக்கு முக்கிய காரணமாக இருப்பது வெளிநாட்டுக் கொள்கையாகும். காலத்துக்கு காலம் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப வெளிநாட்டுக் கொள்கைகளில் மாற்றம் கொண்டுவரப்பட வேண்டும்.

லக்ஷ்மன் கதிர்காமர் காலத்தில் சர்வதேச மட்டத்தில் விடுதலைப் புலிகளை ஒடுக்கும் நோக்கில் வகுக்கப்பட்ட வெளிநாட்டுக் கொள்கையே நடைமுறையில் இருக்கிறது.

விடுதலைப் புலிகளை சர்வதேச வலையமைப்பில் இருந்து எப்படி ஒழிக்கலாம் என்ற நோக்கிலேயே வெளிநாட்டுக் கொள்கை தொடர்ந்து கடைப்பிடிக்கப்படுகிறது.

பல கோடி ரூபாவை செலவழித்து வெளிநாட்டு நிறுவனங்களை வாடகைக்கு அமர்த்தி பிரசாரத்தை முன்னெடுக்கும் நிலைக்குப் பதிலாக மேற்கு நாடுகள் விரும்புகின்றபடி இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் காணவேண்டும்.

இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு ஒன்றைக் கண்டு மேற்கு நாடுகளுக்கு அதைத் தெரியப்படுத்தி அதன் மூலம் நாட்டின் நற்பெயரைக் காப்பாற்றலாம்.

மேற்கு நாடுகளின் எதிர்ப்பை சமாளிக்க வேண்டுமானால் இனப்பிரச்சினைக்கு விரைந்து தீர்வு ஒன்றை இலங்கைத் தலைவர்கள் காணவேண்டும்.

அத்தகைய இலக்கை நோக்கி இலங்கை செல்லுமாயின் மேற்கு நாடுகளின் ஆதரவை மட்டுமல்ல தமிழர்களின் ஆதரவையும் பெறலாம்.

லண்டன் சம்பவம் போன்று மீண்டும் ஒரு சம்பவம் இடம் பெற இடமளிக்காது நிரந்தர தீர்வை நோக்கி இலங்கை பயணிக்க வேண்டும். அதுவே சகலரின் விருப்புமாகும்.

யாழவன்

# நாட்களை எண்ணியபடி...

ம.சுகீதரன்

யுத்தம் நடைபெற்ற நாட்களில் வன்னியில் எவ்வளவோ சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. தாங்கள் எதிர்கொண்ட அவலங்களை, தங்களுக்கு ஏற்பட்ட பயங்கர அனுபவங்களை பலர் 'உயிர் வலிக்கும் கணங்கள்' என்ற பகுதியில் எழுதி வருகிறார்கள். அதே போன்று வன்னியில் இடம்பெற்ற சம்பவங்களைப் பலர் கதை வடிவிலும் எழுதி வருகிறார்கள். இந்தத் தொடரில் ம.சுகீதரன் எழுதிய 'நாட்கள் எண்ணியபடி...' என்ற உண்மைக்கதை வெளிவருகிறது.

கடந்து வந்த பாதைகள் எவ்வளவு துன்பகரமானவையோ அதைவிட தற்போது நாம் செல்லும் பாதையும் கஷ்டம் நிறைந்ததாகவே உள்ளது. அன்று சொன்னார்கள் கரடுமுரடான பாதையில் பயணித்தே ஆகவேண்டுமென்று. எமது மனமும் அதனை ஏற்றது. ஆனால், அதற்கு செயல்வடிவம் கொடுக்க மறுத்தது. அதன் விளைவை இன்று எல்லோரும் அனுபவித்துக் கொண்டு இருக்கிறோம்.



நிம்மதியில்லாத நிச்சயமற்ற வாழ்வு. உறவுகள் சந்திப்புக்கான காத்திருப்பு. வெயிலில் புழுவாய் துடிக்கிறோம். உணவுக்கும் நீருக்கும் நிரையிட்டு நிற்கிறோம். கனவு கண்டு ஏதேதோ உளறுகிறோம். குடும்பச்சுமை ஒரு பக்கம் வாட்ட குடும்பத்தில் நடக்கும் ஏற்கமுடியாத செயல்கண்டு மன நோயாளிகளாக மாறிக் கொண்டிருக்கிறோம். சிலர் மாத்திரைகளை உட்கொண்டு மரணத்தின் வாசல்வரை சென்று திரும்புகின்றனர். இன்னும் சிலர் குடும்பத்துடன் தற்கொலை செய்துகொள்ள முயற்சிக்கின்றனர். ஒருசிலர் இதுதான் வாழ்க்கை என்றெண்ணி காக்கை வன்னியனைப் போல செயற்படுகின்றனர். ஒருகோப்பையில் உணவருந்தி ஒருதாய் பிள்ளைகளைப் போல இருந்தவர்கள் இன்று சொற்ப சலுகைக்காக தோளோடு தோள் கொடுத்தவனையும் துன்பத்தில் பங்கெடுத்தவனையும் உறவென்று கூட பார்க்காது காட்டிக் கொடுத்து பிழைப்பு நடத்துகின்றனர். எது எப்படியிருப்பினும் சில நாட்களுக்கு முன்பு, அறிமுகமான ஐயா ஒருவரின் துயரமான கதையை இப்பகுதியில் பதிவு செய்ய விரும்புகின்றேன்.

சபாரத்தினம் வன்னி மாநகரிலேயே விவசாயத்துக்கென பெயர் பெற்ற நெடுங்கேணி என்னும் சிற்றூரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தற்போது நாற்பது வயதை அடைந்திருக்கும் அவர், சிறுபராயத்திலேயே ஒதியமலை படுகொலைச் சம்பவத்தாலும் யுத்தத்தாலும் பாதிக்கப்பட்டவர். 20 வருடங்களுக்கு முன்பு தன்னை போராட்டத்தில் இணைத்துக் கொண்டார். ஒரு வருடத்தின் பின்பு போராட்டத்திலிருந்து விலகி, குடும்பத்தினருடன் இணைந்து கொண்ட இவர் சிறுவயதிலேயே மலர் என்ற ஏழைப்பெண்ணை காதலித்து கரம்பிடித்துக் கொண்டதாலும், பெற்றவர்களின் சம்மதம் இன்று திருமணம் செய்ததாலும் உறவினர்களால் ஒதுக்கி வைக்கப் பட்டிருந்தார். தனது அயராத உழைப்பினால் சிறிது காலத்திலேயே காணி வாங்கி அதனுள் அழகிய வீடு ஒன்றையும் கட்டிக் கொண்டார்.

மூன்று பிள்ளைகளுக்கு தந்தையான இவரது குடும்பச் செலவுக்கும் பிள்ளைகளின் கல்விச்செலவுக்கும் வருகின்ற வருமானம் போதுமானதாக இருக்கவில்லை. நாளடைவில் மரக்கறி வியாபாரம் செய்து குடும்பத்தை சந்தோசமாக வைத்திருந்தார். இவரை வெறுத்து ஒதுக்கிய உறவுகள் தாமாகவே வந்து ஒட்டிக்கொண்டனர். காலம் உருண்டோடியது. வன்னி நகரை யுத்தமேகம் சூழ்ந்துகொண்டது. யுத்தம் யாரை நிம்மதியாக வாழவிட்டது. இடபெயர்வு இவர்களையும் துரத்தியது. பலகட்ட இடபெயர்வின் பின் உறவுகளைப் பிரிந்து உடமைகளை இழந்து இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் வந்து சேர்ந்தார். இவருக்காக மீண்டும் ஓர் பிரிவு காத்திருந்தது. ஒருநாள் விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்தாலும் இராணுவத்தினரிடம் பதிவுகளை மேற்கொண்டு விட்டு உறவுகளுடன் செல்லுமாறு அறிவிக்கப்பட்டது. பதிவை மேற்கொள்ளச் சென்ற இவரை தடுப்புமுகாமுக்கு ஏற்றிவிட்டு ஆறு மாதத்தின்பின் விடுதலை செய்வோம். நீங்கள் முகாமுக்குப் போங்கள் என அறிவித்தனர். ஏதுமறியாத அப்பாவிகள் கண்ணீருடன் முகாமை சென்றடைந்தனர். ஆண்துணை இல்லாத இவர்கள் எவ்வளவு துன்பங்களையும் துயரங்களையும் அனுவித்திருப்பார்கள் என்பதை நாம் அனைவரும் அறிவோம்.

ஆறுமாதம் தானே கணவர் வந்துவிடுவார் என நாட்களை எண்ணிக் கொண்டிருந்த மனைவி இன்று ஒருவருடம் பூர்த்தியாகப் போகும் நிலையிலும் கணவர் விடுதலை செய்யப்படவில்லை இந்தநிலையில் மனைவியால் எழுதப்பட்டிருந்த கடிதத்தில் இவ்வாறு இருந்தது.



''அன்புள்ள அப்பாவுக்கு, உங்கள் வரவை எதிர்பார்த்து எதிர்பார்த்தே இவ்வளவு நாட்களும் சென்றுவிட்டன. எனது நகைகளும் பிள்ளைகளின் நகைகளும் விற்று முடிந்துவிட்டன. இனி விக்கிறதுக்கு என்னிடம் எதுவுமே இல்லை. இப்போது நான் கூலி வேலை செய்யப்போகிறேன். இன்னும் இருமாதங்களுக்குள் நீங்கள் விடுதலையாகி வரவில்லையென்றால், பிள்ளைகளுக்கும் மருந்து கொடுத்து நானும் மருந்து குடிச்சு செத்துப் போவேன்.''

இவ்வாறு அக்கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது. அக்கடிதத்தை என்னிடம் காட்டி விம்மிவிம்மி அழுதார். ''ஒருநாள் கூட என்ர மனிசியை வேலைக்கு அனுப்பினதில்லை தம்பி. ஆம்பிளையே உழைத்து குடும்பத்தைப் பார்க்க முடியாத நிலையில அவள் எப்படி தம்பி... கூலிக்குப் போய் குடும்பத்தை பார்க்க முடியும்? இஞ்ச பார் தம்பி!'' என்றார். நான் திரும்பிப் பார்த்ததும் திகைத்துப் போய்விட்டேன். குறைந்தது ஐம்பது விதவிதமான குளிசைகளைக் காட்டினார்.

''ஏன் ஐயா? எதற்கு இதுவெல்லாம். பேசாமல் எறியுங்கோ... என்றுக்கும் யோசிக்காதீங்கோ. நாங்கள் அனைவரும் கெதியா விடுதலையாவோம். கவலைப்படாமல் இருங்கோ'' எனக் கூறினேன். ''தம்பி எனக்கு எல்லாம் தெரியும். இவங்கள் இப்ப விடுதலை செய்ய மாட்டாங்கள். அதுகள் செத்தால் நான் ஏன் தம்பி உயிரோடை இருப்பான்? அதுகள் சாகிற அண்டைக்கு நானும் செத்திடுவன்....'' என பிரமை பிடித்தவர் போல கூறினார். நான் என்ன செய்ய முடியும்?

அவர் இல்லாத நேரம்பார்த்து அவரது பையிலிருந்த குளிசைகளை எடுத்து எறிந்து விட்டேன். நாமோ விடுதலையாகும் நாளை எண்ணிக்கொண்டிருக்கிறோம். அவரோ சாவுக்கான நாளை எண்ணிக்கொண்டிருக்கிறார்.

# தி.மு.க மீண்டும் ஆட்சிக்கு வருமா?

இன்று தமிழ் நாட்டின் அரசியலை அவதானிக்கும் அனைவரும் பரபரப்பாக கேட்கும் கேள்வி தி.மு.க மீண்டும் ஆட்சிக்கு வருமா..?என்பதே. இப்போதுதான் அதற்கு சார்பான நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன,



முரணான நிகழ்வுகளும் நடைபெற்று வருகின்றன.

தி.மு.க, காங்கிரஸ் கூட்டணி சுமுகமாக தொடருமானால் தி.மு.க மீண்டும் ஆட்சி பீடமேறுவதில் சிக்கல் இராது என்றே தி.மு.கவின் எதிரிகள் கூட கருதுகின்றனர். அதிகம் ஏன் ஜெயலலிதா கூட தி.மு.க காங்கிரஸ் கூட்டணி தொடர்ந்தால் அ.தி.மு.க ஆட்சிக்கு வரவே முடியாது என்பதை உணர்ந்திருக்கிறார். அதனால் தான் தலை கீழாக நின்றாவது தி.மு.க, காங்கிரஸ் கூட்டணியை உடைக்க முயற்சிக்கிறார் என்பது சகலருக்கும் தெரியும். எனவே தி.மு.க மீண்டும் ஆட்சிக்கு வருமா இல்லையா என்பது தி.மு.க காங்கிரஸ்



அணிதொடர்வதில்தான் பெரிதும் தங்கியுள்ளது. இந்த அணியை உடைப்பதில் இதுவரை தோல்வியையே தழுவியுள்ளனர். ஆனால் தி.மு.க, காங்கிரஸ் கூட்டணியில் சலசலப்பை ஏற்படுத்த ஜெயலலிதாவினால் முடிந்துள்ளது என்பதை மறுக்க முடியாது. தி.மு.க மீதான இளங்கோவனின் வசைபாடலும் கார்த்தி சிதம்பரம் தி.மு.க மீது காட்டும் கோபமும் ஜெயலலிதா முயற்சிக்கு கிடைத்த சிறு வெற்றிகளே. தி.மு.கவின் அமைச்சர் ராசா விலகிய விடயத்தில் மத்திய அரசு தப்பியது என்னவோ உண்மைதான். ஆனால் தி.மு.க காங்கிரஸ் கூட்டணி தப்பியதா என்று கேட்டால் ஆம் என்று எவரும் சொல்ல முடியாது. கூட்டணியில் ஆங்காங்கே பொத்தல்கள் விழுந்திருப்பது மறுக்க முடியாத உண்மை. கடந்த வாரம் முதல்வர் கருணாநிதி பகிரங்க நிகழ்ச்சி ஒன்றில், கூட்டணியில் இருந்து வெளியேறினால் காங்கிரஸூக்குத்தான் நஷ்டம் என வெளிப்படையாக கூறியிருப்பது காங்கிரஸ் வட்டாரத்தை அதிர வைத்திருக்கிறது. காங்கிரஸுக்கு ஆதரவளித்ததால் தான் கம்யூனிஸ்ட்களின் உறவை இழந்தோம் என கருணாநிதி வருத்தத்துடன் குறிப்பிட்டிருக்கிறார். இந்திய அமெரிக்க அணு ஒப்பந்தத்தை எதிர்த்து 2008 இல் கம்யூனிஸ்ட்டுகள் மன்மோகன் அரசில் இருந்து வெளியேறினர். தி.மு.கவையும் வெளியேறும்படி வற்புறுத்தினர். ஆனால் பதவி ஆசை பிடித்த தி.மு.க மறுத்துவிட்டது. கோபமுற்ற கம்யூனிஸ்ட்டுகள் நேரே சென்று ஜெயலலிதாவிடம் சரணடைந்தனர். ஆக தி.மு.க- கம்யூனிஸ்ட் உறவு முறிந்தது காங்கிரஸ் நட்பினால்தான் என்று கலைஞர் சொல்லுவது சரியே. இவ்வாறெல்லாம் இந்த கூட்டணிக்காக தி.மு.க தியாகம் செய்துள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். எனவே காங்கிரஸும் சில தியாகங்களை செய்து கூட்டணியைக் காப்பாற்ற வேண்டும் என்பது அவரது மறைமுக வேண்டுகோளாகும்.

இதைத் தவிர இலங்கைத் தமிழர் விடயத்தில் தி.மு.க தலைமை காங்கிரஸுக்கு எந்த அழுத்தங்களையோ தொந்தரவுகளையோ கொடுக்கவில்லை. இதை வெளியில் சொல்லி மார்தட்டிக்கொள்ள தி.மு.கவுக்கு இயலாது. ஏனென்றால் ஈழத்தமிழர் விரோதி என முத்திரை குத்தப்படுவதை கலைஞர் விரும்பவில்லை. ஈழத்தழிழர் விவகாரத்தால் சென்ற ஆண்டு லோக்சபா தேர்தலில் தி.மு.க காங்கிரஸ் கூட்டணிக்கு ஒரு சிறு இழப்பு ஏற்படவே செய்தது. கூட்டணியில் காங்கிரஸ் இருந்திராவிடில் அத்தேர்தலில் தி.மு.க அமோக வெற்றியீட்டியிருக்கும். காங்கிரஸ் போட்டியிட்ட 16 இடங்களில் சரிபாதி இடங்களில் தோற்றது. தி.மு.கவோ தனது 23 தொகுதிகளில் 17ஐ தக்கவைத்துக்கொண்டது. இதெல்லாம் தி.மு.க வுக்கு காங்கிரஸால் ஏற்பட்ட இழப்பே. காங்கிரஸை பொறுத்தவரை தமிழகத்தில் தி.மு.க ஆட்சியில் அமைச்சுப் பதவி பெறாமலே ஆட்சியை ஆதரித்து வருகிறது. இது ஒரு முக்கிய தியாகமே. இதைத்தான் இளங்கோவன் தரப்பு திரும்பத் திரும்ப கூறி வருகிறது. ஆக பரஸ்பரம் விட்டுக்கொடுப்பில் நடக்கும் கூட்டணி என்பது சரிதான். இது தொடருமா என்பதே இன்றைய கேள்வி. தி.மு.க இதற்கு முன்பும்

**எஸ்.சுரேந்திரஜித்**

மத்திய ஆட்சியில் பதவி பெற கம்யூனிஸ்ட் களுடகான உறவை துண்டித்திருந்தது. 1999 இல் தான் முதன் முதல் 20 வருட உறவை உதறி தி.மு.க கம்யூனிஸ்ட்களிடமிருந்து பிரிந்தது. வாஜ்பாய் அரசில் சேரவே தி.மு.க அவ்வாறு பிரிந்தது. இன்று அதே போல் காங்கிரஸின் மத்திய ஆட்சியில் பதவி பெறுவதற்காக கம்யூனிஸ்ட்களின் உறவை கைவிட்டுள்ளது.

இந்தப் பின்னணியில் தி.மு.க பதவிக்கு வர இருக்கும் முக்கிய தடை காங்கிரஸ் கூட்டணியில் தற்போது ஏற்பட்டுள்ள தொய்வாகும். ஆனாலும் மத்திய உள்துறை அமைச்சர் சிதம்பரத்துடன் கலைஞருக்குள்ள அதீத நெருக்கமும் தி.மு.க கூட்டணியை காப்பாற்றிவிடும் என்றே தோன்றுகிறது. தமிழக காங்கிரஸ் தலைவர்களில் ஜெயலலிதாவுடன் இருபது வருடமாக தனிப்பட்ட பகை பாராட்டி வரும் ஒரே தலைவர் சிதம்பரம்தான். இப்போது இவருடன் திருநாவுக்கரசும் சேர்ந்துள்ளார். ஜெயலலிதாவை உயிருடன் பிடித்து விழுங்கச் சொன்னால் கூட தயக்கமின்றி செய்யுமளவுக்கு ஜெயலலிதாமீது வன்மம் கொண்டிருக்கும் இவ்விருவரும் காங்கிரஸுக்குள் ஒரே அணியில் உள்ளனர். போதாக்குறைக்கு கலைஞருடன் நட்புடன் இருப்பதும் குறிப்பிடத்தக்கது. சமீபத்தில் நடந்த திருநாவுக்கரசு மகன் திருமணத்தில் முதல் முறையாக கலைஞர் அவரை சந்தித்து வாழ்த்தினார். எனவே கூட்டணி கரை சேரும் என்பதே சிதம்பரம் கலைஞர் கூட்டணியின் நம்பிக்கை.



இதற்கு மேலதிகமாக பா.ம.க வையும் தனது கட்சிக் கூட்டணியில் சேர்க்க தி.மு.க விரும்புகிறது. பா.ம.கவுக்கு போக்கிடம் இல்லாததால் தி.மு.க தரும் தொகுதிகளை பெற்றுக்கொண்டு சம்மதிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளது. கடந்த 2006 சட்டசபை தேர்தலிலும் பா.ம.க இந்த அணியிலேயே இருந்து 30 இடங்கள் ஒதுக்கப்பட்டதில் 17 இடங்களை வென்றது. காங்கிரஸோ தனக்கு ஒதுக்கப்பட்ட 48 இடங்களில் 35 இடங்களை வென்று தீர்த்தது. இம் முறை காங்கிரஸுக்கு 60 பா.ம.கவுக்கு 30 தி.மு.காவுக்கு 140 என தொகுதிகளை ஒதுக்க கலைஞர் திட்டமிட்டுள்ளார். காங்கிரஸோ 70 - 80 தொகுதிகளைக் கேட்க ஆவலாய் உள்ளது. காங்கிரஸின் குழப்படிகாரத் தலைவர் இளங்கோவன் 100 தொகுதிகளை காங்கிரஸுக்கு தரும்படி கேட்டிருக்கிறார்.

காங்கிரஸுடன் பிசகினால் கம்யூனிட்டுகளை அரவணைக்க தி.மு.க தயாராகவே உள்ளது என்பதை கலைஞரின் சமீப கால உரைகள் காட்டுகின்றன.

காங்கிரஸ் ஒரு வேளை தி.மு.க அணியை விட்டுவிட்டு வெளியேறினாலும் அ.தி.மு.க வுடன் சேராதவரை தி.மு.கவுக்கு சந்தோசம்தான். காங்கிரஸ் வெளியேறினால் அத்துடன் கூட்டுச்சேர ஒரே ஒரு கட்சிதான் தயாராக உள்ளது. அதுதான் விஜயகாந்தின் தே.மு.கவாகும். இவ் இரு கட்சிகளும் இணைந்தாலும் மறுபுறம் தி.மு.க அணியே வெல்ல வாய்ப்புள்ளது. ஏனெனில் காங்கிரஸ் அ.தி.முகவுடன் இணையாதுவிடின் அதன் உச்சக்கட்ட இழப்பு அ.தி.மு.கவுக்கே. அ.தி.மு.க இம்முறை வெல்லாவிடின் ஜெயலலிதாவின் அரசியல் இருப்பு நிச்சயமாக கேள்விக்குறியாகும். மறுபுறம் தி.மு.க தோற்றாலோ



அக்கட்சியின் அழகிரி - ஸ்ராலின் உட்கட்சி சண்டை மிக தீவிரமடைய வாய்ப்புள்ளது. ஆக வரும் தேர்தல்கள் இரண்டு பிரதான திராவிடகட்சிகளில் ஏதாவது ஒன்றை விழுங்கும் தேர்தல்களாக இருக்குமென்பது நிச்சயம். அரசியல் அரங்கிலிருந்து ஒன்றில் அ.தி.மு.க அல்லது தி.மு.க முற்றாக ஒழிந்து போவதையே இவ்வாறு கூறுகிறோம். கிட்டத்தட்ட 35 ஆண்டுகளாக தமிழக அரசியலில் இவ்விரு திராவிடகட்சிகளிடையேதான் பிரதான போட்டி இருந்துள்ளது. எம்.ஜி.ஆர் மறைந்ததும், இனி தி.மு.க மட்டுமே என பலர் கருதினர். ஆனால் ஜெயலலிதாவின் வசீகரமும் அவருக்கு பிரதமர் ராஜீவ் வழங்கிய அமோக ஆதரவும் அ.தி.மு.க மறுஜென்மம் எடுக்க உதவின. ராஜீவ் செய்த வரலாற்றுத் தவறுகள் பலவற்றில் இதுவும் ஒன்று. அவரது துணைவி சோனியா கணவரின் பலதவறுகளை திருத்தி நடக்கத் தலைப்பட்டுள்ளார். அவ்வகையில் அ.தி.மு.க மறு அவதாரம் எடுக்க அவர் உதவமாட்டார் என்றே தெரிகிறது. அவ்வறாயின் அடுத்த தேர்தலின் பின் இரு திராவிடக் கட்சிகளில் ஒன்று நிரந்தரமாக



தமிழக அரசியலில் இருந்து மறைந்து போகலாம். அவ்வகையில் வரும் 2011 சட்டசபை தேர்தல்இதுவரை நடந்த 1967 - 1977 தேர்தல்கள் போல மிக முக்கியமானதாகும்.



# உயிர் வலிக்கும் கணங்கள்...!

## உறவுகளைக் காத்தவன் இன்று உணர்வில்லாமல்......

அவனுக்கு ஒரு அண்ணன், ஒரு அக்கா, ஒரு தம்பி. தந்தை குடிகாரன். அதனால் அண்ணன் புலிகள் அமைப்புடன் தன்னை இணைத்துக் கொண்டு பயிற்சியையும் முடித்துக் கொண்டான். வீட்டில் வறுமை வாட்டியது. எதுவும் செய்யமுடியாத நிலை. அதனால் தனது வயதை அதிகமாகச் சொல்லி போராளி ஆவோம் என, முடிவு செய்தான். அண்ணா வந்து வீட்டைப் பார்க்கட்டும் என்ற முடிவு செயற்படுத்தப்பட்டது. தனது வயதை கூட்டிச் சொல்லி போராளியாக இணைக்கப்பட்டான். அண்ணன் விடுவிக்கப்பட்டு குடும்பத்தை பார்க்கத்தொடங்கினான்.

சிறிது நாட்களில் அவன் களமுனையில் தலையில் காயப்பட்டு உடல் இயக்கமற்று வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டான். சுமார் 25 நாட்களின் பின்னர் அவனுக்கு நினைவு திரும்பியது. அதுவும் அரைகுறையாக. அவனின் வலது கண்பார்வை போய்விட்டது. வலது கை இயங்க மறுத்தது. வாய் கோணலாகி விட்டது. பேசுவது உளறலாக இருந்தது. கட்டுப்பாடற்று வாயினால் வீணீர் வழியத் தொடங்கியது.



இன்றும் இதேநிலை நீடிக்கின்றது. அவன் இப்போது மூளைவளர்ச்சி குன்றிய 17 வயதுக் குழந்தையாக நலன்புரி நிலையத்தில் வசிக்கின்றான்.

-இலக்கியன்-

# அனைவரையும் இழந்துவிட்டு பிள்ளைகளோடு தவிக்கிறேன்...

ஒவ்வொரு ஞாயிறும் என்னருகில் ஒருபெண், வழி பாட்டு நேரத்தில் தன்னை அறிந்தோ அறியாமலோ விசும்புவது வேதனையை உண்டாக்கும். கடவுளிடம் முறையிட்டு அழுப வளிடம் ஏன் அழுகிறீர்கள் எனக் கேட்கலாமா என, எனக்குள் ஒரு போராட்டம். என்னிலும் வயதில் மூத்த அந்தப் பெண்ணிடம் எப்படிக் கேட்பதென தர்ம சங்கடம். சில ஞாயிறு தினங்களை மெல்ல நகர்த்தினாலும் இந்தக் கிழமை என் மனச்சாட்சி என்னைக் உறுத்தியது.

குருவானவர், இது யேசுவின் உடல்... வாழ்வுதரும் அப்பம் என்கிறார். அதைப் பெற்றுக் கொள்கிறோம். வாழ்வுதரும் அப்பத்தைப் பெற்றுக் கொள்ளும் நான், பக்கத்தில் வாழ்வின் சுமையுடன் இருக்கும் அவளது உள்ளக் கிடக்கையை அறியாது இருப்பது தவறா, சரியா? மெல்ல விசாரித்தபோது வீட்டுக்கு என்னை அழைத்துச் சென்றார். இனி, அவரது கதையைப் படியுங்கள்.

வன்னி மண்ணில் ஒரு புகழ்பூத்த கிராமத்தில்தான் அவள் பிறந்தாள். அவளுக்கு ஒரு சகோதரனும், சகோதரியும். உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய பின்னர் திருமணப்பந்தம் தேடி வந்தது. காதல் என்ற சொல்லுக்கு கண்கள் இல்லைதானோ என்னவோ? தன்னிலும் பத்து வயது மூத்தவரான இயக்க உறுப்பினர் ஒருவரை அவள் திருமணம் செய்ய ஒப்புக் கொண்டாள். தாய்,சகோதரர், உறவுகளின் எதிர்ப்புக்களைச் சமாளித்து காதலில் வெற்றி கண்டாள். திருமண வாழ்வின் பயனாக அடுத்தடுத்து நான்கு பிள்ளைகளைப் பெற்றுக் கொண்டாள். வாழ்வு மலர்ப் படுக்கை என்று எண்ணியவளுக்கு இடப்பெயர்வு பல்வேறு அசௌகரியங்களைக்



கொடுத்தது. நீண்ட இடப்பெயர்வுச் சிரமங்களை அனுபவித்து இரட்டை வாய்ககால் கடற்கரையில் இப்படியொரு சம்பவம் நடக்குமென அவள் கனவிலும் நினைத்துப் பார்க்கவில்லை.

இரட்டைவாய்க்கால் கடற்பரப்பில் போலியான நீர்மூழ்கிக் கப்பலொன்றை கடற்புலிகள் உருவாக்கி விட்டிருந்தனர். அதனை வேவுவிமானம் வட்டமிட்டு

**வன்னியின் இறுதிக்கட்டப் போரிலே நடந்த துயரங்கள்...**

வட்டமிட்டு துல்லியமாகப் படம் பிடித்துக் கொண்டிருந்தது. வலைஞர் மடம் வரை இராணுவம் முன்னேறி வந்திருந்தது. எறிகணைகளும், கொத்துக் குண்டுகளும் மாறிமாறி விழுந்து கொண்டிருந்தன. நான்கு பிள்ளை களுடன் அவளது அம்மாவும் அவளும் இடம்பெயர்ந்த மக்களோடு மக்களாக ஓடிக் கொண்டிருந்தனர்.

கிபீர் விமானங்களின் இரைச் சலானது காதைக் கிழித்து ரணப் படுத்தியது. பிள்ளைகளையும் இழுத்துக்கொண்டு மணல்சொரியும் பதுங்கு குழி ஒன்றினுள் அவசரமாக இறங்கினாள். பலருக்கு அந்த பதுங்குகுழி போதாமையால் நெடுஞ் சாண் கிடையாக மண்மீது குப்புறப் படுத்தனர். அதில் அவளுடைய அம்மாவும் ஒருவர்.

மாறிமாறி போலி நீர்மூழ்கிக்கு 15க்கும் மேற்பட்ட குண்டுகளை கிபீர் விமானங்கள் போட்டுத்தள்ளின. அந்த நீர்மூழ்கிக்கும் குண்டுகள் சரியாகப் படாததினால் அது மிதந்து கொண்டே இருந்தது. சிலவேளை அமிழ்ந்து போகாதபடிக்கு அதனை உருவாக்கியிருந்தார்களோ தெரியாது.

குண்டுச் சிதறல்கள் நாலாபுறமும் சிதறி விழுந்தன. இடம்பெயர்ந்து இரட்டைவாய்க்கால் கரையோரம் வந்துகொண்டிருந்த பலரும் இறந்தும் காயமுற்றும் கதறிக்கொண்டிருந்தனர். அப்போது, அவளின் அம்மாவின் கழுத்துப் பகுதியை ஒரு எறிகணைச் சிதறல் வந்து துண்டாடியது. அம்மா வின் தலை 50மீற்றர் தூரத்தில் போய் விழுந்தது. இரட்டைவாய்க்காலில் பொன்னிற மண் செந்நிறமாகி அழுதது. ஓடிச்சென்று தூக்கிவந்து உடலோடு பொருத்தி வைத்து ஒப்பாரியிட்டு அழுதாள். பக்கத் தில் இருந்தவர்கள் அவசர அவசரமாக மண்கிளறி தாயைப் புதைத்தனர். பின் ஓட்டமும் நடையுமாக முள்ளிவாய்க்கால் வந்தாள். ஒரு நள்ளிரவு அவளது திறந்தவெளி பதுங்கு குழிக்கு அவளுடைய கணவன் வந்து சேர்ந்தான். மனைவி பிள்ளை களின் நிலைகண்டு கலங்கினான். '' இனி என்னப்பா செய்யப் போறியள்? '' என, கதறி அழுதவளுக்கு '' இனி என்னத்தை செய்ய? நீயும் பிள்ளைகளும் இராணுவக் கட்டப்பாட்டுக்குள்ள போங்கோ. பிள்ளைகள் கவனம். என்ர உயிர் பிரிஞ்சாலும், உங்கட நினவுகள் பிரியாது.... '' என கண்கலங்கி அழுதான். அவளுக்கு ஆறுதல் கூறி சனங்களோடு சனங்களாகி இராணுவக் கட்டுப் பாட்டுக்கு வர ஆயத்தமாகினர்.

ஆனாலும் விதியின் பிடியையும், வீரர்களின் மனநிலையையும் மாற்ற முடியாதல்லவா? அன்றிரவு நான்கு பிள்ளைகளையும் கட்டியணைத்து முத்தமிட்டான்.

'' அம்மாவுக்கு கரைச்சல் கொடுக்காமல் சொல்வழி கேட்டு நடக்கவேணும். '' என்று பல புத்திமதிகளைக் கூறிக் கொண்டிருந்தான். எறிகணைகள் விழுந்தபடி இருந்தன. பிள்ளைகள் நீட்டி நிமிர்ந்து உறங்கட்டும். நான் பக்கத்திலுள்ள வெறும் பதுங்கு குழிக்குள் படுத்திருக்கிறேன் என கூறி எழுந்து சென்றான்.

மறுநாள் விடிந்தது.அவன் விழிக்கவில்லை. சயனைற் உட்கொண்டு சாவைத் தழுவிக் கொண்டான். தாயை இழந்து, கணவனை இழந்து தனிமரமாகி இன்று... உற்றார் உறவினருக்குச் சுமையாகி வேதனையுடன் வாழ் கிறாள். கடவுளே! இது என்ன விளையாட்டய்யா?

-வன்னிமகள்-

எஸ்.கே. சஞ்சிகா.

# லண்டன் வலிக்கு வடக்கில் ஒத்தடம்...?

பனை மரத்திலே தேள் கொட்ட, தென்னை மரத்துக்கு நெறி போட்டகதையாக மாறியிருக்கிறது வடக்குவாழ் மக்களின் நிலைமை. லண்டனில் புலம்பெயர்தமிழர்களின் எதிர்ப்பு நடவடிக்கைகளின் எதிரொலியாக, ஒக்ஸ்போர்ட் யூனியனில் நிகழ்த்தவிருந்த உரை இரத்துச் செய்யப்பட்டதால் மிகமோசமான அவமானத்தைச் சுமந்தபடி ஜனாதிபதி மஹிந்த இலங்கைக்குத் திரும்பவேண்டியதாகி விட்டது.ஆனாலும் ஜனாதிபதி மிகப்பெரிய கண்டத்திலிருந்து தப்பித்து வந்துவிட்டார் என்றே பலரும்



சிலாகித்துக் கொள்கின்றனர்.அத்துடன் தம்முடைய அறிவுறுத்தலையும் மீறியே லண்டனுக்கு வந்து ,ஜனாதிபதி சிறுமைப்பட்டுச் சென்றதாக மஹிந்தவுக்கு நெருக்கமான லண்டன் வாழ் சிங்களப்புத்திஜீவிகள் கூறியிருக்கின்றனர். ஜனாதிபதியின் லண்டன் பயணத்தோல்விக்கும் . வடக்கு மக்கள், பனை, தென்னை, தேள் என்பவற்றுக்கும் என்ன தொடர்பு? என்று நீங்கள் கேட்கலாம். தொடர்பு இருக்கிறது.

தமக்கு எதிரான சம்பவங்கள் எங்கு இடம்பெற்றாலும் ,அதற்கு வடக்கு,கிழக்கு தமிழ் மக்களிடம் பழிதீர்த்துக் கொள்வது மிக நீண்டகாலமாகப் பேரினவாதிகள் கைக்கொள்ளும் உத்தி. தான் லண்டனில் வாங்கிய வலிக்கு, வடக்கு மக்களிடம் ஒத்தடம் தேடமுயற்சிக்கிறது அரசு. இதனால் தான் முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் என, வடக்குப்பகுதியில் வலிந்த- பலவந்தமான- ஏமாற்றுத்தனமான ஆர்ப்பாட்டங்களை அரசுதரப்பு அரங்கேற்றி வருகின்றது. ஓர் அரசு இவ்வளவுதூரம் மலிந்த செயல்களில் மக்களை ஈடுபடவைப்பது ,அரசு மீதான நம்பிக்கைகள் யாவற்றையும் பொய்த்துப் போகச் செய்துள்ளது. வன்னியில் மக்களை ஆர்ப்பாட்டத்துக்கு அழைத்த விதம் விநோதமானது கூடவே அவர்களின் வாழ்வுக்கான ஏக்கத்தை தமது சுயநல அரசியல் விளையாட்டுக்காக அரசும், படையினரும் பயன்படுத்திய விதம் படுகேவலமானது. ஆர்ப்பாட்டம் நடப்பதற்குமுதல் நாள் வன்னியில்- முல்லைத்தீவு, கிளிநொச்சி போன்ற பகுதிகளில் -மீள்குடியமர்ந்த மக்களுக்கு நிவாரணப் பொருள்கள் வழங்கப்போவதாகவும், வலை, மீன்பிடி உபகரணங்கள் வழங்கப்பட இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. பூச்சியப்புள்ளியில் விழிபிதுங்கிக் கொண்டிருக்கும் தமது வாழ்வைப் பழைய நிலைக்குக் கொண்டுசெல்ல ஏதாவது வழிகிடைக்குமா? என ஏங்கிக் கொண்டிருக்கும் மக்களுக்கு இந்த அறிவிப்பு தேனாகக் காதில் பாய்ந்தது.அடித்த நாள் எல்லா

வேலைகளையும் ஒருமூலையில் ஒதுக்கி வைத்து விட்டு, விடிந்ததும் விடியாததுமாக மாவட்ட செயலகங் களுக்கு முன்னால் திரண்டனர். ஆனால் அங்கு அவர்களுக்கு நிவாரணப் பொருள்களுக்குப் பதிலாக பிரிட்ட னுக்கு எதிரான சுலோகங்களைக் கொண்ட பதாகைகளும், ஜனாதிப தியின் உருவப்படம் பொறித்த 'டிஜிட் டல் பனர்களும்' கைகளில் திணிக் கப்பட்டன. ஓர் ஆர்ப்பாட்டத்துக்குத் தேவையான மக்கள் திரண்டதும் , ஜனாதிபதியை அவமதித்த பிரிட்டனுக்கு எதிரான கோஷங்களுடன் இராணுவத்தினரின் வழிகாட்டலில்

முல்லையிலும், கிளிநொச்சியிலும் ஜனநாயக ரீதியிலான மக்கள் போராட் டம்(?) வெடித்தது. இந்தப் போராட் டத்தைப் பார்த்த பலருக்கும் வயிறு வலிக்கும் அளவுக்கு சிரிப்பு. ஆர்ப்பாட் டத்தில் கலந்து கொண்ட பலரும் அது முடிந்த பின்னரும் கூட எதற்காக இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது என்பது புரியாமல் முழித்த கதையும் உண்டு. ஜனாதிபதியின் இரண்டாவது பதவிக்காலத்தையொட்டி பல்வேறு நிகழ்வுகள் வன்னியில் நடத்தப்பட்டிருந்தன. அந்த நிகழ்வுகளின் தொடர்ச்சியாகவே இவ்வாறான பேரணியும் நடைபெறுவதாகவே அவர்கள் எண்ணிக்கொண்டனராம். இந்த லட்சணத்தில்தான் புலம்பெயர் மக்களினதும், ''பிரிட்டனினதும் செயல்களைக் கண்டித்து மக்கள் இயல்பாகவே பொங்கி எழுந்து போராட்டங்களில் ஈடுபட்டனர்'' என்று அரசுத்தரப்பு கூறுகின்றது. அரசுக்கு அரசியல் ஆதாயம் கிடைப்பதற்காக சாதாரணமக்கள் தான் கால்கடுக்க, கொட்டும் மழையிலும் ஆர்ப்பாட்டம் என்ற பெயரில் அவலத்தைச் சந்திக்கவேண்டியிருந்தது. நிவாரணம் கிடைக்குமென்று வந்தவர்களுக்கு ஒரு சொட்டுத்தண்ணீர்



கூடக்கிடைக்கவில்லை. வன்னியில் அதுவும் மிக அண்மையில் மீள்குடியேற்றம் நடந்த இடங்களில் இவ்வாறான தன்னெழுச்சியான ஆர்ப்பாட்டங்கள் நடக்கும் போது யாழ்ப்பாணத்தவர்கள் மட்டும் சும்மாயிருந்தால் அரசின் மரியாதை என்னாவது? அதனால் அங்கஜன் இராமநாதனின் (ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட அமைப்பாளர்) தலைமையில் யாழ்ப்பாணத்திலும் ஒருகுறுகிய கால ஏற்பாட்டில் பிரிட்டனையும், புலம்பெயர்ந்தவர்களையும் கண்டித்து தடல்புடலாக ஆர்ப்பாட்டப்பேரணி நடத்திமுடிக்கப்பட்டுள்ளது. இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழ்மக்களை விடவும் இராணுவத்தினரும், சிவில் உடைதரித்த இராணுவப்புலனாய்வாளர்களும், அண்மையில் யாழ்ப்பாணத்தில் அடாத்தாகக் குடியேறியுள்ள சிங்கள மக்களுமே எண்ணிக்கையில் அதிகளவில் இருந்தனர்.பேரணியில் கலந்து கொண்டவர்களுக்கு வழங்கப்பட்ட கொடி, பதாகைகள், படங்கள் என்பனவெல்லாம் படைமுகாம்களில் இருந்தே தருவிக்கப்பட்டன. யாழ்.நகர சிவில் அதிகாரிகளே யாழ்.ஆர்ப்பாட்டத்துக்கான ஆயத்தப்பணிகளில் அக்கறையோடு முன்னின்று செயற்பட்டார்கள். எதற்காக அழைத்து வரப்பட்டிருகிறோம் என்பது தெரியாமலே பஸ்களில் படையினரால் ஏற்றி வரப்பட்டு.துரையப்பா விளையாட்டரங்கில் மக்கள் இறக்கி விடப்பட்டனர். பின்னர் நிலைமை இதுதானென்று தெரிந்ததும் அங்கிருந்து 'எஸ்கேப்' ஆன மக்களும் நிறையப்பேர்.

பிரிட்டனில் ஜனாதிபதி சந்தித்த அவமானத்துக்கு தென்னிலங்கையில் விமல் வீரவன்ஸ தலைமையில் ஒரேயொரு ஆர்ப்பாட்டத்தோடு மட்டுப்படுத்திக் கொண்டு, வடக்குப்பகுதியில் இத்தகைய பேரணிகளைப் பரவலாக நடத்தியமைக்கும் ஒரு காரணம் இருக்கவே செய்கின்றது. புலம்பெயர் தமிழர்களில் நூற்றுக்குத் தொண்ணூறு வீதமானோர் வடக்குப்பகுதியைச் சேர்ந்தவர்களே. எனவே மஹிந்தவுக்கு லண்டனில் மிகப்பெரும் அவமரியாதையைப் பரிசளித்தவர்களின் உறவினர்களைக் கொண்டே ஜனாதிபதிக்கு ஆதரவான ஆர்ப்பாட்டங்களை நடத்துவதன் மூலம் புலம்பெயரிகளின் ஆர்ப்பாட்டங்கள் எல்லாமே உண்மைத்தன்மையற்றவை என்ற தோற்றப்பாட்டை நிலைநிறுத்தலாம் என அரசு நம்புகிறது. அவ்வாறான நிலை ஒன்றின் மூலமே மஹிந்த பட்ட அவமானத்தைத் துடைக்க முடியும் எனவும் அவர்கள் எண்ணுகின்றனர். அத்தோடு புலம் பெயரிகளின் உறவுகளை ஆர்ப்பாட்டம் என்ற பேரில் கட்டாயப்படுத்தி அலைக்கழிப்பதனூடாகப் புலம்பெயரிகளுக்கு மனதளவிலான



தாக்கத்தையும் ஏற்படுத்தமுடியும் என்பது அரசின் கணிப்பாக இருக்கக்கூடும். அத்துடன் '' உங்களின் உறவுகள் எல்லோரும் எங்களின் பிடியில்தான் இருக்கிறார்கள். நீங்கள் இனியும் வாலாட்டினால் பாதிக்கப்படுவது உங்கள் உறவுகள்தான்'' என்ற செய்தியையும் புலம்பெயரிகளுக்குச் சொல்ல அரசு முற்படுகின்றதோ எனவும் தோன்றுகின்றது.

இதைவிட லண்டனுக்குச் சென்று விட்டு வந்த கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்தின ,கட்டுநாயக்க விமானநிலையத்தில் அரசியல்வாதி ஒருவருக்குச் சார்பானவர்களால் - விமானநிலையத்தில் பணிபுரியும் ஊழியர்களால்- தாக்கப்பட்டுள்ளார். இது லண்டன்வாழ் தமிழர்களிடையே பெரும் பீதிநிலையை உண்டாக்கியிருக்கிறது. ஆர்ப்பாட்டத்துக்குப் பின்புலமாக இருந்தார்,புலிகளின் மாவீரர்தின நிகழ்வில் கலந்து கொண்டார் என்று கூறியே கருணாரத்ன மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ,அரசியல் கட்சி ஒன்றின் பின்புலம் கொண்ட கருணாரத்தின மீதே இவ்வளவு குரோதத்துடன் அரச ஆதரவாளர்கள் தாக்குதலை நடத்தியிருப்பதால் , லண்டன் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட, எவ்வித அரசியல் பலமுமில்லாத தாம் இலங்கை செல்லும் போது மிகக்கடுமையான விளைவுகளைச் சந்திக்க வேண்டிவரலாம் என லண்டன் தமிழர்கள் எண்ணுகின்றனர். 'ஜனநாயகம் பாய்ந்தோடும்' நாட்டில் இப்படியான அசம்பாவிதங்களை அவர்கள் எதிர்பார்ப்பதிலும் தவறில்லையே.

ஒக்ஸ்போர்ட் யூனியனில் ஜனாதிபதியின் உரை ரத்தானதால் லண்டன் மீது மட்டுமல்லாது , புலம்பெயரிகளின் ஆர்ப்பாட்டத்துக்குப் பயந்து உரை நிகழ்வை இடைநிறுத்திய ஒக்ஸ்போர்ட் நிர்வாகத்தின் மீதும் மஹிந்த தரப்பு கடும் கோபத்தில் இருப்பதாகக் கதைகள் கசிகின்றன. இந்நிலையில் என்னைச் சந்தித்த நண்பர் ஒருவர் இப்படிச்சொன்னார்-

''இலங்கையில் கெதியில ஒக்ஸ்போர்ட் கார், ஒக்ஸ்போர்ட் டிக்ஷனரி, ஒக்ஸ்போர்ட் கொம்பாஸ் இதுகளுக்கெல்லாம் தடை வரப்போகுதாம்!''

**-பிரமன் -**

யார் கண்டது? ஜனாதிபதி சூடுகண்ட வேகத்தில் அவர் கூறியதெல்லாம் நடந்தாலும் ஆச்சரியமில்லைத்தானே!

# நடுக்கத்தில் அமெரிக்கா

விக்கிலீக்ஸ் இன்று அமெரிக்காவை நடுங்க வைத்துக் கொண்டிருக்கும் இணையதளம். ஏராளமான அமெரிக்க ராணுவ, அரசியல் ரகசியங்களை வெளியிட்டு அமெரிக்காவை நிலைகுலைய வைத்துள்ளது.

விக்கிலீக்ஸின் நிறுவனராகக் கருதப்படும் ஜூலியன் அசாங்கே தற்போது பிரிட்டனில் கைதாகி உள்ளார். நேற்றுவரை உலகத்தில் அபாயகரமான மனிதனாக இருந்த பின்லாடனைப் பின்னுக்குத் தள்ளி விட்டு, மிகவும் அபாயகரமான ஆளாக அசாங்கே அமெரிக்காவால் அறிவிக்கப்பட்டுள்ளார்.



ஆரம்பம் இதுதான். ஆப்கானிஸ்தான் போர் மற்றும் பாகிஸ்தான் விவகாரங்களில் அமெரிக்கா என்னென்ன செய்துள்ளது என்பது சம்பந்தமான 9லட்சம் பக்கங்கள் கொண்ட அமெரிக்க இராணுவத்தின் ரகசிய ஆவணங்களை 2009 ஜூலை 25 ஆம் திகதி வெளியிட்டு பெரிய பரபரப்பை ஏற்படுத்தியது விக்கிலீக்ஸ். அமெரிக்கா செய்த அட்டூழியங்கள் அத்தனையும் வெளியில் வந்தது அமெரிக்காவுக்கு அவமானமாகி-விட்டது. உலகிலேயே மிகவும் பாதுகாக்கப்பட்ட இடமான அமெரிக்க இராணுவத் தலைமையகமான பெண்டகனில் இருந்து இந்த ராணுவ ரகசிய ஆவணங்களை யார், எப்படி எடுத்தார்கள் என்பதை எண்ணி உலகமே அதிர்ச்சியடைந்தது.

இப்போது விக்கிலீக்ஸ் மீண்டும் தனது பலத்தைக் காட்டியிருக்கிறது. அமெரிக்காவின் பரம ரகசிய ஆவணங்களை வெளியிட்டிருக்கிறது.

அதில்,

அரபு நாடுகளின் தலைவர்கள் ஈரான் மீது தாக்குதல் நடத்த அமெரிக்காவைத் தூண்டியது, ஐ.நா. தலைவர்களை அமெரிக்கா உளவு பார்த்தது, ஈராக் மீது அமெரிக்கா வேண்டுமென்றே ஆக்கிரமிப்புச் செய்தது, பிரான்ஸ் தொடங்கி ரஷ்யா வரை பல்வேறு நாட்டுத் தலைவர்களை அமெரிக்கத் தலைவர்கள் பட்டப்பெயர் சூட்டி ஏளனம் செய்தது, இலங்கையில் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதற்கு ராஜபக்ஷவும் அவரது சகோதரர்களுமே பொறுப்பு என அமெரிக்கத் தூதுவர் எழுதிய கடிதம்... இப்படி பல அதிரடி ரகசியங்கள் வெளிவந்திருக்கின்றன.

இந்த ஆவணங்களில் இந்தியா சம்பந்தப்பட்டவையும் பல உள்ளன. வெளியான 2,50,000 ஆவணங்களில் டெல்லியில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தின் ஆவணங்கள் மட்டும் 3000 எனச் சொல்லப்படுகிறது. ஐ.நா.வில் நிரந்தர உறுப்பினர் பதவியைப் பெற இந்தியா தீவிரமாக இருக்கிறது. இதற்காக ஐ.நா.வில் என்னவிதமான முயற்சிகளை இந்தியா மேற்கொள்கிறது என்பதை உளவு பார்க்குமாறு தனது தூதர்களை அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் கேட்டுக் கொண்டிருக்கிறார். அந்த ஆதாரங்கள் இப்போது விக்கிலீக்ஸ் தளத்தில் இருக்கின்றன.

இப்படி வெளியே சிரித்த முகத்துடன் நட்புப் பாராட்டுவது; உள்ளே வேவு பார்ப்பது என ஒவ்வொரு நாட்டுடனும் இரட்டை வேடம் போட்டு அமெரிக்கா செயல்பட்டு வந்த பச்சோந்தித்தனத்தை ஆதாரங்களுடன் அம்பலமாக்கி விட்டது விக்கிலீக்ஸ்.

யார் இந்த விக்கிலீக்ஸை நடத்துகிறார்கள்? இவ்வளவு தைரியம் அவர்களுக்கு எப்படி வந்தது? என்பதுதான் இன்று உலகம் முழுக்க அதிகம் கேட்கப்படும் கேள்வி.

விக்கிலீக்ஸ் இணையதளம், ஜூலியன் அசாங்கே என்ற ஆஸ்திரேலியரால் 2006 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது எனச் சொல்லப்படுகிறது. ஆனால், அவர் தனி நபர் இல்லை என்றும், அவருடன் ஆயிரக்-கணக்கான கம்ப்யூட்டர் நிபுணத்துவம் உள்ள தன்னார்வ தொண்டர்கள் உள்ளார்கள் என்றும், உலகம் முழுவதும் பரவியுள்ள இவர்கள்

## "கறுப்புப் பண லிஸ்ட், வேண்டாம்" - சொன்னது இந்தியா

அனைவரும் இணைந்துதான் இந்தத் தளத்தை நடத்துகிறார்கள் என்றும் சொல்லப்படுகிறது. இவர்கள்தான் தங்கள் திறமையினால் அமெரிக்க இராணுவ ரகசிய கம்ப்யூட்டர்களுக்குள் நுழைந்து ரகசியங்களை வெளியே எடுக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. இதற்கு அந்தத் துறைகளில் பணிபுரிபவர்களும் உடந்தையாக இருக்கிறார்கள். கிட்டத்தட்ட விஜயகாந்தின் ரமணா படம் மாதிரிதான்.

நோர்வே, ஸ்வீடன், ஐஸ்லாந்து ஆகிய நாடுகளில் தான் விக்கிலீக்ஸின் சர்வர்கள் இயக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அவற்றைக் கண்டு-பிடித்து முடக்கினாலும் விக்கிலீக்ஸை செயலிழக்கச் செய்யமுடியாது என்கிறார்கள். ஏனெனில், அந்த சர்வர்களுக்கு டூப்ளிகேட் சர்வர்கள் வைத்திருக்கிறார்களாம்.

சரி, கம்ப்யூட்டர்களிலிருந்து இப்படி ரகசியங்களை திருட முடியுமா?

முடியும் என்கிறார்கள்.

உலகின் பெரும்பாலான கம்ப்யூட்டர்களும் இண்டர்நெட்டால் இணைக்கப்பட்டுள்ள இன்றைய இணையப் புரட்சியில், ரகசியம் என்பதே கிடையாது என்பதுதான் கணினி வல்லுநர்களின் கருத்து. எப்போது ஒரு தகவல், இணையத்தில் ஏற்றப்படுகிறதோ அப்போதே அது ஒரு பொதுச் சொத்தாகி விடுகிறது. கம்ப்யூட்டர் தொழில்நுட்பம் தெரிந்த திறமையுள்ள யார் வேண்டுமானாலும் அதைத் திருடி விடலாம் என்பதே யதார்த்தம். இணையத்தில் ஏற்றப்பட்ட தகவல்களை மட்டுமே திருட முடியும் என்பதில்லை, இணைய இணைப்பு இல்லாத கம்ப்யூட்டரில் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் தகவல்களையும் திருட முடியும் என்ற அதிர்ச்சி செய்தியையும் சொல்கிறார்கள்.

கிறிஸ்டோபர் மெயர் என்ற அமெரிக்காவுக்கான முன்னாள் இங்கிலாந்து தூதர்; இனிமேல் ஈ-மெயில் கருத்துப் பரிமாற்றங்களின் பாதுகாப்பு பற்றி யோசிக்க வேண்டியுள்ளது. அந்தக் காலம் போல் காகிதத்தில் பரிமாற்றங்கள் செய்திருந்தால் இப்படி மொத்தமாக ஆவணங்களை திருடியிருக்க முடியாது என்று கூறியுள்ளார்.

விக்கிலீக்ஸ் ஆவணக் கசிவால் அமெரிக்கா மட்டுமல்ல ரஷ்யா, சீனா உட்பட வேறுபல நாடுகளும் பெரும் நடுக்கத்தில் உள்ளன. எல்லா நாடுகளுமே அண்டர்-கிரவுண்ட் வேலை செய்பவைதானே. அதனால் முகமூடி கலைந்து விடுமோ என்ற பயம்.

அசாங்கேயை தற்போது பிடித்து விட்டாலும் பல நூறு பேர் பங்கு பெற்றுள்ள விக்கிலீக்ஸ் இயக்கத்தை அடக்க முடியுமா என்று தெரியவில்லை..

விக்கிலீக்ஸ் போலவே, மூடி மறைக்கப்பட்ட ஆவணங்களைத் திருடி, உண்மைகளை வெளியிடும் வேறு பல ரகசிய அமைப்புகளும் உள்ளன. இரண்டு வருடங்களுக்கு முன்பு அனைத்து ஐரோப்பிய வருமான வரித்துறை அலுவலகங்களுக்கும் ஒரு மின்னஞ்சல் வந்தது. சுவிஸ் நாட்டிலுள்ள ஒரு தனியார் வங்கியின் வாடிக்கையாளர்கள் பட்டியல்களுடன் அந்த வங்கியின் கம்ப்யூட்டர் இணைப்புக்கான பாஸ்வேர்டையும்



தருகிறோம். அதிலிருந்து அந்த வங்கியில் யார், யார் கறுப்புப் பணத்தை சேமித்து வைத்திருக்கிறார்கள் என்ற தகவலைத் தெரிந்துகொள்ள முடியும் என்றது அந்த மின்னஞ்சல். கம்ப்யூட்டர் என்ஜினியர்களான ஹெர்பே ஃபால்சியானி, மற்றும் ஜியோர்ஜினா மிக்கைல் இருந்து வந்தவை அவை. இருவரும் எச்.எஸ்.பி.சி வங்கிப் பணியாளர்கள்.

இருவரும் அந்த வங்கியில் ரகசியமாகப் பாதுகாக்கப்பட்ட ஆயிரக் கணக்கான ஆவணங்களுடன், சுவிஸ் நாட்டில் இருந்து ரகசியமாக எல்லை தாண்டி ஐரோப்பிய சட்ட அமைப்புகளிடம் அவற்றை ஒப்படைத்தார்கள். எங்கள் வங்கியின் ரகசியப் பாதுகாப்பு ஒப்பந்தத்தை மீறி விட்டார்கள், வாடிக்கையாளர்களின் தகவல்களை வெளியில் அளித்து விட்டார்கள் என்று அந்த இரு ஊழியர்கள் மீதும் வங்கி வழக்குத் தொடர்ந்துள்ளது. என்றாலும், அந்த ஆவணங்கள் மூலம் பிரான்ஸ் அரசாங்கம் வரி ஏய்ப்பு செய்தவர்களைத் துரத்தி அவர்களின் கள்ளக் கணக்குகளை முடக்கும் வேலையில் மும்முரமாக ஈடுபட்டுள்ளது.

அதன்பிறகு, இதேபோன்று ஜெர்மனி அரசாங்கம் ஒரு சுவிஸ் வங்கி ஊழியரிடமிருந்து அந்த வங்கியின் வாடிக்கையாளர் தகவல்களை ஐம்பத்து மூன்று லட்சம் டாலர்கள் விலை கொடுத்து வாங்கியது. இப்படி கைமாறிய இந்த ஆவணங்களில் உலகின் பிற நாடுகளைச் சேர்ந்தவர்களின் கணக்கு விவரங்களும் உள்ளன. அதில், மிக அதிகமான கள்ளப் பணம் சேமிப்பில் வைத்திருந்த நாடுகளிலேயே முதல் இடம் இந்தியாவுக்குத்தான். உடனே ஜெர்மனி அரசாங்கம் இந்திய அரசுக்கு ஒரு கடிதம் அனுப்பியது. சுவிஸ் வங்கியில் பல பில்லியன் டொலர்களுடன் கள்ளக் கணக்கு வைத்திருக்கும் இந்தியர்களின் பட்டியல் எங்களுக்குக் கிடைத்துள்ளது. நீங்கள் முறையாகக் கேட்டால் நாங்கள் அனுப்பி வைப்போம் என்றது.

உடனே இந்திய அரசாங்கம் என்ன செய்தது தெரியுமா?

இந்தியத் தூதுவரை அனுப்பி, ஜெர்மனி அரசாங்கத்தைக் கெஞ்சிக் கூத்தாடி, தயவுசெய்து அந்த ஆவணங்களை எங்கும் வெளியிட வேண்டாம். உங்களிடமே பத்திரமாக் வைத்துக்கொண்டு ரகசியத்தைக் காப்பாற்றுங்கள் என்றார்களாம்.

இது எப்படி இருக்கு?

**தளவாய் சுந்தரம்**

# உலகின் உயரமான காதல் ஜோடி



எல்லோரும் இவர்கள் இருவரையும் சேர்த்துப் பேச ஆரம்பித்து விட்டார்கள். 'சரியான ஜோடி சேர்ந்துவிட்டது' என்று கிசுகிசுத்துக் கொண்டனர். மற்றவர்களின் இந்தப் பேச்சு தான் அவர்களை அறிமுகம் செய்தது. அப்போது தான் இருவரும் பேசிக் கொண்டனர்.

முதல் சந்திப்புப் பற்றி வேய்னே கூறும்போது, ''எங்களுக்கிடையே முதல் பார்வையிலேயே காதல் மலர்ந்தது. அவள் என் அருகே வந்து பேசும்போது சின்னப் பெண்ணாகத்தான் இருந்தாள்'' என்கிறார்.

''எங்கள் முதல் சந்திப்பில் அவர் என் கை, கால் அழகைப் பற்றி வியந்து பேசினார். நான் இரண்டாவது சந்திப்பின்போதுதான் அவர் நல்லவர் என்பதைத் தீர்மானித்தேன்'' என்கிறார் கால்குஸ்ட்.

படத்தில் இருப்பவர்கள்தான் உலகின் உயரமான தம்பதியர். கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் சமீபத்தில் இந்த ஜோடியின் பெயர் சேர்க்கப்பட்டது. இவர்கள் பெயர்: வேய்னே (வயது 57) - லாரே கால்குஸ்ட் (வயது 46). அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் உள்ள ஸ்டாக்கான் நகரில் வசிக்கிறார்கள்.

உயரம்தான் தங்களுக்கு இடையே காதல் மலரக் காரணமாக இருந்தது என்கிறார்கள். கின்னஸ் சாதனை நிகழ்ச்சிக்கு இந்த ஜோடி திருமண உடையில் வந்து அசத்தினார்கள்.

இந்த ஜோடியின் மொத்த உயரம் 13 அடி 4 அங்குலமாகும். வேய்னே 6 அடி 10.5 அங்குலம் உயரமுடையவர். கால்குஸ்ட் 6 அடி 5.95 அங்குல உயரமாக இருக்கிறார்.

வேய்னே டெலிபோன் நிறுவனத்தில் பணிபுரிகிறார். கால்குஸ்ட் விவசாயம் செய்தார். கல்லூரியில் கூடைப்பந்து வீரராக இருந்தவர். உயரமாக இருந்ததால் இவர்கள் இருவருக்குமே திருமணம் தள்ளிப்போய்கொண்டே சென்றது. காலம்தான் இந்த ஜோடியைச் சந்திக்க வைத்திருக்கிறது.

2003ஆம் ஆண்டு வேய்னேவும், கால்குஸ்ட் டும் கிறிஸ்தவ ஆலயம் ஒன்றில் தற்செயலாகச் சந்தித்துக் கொண்டனர். அங்கு இருந்தவர்களில் இவர்கள் இருவரும்தான் மிக உயரமானவர்கள். எனவே மற்றவர்கள்

''நாங்கள் எங்கே நடந்து சென்றாலும் எல்லோரும் எங்களை உற்றுப் பார்க்காமல் செல்லமாட்டார்கள். சனக்கூட்டத்தில் எங்களைக் கண்டுபிடிப்பது மிகவும் சுலபம்'' என்று சிரித்துக்கொள்கிறார்கள் இருவரும்.

நாங்கள் திருமணம் செய்து 7 ஆண்டு கள் ஆகின்றன. இருந்தாலும் இப்போது தான் கின்னஸ் சாதனைக்கு விண்ணப் பித்தோம் என்கிறது இந்த ஜோடி.

''முதலில் கின்னஸ் சாதனைக்கு விண்ணப்பிக்கத் தயக்கமாக இருந்தது. ஏற்கனவே கின்னஸில் இடம்பிடித்திருந்த ஜோடி 13 அடி 3 அங்குல உயரத்தில் இருந்தது. இங்கிலாந்தைச் சேர்ந்த அவர்களின் பெயர் கெலீ - பால்டான். நாங்கள். அவர்களைவிட ஒரு அங்குலமே உயரம் அதிகமாக இருந்ததால் அதிகாரிகள் அளக்கும்போது வெற்றி கிடைக்குமா? என்பது சந்தேகமாக இருந்தது. இருந்தாலும் என் மனைவிதான் எனக்கு நம்பிக்கையுடன் விண்ணப்பிக்கச் சொன்னாள். ஒரு அங்குல வித்தியாசத்தில் உலகின் உயரமான ஜோடியாகத் தேர்வுசெய்யப்பட்டது மகிழ்ச்சியாக இருக்கிறது'' என்று பூரிக்கிறார் வேய்னே.

# பறக்கும் ஸ்டார் ஹோட்டல்




இது உலகத்தின் முதல் பறக்கும் ஸ்டார் ஹோட்டல். இது சோவியத் நாட்டில் தயாரிக்கப்பட்ட உலகின் மிகப் பெரிய ஹெலிக்கொப்டரை மாற்றி உருவாக்கப்பட்டது.

உலகிலேயே மிகப் பெரிய ஹெலிக் கொப்டரான சோவியத் தாயாரிப்பான Mil V-12 என்ற ஹெலிக்கொப்டரை ஐந்து ஆண்டு கடின உழைப்பால் ஹோட்டலாக மாற்றியமைத்தனர்.

இது பார்ப்பதற்கு டபிள் டெக்கர் பஸ் போன்று தோற்றமளிக்கும் இதனுடைய நீளம் 135 அடி உயரம் 45 அடியைக் கொண்டது. 105 ஆயிரம் கிலோ நிறையை இந்தக் ஹெலிக்கொப்டரால் தூக்க முடியும் இது மணிக்கு 158 மைல் வேகத்தில் பறக்கக் கூடியது. இதில் 18 வசதியான அறைகள் உள்ளன. இதில் மினி மதுபானக்கடைகள், வயர்லஸ் இன்டர்நெட் இணைப்புகளும் உள்ளது.


# தத்தளிக்கும் தாய்லாந்துப் பெண்கள்





தாய்லாந்து நாட்டைச் சேர்ந்த பெண்கள், மசாஜ் தொழிலாளர்களாக சென்னைக்கு வந்து, பல சிக்கல்களுக்கு ஆளாகியிருக்கிறார்கள். ''நாங்கள் முறையா மசாஜ் பயிற்சி முடிச்சவங்க. சென்னையில் உள்ள மசாஜ் சென்டர்களுக்கு எங்களை அழைத்தபோது, செக்ஸ் விஷயங்களுக்கு பயன்படுத்தக் கூடாது என்று உறுதியாகச் சொன்னோம். காரணம், சென்னையில் உள்ள பல மசாஜ் சென்டர்களில் பெண்களைப் பாலியல் தொழிலாளியாகத்தான் பயன்படுத்துகிறார்கள். எந்தப் பிரச்சினையும் இருக்காது என்று உறுதியாகக்கூறி அழைத்துக்கொண்டு வந்தவர்கள் கொஞ்ச நாட்களிலேயே வேலையைக்காட்ட ஆரம்பித்துவிட்டார்கள்'' - என்கிறார்கள் இப் பெண்கள்.

பிரபல தொழிலதிபரான ரமேஷ், அவருடைய நண்பர் யுவராணியின் கணவர் ரவீந்திரன் மற்றும் இம்மானுவேல் ஆகிய மூவர் மீதும் தாய்லாந்துப் பெண்கள் முறைப்பாடு கொடுத்துள்ளனர். சம்பந்தப்பட்டவர்களை அழைத்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.





''எதிரி சரியான காட்டுமிராண்டி மந்திரியாரே...''
''எப்படிச் சொல்லுகிறீர்கள் மன்னா?''
''காலில் விழுந்த பின்னரும் போட்டு மிதிமிதின்னு மிதிச்சானே!''



''கொள்ளை அடிச்சதை இரண்டுபேரும் பங்கு போடும்போது பொலிஸ் பார்த்துவிட்டது...''
''அப்புறம் என்ன நடந்தது...?''
''மூன்று பங்கா போட்டோம்.''



''இந்தச் சின்ன வயதில் சாமியாராயிட்டீங்களே... ஏன்?''
''வயதான பின்னர் சாமியாரானால் ஒரு நடிகை கூட ஆசீர்வாதம் வாங்க வரமாட்டாங்களே!''

# நடிகை

சிறுகதை

இராமசாமி ரமேஷ்

அந்தப் பெரிய நட்சத்திர ஹோட்டலில் வாடிக்கையாளர்கள் கூட்டம் அதிகமாகவே இருந்தது. பணியாளர்கள் மும்முரமாக வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்க, விதவிதமான உணவுகள் அங்குமிங்கும் ருசி பார்க்கப்பட்டுக் கொண்டிருந்தன. மேற்கத்திய மெல்லிசை செவிகளை ஊடுருவி இன்பம் சேர்த்துக்கொண்டிந்தது.

இந்நேரம்....

இரு ரோஜாச் செடிளில் பூக்கள் நிறைந்து கிடக்க, எதிரெதிரே இருக்கை களில் வந்தனாவும் அவளது அன்புக்குரியவனான ப்ரவீண் குமாரும் அமர்ந்திருந்தார்கள். சிப்பந்தி கொண்டுவந்து வைத்து விட்டுப் போன சிலோண்டா தேநீரை உறிஞ்சியபடி, வந்தனா அடிக்கடி வாசலைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

" ஹேய் வந்தனா! நீ கூப்பிட்டதுக்காகத்தான் இருந்த வேலையையும் விட்டுட்டு வந்தேன். டைரக்டர் வருவார் வருவாரென்று காத்திருந்து ...அரைமணி நேரமாச்சு. ப்ளீஸ்! போன் போட்டுக் கேளும்மா..." கெஞ்சலோடு கேட்டான் ப்ரவீண்.

" ப்ரவீண்! சீக்கிரம் வர்றதாகத்தான்...சொன்னார். எத்தனை தடவை போன் பண்றது? எனக்கு நோ ப்ராப்ளம். அர்ஜண்டா... வேலை இருந்தா நீங்க போங்க... நான் டிஸ்கஷனை முடிச்சிட்டு சீக்கிரம் வீட்டுக்குப் போய்டுறேன்..."

" சொரிம்மா வந்தனா... அவசரமா ஒருத்தரை மீட் பண்ணவேண்டியிருக்கு. நான் கிளம்புறேன். நீ... சீக்கிரமா வந்திடு. ஓ.கே. பாய்...."ப்ரவீண்குமார் புறப்பட்டுப் போனான். வந்தனா பொழுது போக வேண்டும் என்பதற்காக தன்னைச் சுற்றியிருப்பவர்களில் பார்வையைச் சுழலவிட்டாள்.

வந்தனா!


இன்று தமிழ்சினிமாவில் உச்சத்திலிருக்கும் நடிகை. எவ்வளவுதான் கோடிகோடியாய் பணம் கொடுத்தாலும் இதுவரை ஆபாசமாக நடிக்காதவள். அறிமுகமான முதற்படத்திலேயே புகழின் உச்சியைத் தொட்டு நிற்பவள். எத்தனையோ இயக்குனர்கள், தயாரிப்பாளர்கள் முயன்றுதான் பார்த்து விட்டனர். இவள் மசியவேயில்லை.

" என்னால் தொடர்ந்தும் கவர்ச்சி காட்டாமல் நடிக்க முடியும். அப்படி கவர்ச்சிதான் காட்டி நடிக்க வேண்டுமென்றால் நான் நடிப்புத் துறையிலிருந்தே விலகிவிடுவேன்...."

இப்படித்தான் பலருக்கு கூறுவாள் வந்தனா. கவர்ச்சி விடயத்தில் கொஞ்சமும் விட்டுக் கொடுக்கவில்லை.

ஒரு பெண் நடிகையாவதிற்கு எத்தனை பிரச்சினைகளைக் கடந்து வரவேண்டும். திறமையை நிரூபிக்க வேண்டுமெனில், அப்பப்பா... எத்தனை கஷ்டங்கள்! வந்தனாவும் இவ்விடயத்தில் விதிவிலக்கானவள் இல்லை. அவளும் இப்படி ஏராளமான தடைகளைத் தாண்டி வந்தவள் தான்.

சினிமாவிலும் சரி, பிற தொழில் துறைகளிலும் சரி சிபார்சு என்றிருந்தால்தான் எளிதாக அந்துறைக்குள் நுழைய முடியும். அப்படி ஏதுமில்லாதவர்கள் வருவது அபூர்வம்தான். அப்படி வந்தாலும், சினிமாவைப் பொறுத்தமட்டில் " உடற்பசியைத் தீர்த்தால்தான் என்படத்தில் வாய்ப்புத் தருவேன் " என பலருண்டு. இவர்களிடமெல்லாம் தப்பித்து மீண்டுவருவது முடியாத காரியம். ஆனாலும், வந்தனா இப்படியானவர்களிடமெல்லாம் வெட்டியோடி தப்பித்து வந்துவிட்டாள். மனித மிருகங்களிடம் இவள் சிக்கிக்கொள்ளவில்லை.



பிரபலமான இயக்குனர் ஒருவர் தனது புதுப்படம் ஒன்றில் நடிப்பதற்காக இவளிடம் பேசினார். " என் படத்தில் உங்களை நடிக்க வைக்கலாமென்று இருக்கிறேன். அதனால... ருடே ஈவ்னிங் ஹோட்டல் நட்சத்ராவுக்கு வந்திடுங்க..." என்று, இன்றுகாலை இவளுக்கு அறிவித்திருந்தார். அதன் காரணமாகவே ஹோட்டலில் காத்திருக்கிறாள் வந்தனா.

அப்போது அவளின் மொபைல் சிணுங்கியது. " மிஸ் வந்தனா... நான் வந்துட்டேன். நீங்க உடனே ரூம் நம்பர் ருவண்டி த்ரீக்கு வந்திடுங்க..." இயக்குனர் அழகப்பன் தான் அழைத்தார். போனை ஒவ் செய்துவிட்டு கொஞ்சம் கோபத்தோடே நடந்தாள் வந்தனா.

இடதுபுறத்தில் எழுதப்பட்டிருந்த எண்களைக் கண்டதும், அவளது நடந்த பாதங்கள் நகராமல் நின்றன. ரூம் நம்பர் ருவண்டி த்ரீ!

"எக்ஸ்கியூஸ்மி... உள்ளே வரலாமா...?" கதவைத் தட்டியபடி கேட்டாள்.

"வாங்க... வாங்க வந்தனா..."

நரைமுடிகளை ஒளிப்பதற்காக கடும் பிரயத்தனப்பட்டிருக்கிறார் என்பது பார்க்கும்போதே வந்தனாவுக்குப் புரிந்தது. பற்பசைக்கு நடிக்கும் விளம்பர நடிகரைப் போல புன்சிரிப்போடு வரவேற்றார். " சேர்... நீங்க..." என்றவளை இடைமறித்தவர், "நான்தான் இந்தப்படத்தில் ரிஸ்க் எடுத்து... உங்களை புக் பண்ணினேன். ஹீரோ நடிகர் வேறு ஒருவரைத்தான் எதிர்பார்த்தார். நான் நடித்தால் நீங்கதான் நடிக்கணும்னு பிடிவாதமா நின்னேன். கடைசியா... புரொடியூசரும் சம்மதிச்சுட்டார்"

"அப்படியா சேர்...? தாங்ஸ்..."

" மிஸ் வந்தனா... இந்தப்படம் இன்னும் சக்சஸ் புல்லா வரணும் என்றால்... நீங்கதான் அதிகமா ஒத்துழைக்கணும்..." வளைந்து நெளிந்து பேசிமுடித்தார் இயக்குனர். அவரது பேச்சுத்தொனி எங்கோ செல்வதை வந்தனா கவனிக்கத் தவறவில்லை.

" எனக்குத் தரப்படும் கேரக்டரை... என்னால நல்லா பண்ணமுடியும் சேர். முடிஞ்சளவுக்கு இந்த டீமோடு கோப்ரேட் பண்ணமுடியும். தட்ஸ் ஆல்! வேற என்ன சார்? முடிஞ்சதை கண்டிப்பாய் பண்ணுவேன் "

" வந்தனா! இந்த பீல்டில... சின்னச் சின்ன அட்ஜெஸ்ட்மென்ஸ் பண்றது பெரிய ப்ராப்ளமே இல்ல. உங்களுக்கும் தெரிஞ்சிருக்கும்... நான் எவ்வளவு பெரிய டைரக்டர் என்பது. வந்தனா...! என்னோட நீங்க ஒத்துப்போனால்... நான் இயக்கிற ஏனைய படங்களிலும் நீங்கதான் ஹீரோயின். என்ன சொல்லுறீங்க? ஓ.கேயா?..."

அவரின் சுற்றிவளைப்புக்கள் எங்கே முடியப்போகின்றன என்பதை உணர்ந்துகொண்ட வந்தனா விருட்டென எழுந்தாள்.

" சேர்! நீங்க எதிர்பார்க்கிற மாதிரி...உடம்பை வித்து... படுக்கையைப் பகிர்ந்து கொண்டு தான் இந்தப் படத்திலே நடிக்கணுமென்றால்... இந்தப் படமே எனக்கு வேண்டாம். இப்படியான பிழைப்பு எனக்குத் தேவையில்லை. நீங்க நல்ல மனிதர் என்கிறதால தான், இவ்வளவு தூரம் வரை வந்தேன். ஆனால்... இப்போ புரியுது உங்க திட்டமும், உங்களோட கெட்ட புத்தியும். யார்யார் எப்படியெப்படி இருப்பாங்க என்கிறதை நாம பழகிப்பார்க்கும் போதுதானே தெரியுது. உங்க விசயத்திலயும் இது கென்போர்ம் ஆகிடிச்சி. இதுக்கு வேற யாரையாவது பாருங்க..." வெளிப்பட்ட கோபத்தை கட்டுப்படுத்த முடியாமல் ஆவேசமாகப் பேசினாள் வந்தனா.

அவள் எப்படியும் பணிந்து விடுவாள் என எதிர்பார்த்த இயக்குனருக்கு, சினமாகியது. முகத்திலே ஏமாற்றம் பரவி ஒருவித ஆக்ரோசத்துடன் "ஏய்! என்னடி பெரிய பத்தினி மாதிரி நடிக்கிற...? உங்களைப் பத்தியெல்லாம் எங்களுக்குத் தெரியாதா? உண்மையிலயே சொல்லப் போனால்... நீங்களெல்லாம் உடம்பு வித்துத்தானே பொழைப்பு நடத்துறீங்க...நான் கேட்டவுடன் மட்டும் கண்ணகி நினைப்போ? ஏய்... வாடி...'''என்றவாறு புறப்படத் திரும்பியவளின் கையைப் பிடித்து இழுத்தார் இயக்குனர்.

அவர், திடீரென இப்படி மாறுவாரென நினைக்காதவள் மேசைமீது ஒளிர்ந்துகொண்டிருந்த டேபிள் லாம்பை எடுத்து தலையிலே போட்டாள் ஒருபோடு. இரத்தம் கசிந்து நெற்றி வழியாக வழியத்தொடங்கியது.

" டேய்... உடம்பு வித்துத்தான் பொழைக்கிறோம்னு சொல்லுறியே நாயே! உன்பொண்ணு நடிகையா இருந்தாலும் இப்படித்தான் சொல்லுவியா? இந்த நிலைக்கு வர, நாங்க எவ்வளவு கஷ்டப்படுறோம்னு உனக்குத் தெரியுமா? சினிமாவில இருக்கிற நீயே... ச்சீ! இனிமேல் எந்தப் பொண்ணை... நீ தப்பாய் பயன்படுத்த நினைச்சாலும் இதுதான் உனக்கு நிலமை. மனிஷனா நீ...? த்தூ...." காறி உமிழ்ந்து துப்பிவிட்டு வெளியேறினாள் வந்தனா.

மறுநாள்...

**பிரபல இயக்குனர் அழகப்பன் போதையில் கீழே விழுந்து பலத்த காயம்...** கொட்டை எழுத்துக்களில் பத்திரிகைகளின் தலைப்புச் செய்தியாக வந்திருந்ததைப் பார்த்து உள்ளூர சிரித்துக் கொண்டாள் வந்தனா.*

(முற்றும்)

# உண்மைகளைக் காணுவதே விடுதலைக்கான வழி....

ஆதரவளிப்பதும் செயற்படுவதும் சிந்திப்பதும் அவசியமே. இது வரவேற்கவேண்டிய ஒரு முக்கியமான விடயமும்கூட.

''உண்மையைக் கண்டறியாத வரையில் ஓரடிகூட நகரமுடியாது'' என்பது வரலாற்றின் விதி. ''புனைவுகளால் ஒருபோதும் எதிர்காலத்தை நிர்மாணிக்கவே இயலாது'' என்பது வரலாற்று உண்மை.

ஆனால், தமிழர்களிடம் அதீத புனைவு எப்போதும் உண்டு. இந்த அதீத புனைவுகள்தான் அவர்களுடைய பலமும் பலவீனமுமாகும்.

வீரம், பண்பாடு, காதல், மொழி, வரலாறு என எல்லாவற்றிலும் மற்றச் சமூகங்களை விட தமிழினம் உயர்வானது, தமிழ்மொழி சிறப்பானது என்ற எண்ணம் தமிழர்களிடத்தில் உண்டு.

இந்தக் காரணங்கள்

போட்டிகரமானவை. எனவே, இந்தப் போட்டியை வெற்றிகொள்வதற்கு அறிவு தேவை. அறிவே இன்றைய வாழ்வின் நிர்ணயமான சக்தியாகிவிட்டது.

இந்த அறிவைப் பெறாத சமூகங்கள் நெருக்கடிகளையும், அவலத்தையும் துயரத்தையுமே சந்திக்கின்றன. அறிவைப் பெறாத-பெறமுடியாத சமூகங்கள் எவ்வளவு மகத்தானவையாக இருந்தாலும் சரி, எத்தனை பெரிய வரலாற்றுப் பெருமைகளைக் கொண்டிருந்தாலும்சரி அவற்றினால்



இதற்கான காரணங்கள் பல இருக்கலாம். ஆனால், உலகத்தில் ஏனைய இன மக்களுக்கும் ஒரு வாழ்க்கை இருந்தது; அந்த வாழ்க்கைக்கான அடிப்படைகள் இருந்தன என்பதைப் பற்றிப் பெரும்பாலான தமிழர்கள் சிந்திப்பதில்லை.

குறிப்பாகக் கடந்த 500 ஆண்டுகளில் தமிழர்களிடம் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய பெருமைகள் குறைவு. அதாவது, இந்த அண்மைய ஐநூறு ஆண்டுகளில்தான் உலக வரலாறு நவீனத்துவத்தில் பெரும் பாய்ச்சலை நிகழ்த்தியது. விஞ்ஞானத்தில் உச்சத்துக்கோ அல்லது வளர்ச்சிக்கோ சென்றது. தொடர்பாடல், இயந்திரங்களின் கண்டுபிடிப்பு, நாடுகாண் பயணங்கள் என்று உலகம் ஒருங்கிணைக்கப்பட்டது இந்த ஐநூறு ஆண்டுகளில்தான்.

ஆனால், இந்த ஐநூறு ஆண்டுகளிலும் தமிழர்களின் சாதனைகளும் வெற்றிகளும், கண்டுபிடிப்புக்களும் பங்களிப்புக்களும் என்னவென்று பார்த்தால் ஏமாற்றமே மிஞ்சும்.

இந்தக் காலகட்டத்தில் தமிழர்களல்லாத-தமிழ்வெளிக்கு அப்பாலான சூழலில் அரசியல், பொருளாதாரம் என்பன பெரும் வளர்ச்சிகண்டன. குறிப்பாக இவை இரண்டிலும் முற்றுமுழுதான விஞ்ஞான முறைமை தாக்கம்செலுத்தியுள்ளது.

விஞ்ஞானமே அண்மைய ஐநூறு ஆண்டுகால வரலாறு எனலாம். அதாவது, அறிவே-முற்றுமுழுதான அறிவே வாழ்வையும் வரலாற்றையும் நகர்த்துகின்றது. உணர்ச்சிகரமான விடயங்களின் காலம் பின்தங்கிவிட்டது.

உலகத்தின் வளங்களைப் பகிர்வதில் சர்வதேச ரீதியான போட்டிகள் ஏற்பட்டுள்ளன. அதைப்போல சமூக இருப்பைத் தக்கவைத்துக்கொள்வதிலும் உறுதிப்படுத்துவதிலும் ஏராளம் சவால்கள் உள்ளன.

ன்றைய வாழ்க்கையில் தாக்குப்பிடிக்க முடியாது.

இது உண்மை. இதுவே யதார்த்தம். இதையே நாம் எதிர்கொள்கிறோம்.

இந்த உண்மையை-இந்த வரலாற்றுத் துயரத்தைப் பற்றி தமிழ் தரப்பில் பலரும்

எடுத்துரைத்துள்ளனர்.

''இரண்டாயிரம் ஆண்டுப் பழம்பெரும் சுமை நமக்கு வேண்டாம்'' என்றும், ''பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல்'' எனவும் நமது சிந்தனையாளர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

ஆனால், நாமோ விடாப்பிடியாகவே பழம்பெருமைகளில் சிக்குண்டிருக்கிறோம். சமகால நிலைமைகளைப் பற்றி நாம் சரியாகப் புரிந்துகொள்வதோ மதிப்பிடுவதோ இல்லை.

உணர்ச்சிப் பிழம்புகளாகவே நாமிருக்கின்றோம். எல்லாவற்றிலும் உணர்ச்சிவசப்படுவோராகவும், உணர்ச்சிவசப்பட்ட தரப்பினராகவும் உள்ளோம். ஆகையால்தான் எங்களால் நிதானிக்க முடியவில்லை. நிதானத்துக்கு உணர்ச்சிகரமானவை எப்போதும் எதிரானவை என்று கூறப்படுவதுண்டு.

சோக்கிரட்டீஸ் ஓர் அறிஞர். ஆனால், அவரை எதிர்த்தது உணர்ச்சிகரமான தரப்பு. தலாய்லாமா அறிவுவாதி. ஆனால், அவரை எதிர்ப்பது உணர்ச்சிகரமான கூட்டம். தமிழர்களைப்போல அதிகம் உணர்ச்சிவசப்படும் இன்னொரு தரப்பினர்-முஸ்லிம்கள். அதாவது, இஸ்லாமியர்கள்.

வரலாற்றில் இஸ்லாமியர்களின் இடம் அவர்களுடைய முயற்சிகளுக்கு ஏற்றதாக இல்லை. குறிப்பாக ஈராக்கில் ஐரோப்பியர்களின் அடாவடித்தனங்கள் நிகழ்ந்தபோது முழு அரபு உலகமும் அதைப் பார்த்துக்கொண்டேயிருந்தது. இப்போதும் இதுதான் நிலைமை. ஆப்கானிஸ்தானில் இருந்து பாகிஸ்தான் வரையில் பின்லேடனின் பெயராலும், தலிபான்களின் பெயராலும் மேற்குலகத்தில் வன்முறை நிகழும்போது அவ் இஸ்லாமிய உலகம் மௌனப் புதைகுழியினுள்தானிருக்கிறது.

இவ்வளவுக்கும் இஸ்லாமியர்கள் மதரீதியாக ஒன்றிணையக்கூடிய அடித்தளத்தையுடையவர்கள். அதற்கான உணர்ச்சிப் பாரம்பரியமும் அவர்களிடம் உள்ளது.

ஆனால்?

இவ்வாறே நாம் பலஸ்தீனப் போராட்டத்தையும் நோக்கவேண்டும். உலகம் முழுவதும் நன்றாகவே அறியப்பட்ட பலஸ்தீனப் போராட்டத்தை-அரபுலகத்தின் கைகளில் இருக்கும் பிரச்சினையைத் தீர்ப்பதற்கும், அதில் வெற்றிகாண்பதற்கும் முடியாத ஒரு நிலையில்தான் பலஸ்தீனமும் பலஸ்தீனப் போராட்டமும் உள்ளன.

ஏறக்குறைய இதே நிலைமை தான் தமிழர்களுடையதாகவும் இருக்கிறது. குறிப்பாக ஈழத்தமிழர்களின் நிலைமை எனலாம்.

உலகம் முழுவதும் எட்டுக்கோடி தமிழர்கள் உள்ளனர் என்று கூறப்படுகிறது. (இந்தக் கணிப்பு சரியானதா என்பதைக்கூட உறுதியாகச் சொல்லமுடியவில்லை) ஆனால், வன்னியில் ஆயிரக்கணக்கான மக்கள் பலியாகியபோது அதைத் தடுத்துநிறுத்துவதற்கு எவராலும் முடியவில்லை. பின்னர் முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டபோதுகூட அந்த மக்களை விடுவிப்பதற்கோ, சென்று பார்த்து உதவுவதற்கோ எவருக்கும் இயலவில்லை.

இதுதான் உண்மையான நிலைமை. அத்துடன் அறுபது ஆண்டுகளாக நீடித்துவரும் துயரத்தை-இனவாத அரசியலை முடிவுக்குக் கொண்டுவரக்கூடிய திறனையும் எட்டுக்கோடி தமிழரும் கொண்டிருக்கவில்லை.

இதற்குக் காரணம், உணர்ச்சிகரமான தீர்மானங்களும் செயற்பாடுகளும் அறிவிப்புகளுமே. தமிழ் ஊடகப் பொதுவெளி இதற்குச் சிறந்த உதாரணம். அறிவுசார்ந்த அணுகுமுறையை தமிழ் அரசியல், தமிழ்ப் பண்பாடு, தமிழ் ஊடகம் என்பன அதிகம் விரும்புவதில்லை.



இதேவேளை உணர்ச்சிகரமான நடவடிக்கைகளுக்கு இவை கொடுக்கின்ற முக்கியத்துவம் அதிகம் என்பதால்தான் நெடுமாறன், சீமான், வை.கோபால்சாமி, ரி.ராஜேந்திரன் போன்றோர் யாழ்ப்பாணத்து ஊடகங்களிலேயே அதிக இடத்தை ஆக்கிரமிக்க முடிகிறது.

இதில் இன்னொரு முக்கிய விடயத்தையும் நாம் கவனிக்கலாம். 'தமிழ் உணர்வாளர்கள்' என்ற அடிப்படையில் இந்த அணி இன்று பெற்றிருக்கும் முதன்மையே அது. இனம் சார்ந்த உணர்வின் அடிப்படையில் ஒன்றுபட்டிருப்பதும்

ஆனால், வெறும் உணர்ச்சிகரமான விடயங்களால் மட்டும் எதுவும் செய்யமுடியாது என்பதை எமது கடந்தகால வரலாறு மட்டுமல்ல, அண்மைய அனுபவங்களும் சாட்சி சொல்கின்றன.

1. பொங்குதமிழ்.

2. பொங்கியெழும் மக்கள் படையின் நடவடிக்கைகள்.

3. வன்னியில் நடைபெற்ற இறுதிப் போரின்போது தமிழகத்தில் ஏற்பட்ட எழுச்சி.

4. அப்போது புலம்பெயர் நாடுகளில் நடந்த பேராட்டங்களும் மக்கள் எழுச்சியும்.

5. இப்போது (லண்டனில் ஓயாத அலைகள்) லண்டனில் தமிழர்கள் அணிதிரண்டு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக நடத்திய போராட்டம்.

இவை அனைத்துமே மக்கள் ஆதரவுத்தளத்தை அடிப்படையாகக் கொண்டவை. அதுவும் லட்சக்கணக்கான மக்கள் ஆதரவு!

ஆனால், இவையெல்லாமே வீணாகிவிட்டன. வீணே ஓடிய வெள்ளம் போல ஆகிவிட்டது. இது பெரும் துக்கத்துக்குரியது. இந்த ஆதரவுத்தளம், உணர்வு-உணர்ச்சி சார்ந்ததாக மட்டும் இருந்ததால் வந்த விளைவு இது.

இதை அறிவுமய்ப்பட்டதாக-விஞ்ஞான பூர்வமானதாக மாற்றவேண்டும். இது

அருள் மனோகரன்

அறிவின் யுகம். இராஜதந்திரமும், அரசியல் அணுகுமுறைகளும், தொடர்பாடலும் இதில் பிரதானமானவை.

எனவே, தமிழ் உணர்வாளர்கள் என்ற பதத்திற்குப் பதிலாக தமிழ் அறிவாளர்கள் என்ற பதம்-தமிழ் இராஜதந்திரிகள் என்ற நிலை உருவாகவேண்டும்.

அதன்மூலம் ஓர் அறிவுபூர்வமான அணுகுமுறையும் இராஜதந்திரக் கையாடல்களும் சாத்தியப்படும்.

'அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு; ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்று சொல்லலாம். ஆனால், ஒரு கோலியாத்தை தாவீது வென்ற கதையையும் நாம் மறந்துவிடலாகாது.

1980 களில் எதிர்நிலையில் இருந்த இந்தியாவை தமது கையினுள் கொண்டுவந்த சிங்கள ராஜதந்திரத்துடன்தான் விளையாடவேண்டும் என்பதைப் புரிந்தால் சரி.

# அரசுகளும் பேசா ஊடகங்களும்

அரசுகள் எப்போதும் தமது சொந்த நலனை அடிப்படையாகக்கொண்டே இயங்குபவை. தமது சொந்த நலனுக்காகவும் தேவைகளுக்காகவும் அவை உள்நாட்டிலும் சரி, வெளிநாட்டிலும் சரி கூட்டுகளை வைத்துக்கொள்கின்றன; உறவுகளைப் பேணு கின்றன; நட



வடிக்கைகளை மேற்கொள்கின்றன.

இந்திய அரசு தனது அதிகாரத்தைத் தக்க வைத்து, அதன் மூலம் லாபங்களைப் பெறுவதற்காகவே நாகாலாந்து, அஸாம், பஞ்சாப், காஷ்மீர் போன்ற மாநிலமக்களின் உரிமைகளையும், நலனையும் நசுக்குகிறது. இதனைப் புரிந்துகொண்டு முன்னெடுக்கப்படும் இந்த மாநிலங்களின் போராட்டங்களை அது மிக மோசமாக ஒடுக்குவதும் இந்த அடிப்படையில்தான்.

வடக்கு மற்றும் வடகிழக்கு, மேற்குப்பகுதிகளில் இந்திய அரசின் இராணுவத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் தொகை பல ஆயிரம். இந்த ஒடுக்குமுறையும், இந்த துயரக்கதையும் இன்னும் அங்கே ஓயவில்லை.

தன்னுடைய அதிகார நலனுக்காக தனது சொந்த மக்களையே கொன்றும் சிதைத்தும் வரும் சமகால நிகழ்வில் இந்திய அரசும் உள்ளதென்பதே இங்கே நாம் கவனிக்க வேண்டியது.

1989 இல் ஜனநாயக உரிமைகளுக்கான போராட்டத்தை முன்னெடுத்த சீனமாணவர்கள் 10,000 பேரைச் சீன அரசு கொன்றொழித்தது மிகப்பிரபலமான செய்தி. இந்த மாணவர்களின் போராட்டத்துக்குப் பின்னணியாக அமெரிக்கா இருந்ததா அல்லது பேயோ, பிசாசோ இருந்ததா என்பதல்ல இங்கே பிரச்சினை. ஒரு அரசுக்கெதிரான போராட்டத்தை அதன் மக்கள் நடத்துவதாக இருந்தாலும் அந்த அரசானது தனது மக்கள் என்றும் பார்க்காமல் கொலைக்கரத்தை நீட்டும் என்பதே செய்தி.

இலங்கையில் 1971 இலும் 1989 இலும் ஜே.வி.பி நடத்திய கிளர்ச்சிகளை முறியடிப்பதற்காக ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட சிங்களவர்கள் கொல்லப்பட்டனர். கிளர்ச்சி நடத்தியதும் சிங்களவர்கள், கிளர்ச்சியை முறியடித்ததும் சிங்களவர்களே!

அதிலும் 1989 காலப்பகுதியில் இலங்கை அரசு ஜே.வி.பி கிளர்ச்சியை முறியடித்த விதத்தை கேள்விப்பட்டாலே மயிர்க்கூச்செரியும்.

இரண்டு காதுக்குள்ளும் பேனாவை வைத்து அடித்துக் கொல்லுதல், பெற்றோல் ஊற்றப்பட்ட டயரை உயிருடன் கழுத்தில் போட்டுத் தீவைத்தல், வெட்டப்பட்ட உடல்களை ஆற்றில் வீசுதல் என்று இந்தக் கொலை நாடகம் அந்த நாட்களில் மிகப்பயங்கரமாகவே இருந்தது.

இதிலும் ஜே.வி.பியின் தலைவர் றோகண விஜே வீரவை இலங்கை அரசு கொன்ற விதமும் அவரது சடலத்தைக்கூட வெளியே காட்டாத முறையும் இங்கே முக்கிய கவனத்திற்குரியவை.

இவ்வளவுக்கும் ஜே.வி.பியும் அதன் தலைவர் றோகண விஜேவீரவும் சிங்கள மக்களிடத்திலும், இளைய தலைமுறைச் சிங்களவர்களிடத்திலும் விரும்பப்பட்ட நிலையிலேயே இலங்கை அரசு இப்படிக் கொலைக்கரத்தை நீட்டி நசுக்கியது.

ஜே.வி.பியை அன்றைய பிரேமதாசாவின் யு.என்.பி அரசு ஒடுக்கியபோது அதற்கெதிராக மனித உரிமை குறித்துப் பேசியவர், போராடியவர்தான் இன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ என்பது தனிக்கதை.

ஆகவே, அரசுகள் என்பவை தமது நலனுக்காகவும் அதிகாரத்துக்காகவும் தமது சொந்த மக்களையே பலியாக்கும், நசுக்கும் என்பது ஒரு மிகத்துலக்கமான உண்மையும் சாதாரண நடைமுறையுமாகும்.



தனது நலனுக்காகவே ஈராக்கிலும் ஆப்கானிஸ்தானிலும் அமெரிக்கா தனது இராணுவ நடவடிக்கையை மேற்கொள்கிறது என்பது யாருக்குத்தான் தெரியாது?

இந்த நடவடிக்கைகளின்போது அங்கே மக்களுக்கு பூச்செண்டும் இனிப்புப் பண்டங்களுமா வழங்கப்படுகின்றன? இதையெல்லாம் யார்தான் கண்டித்தாலும் அமெரிக்கா அதையிட்டுப் பின்வாங்கப்போவதோ, அச்சமடையப்போவதோ, தன்னை மாற்றிக் கொள்ளப்போவதோ இல்லை.

இவையெல்லாம் வெளிப்படையான ஆக்கிரமிப்புகளும், போர் நடவடிக்கைகளும், ஒடுக்குமுறையுமாகும்.

இவற்றைவிடக் கண்ணுக்குத்தெரியாத பல ஒடுக்குமுறைகளும் ஆக்கிரமிப்புகளும் உள்ளன. அவை கலாசார ஆக்கிரமிப்பு, மத ஆக்கிரமிப்பு, பொருளாதார ஆக்கிரமிப்பு என்பது அமைகின்றன.

இலங்கையில் இந்தியக் கலாசாரம் மற்றும் இந்தியச் சந்தையின் ஆக்கிரமிப்பு அதிகமாகியுள்ளன. உடை, புழங்கும் பொருட்கள், உணவுப் பழக்கங்கள், மத நடவடிக்கைகள், வழிபாட்டு முறைகளில் இந்தியத்தன்மைக்குள் கட்டுண்டு வருகின்றது தமிழ் சமூகம். சற்று விதிவிலக்காக இலங்கை முஸ்லிம் சமூகத்தினர் உள்ளனர். இதற்கு அவர்களுடைய மதம் ஒரு காரணமாக இருந்தாலும் பல விடயங்களில் இந்தியக் கலாசாரத்தின் வலையமைப்புக்குள்தான் அவர்கள் உள்ளனர்.

ஆகவே, இத்தகைய பின்னணியில் அரசுகளை நம்புவது என்பது ஒடுக்குமுறைக்குள்ளான மக்களின் அரசியல் முன்னெடுப்புகளுக்கு ஒருபோதுமே உதவாது.

இதை இன்னும் சற்று விரிவாகவும், ஆழமாகவும் நோக்கலாம்.

கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளை விரும்பிப் பயணம் செய்யும் ஈழத்தமிழர்கள் அந்த நாடுகளில் மேற்கொள்ளப்படுகின்ற ஒடுக்குமுறைகளைப் பற்றி அறிந்திருப்பதில்லை.

கனடா மற்றும் அவுஸ்திரேலியாவிலுள்ள பூர்வீக குடிமக்கள் அங்கே ஒடுக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு தொழில்வாய்ப்புத் தொடக்கம் அரசியல் அதிகாரம்வரையில் எதுவும் இல்லை.

இந்த நிலைக்கு எதிராக அவர்கள் தொடர்ந்து போராடுகிறார்கள். ஆனால், அங்குள்ள அரசுகள் இந்த மக்களுக்கான உரிமைகளை வழங்கத்தயாராக இல்லை. மட்டுமல்ல, இந்த நாடுகளின் அரசியல் அமைப்பில்கூட இந்தப்பூர்வீக குடிகளுக்கு இந்த நாடுகளின் சொந்தக்காரருக்கு உரிய இடம் அளிக்கப்படவில்லை.

இதில் வேடிக்கையான விடயம் என்னவென்றால், இந்த நாடுகளின் அரசியல் அமைப்புகளை முன்மாதிரியாகப் பின்பற்றுவதற்கு நம்மிற்சிலர் பரிந்துரைகள் செய்வது.

ஆகவே, எந்த அரசாயினும் அது தனது நலனிலும் அதிகாரத்திலுமே அக்கறையாக இருக்கின்றது என்பதே உண்மை. அந்த நலனையும் அதிகாரத்தையுமே மையமாகக் கொண்டு அவற்றின் அரசியல், இராஜதந்திர, பொருளாதார உறவுகள் கட்டமைக்கப்படுகின்றன.

இதை நாம் தெளிவாகப்புரிந்துகொண்டால், எமக்கான அரசியல் தலைவிதியின் திசை தெளிவாகவே புலப்படும்.



பலரும் இந்தியாவைப்பற்றிய நம்பிக்கைகளைக் கொண்டுள்ளனர். இந்திய மத்திய அரசு என்பது ஒரு பெரிய நிறுவனம் அல்லது ஒரு மிகப்பெரிய இயந்திரம். அதற்கு எது தேவை என்பதைப் பொறுத்ததே அயல் உறவுகளும் அதனுடைய நடவடிக்கைகளும்.

இன்றைய நிலையில் சீனாவின் வர்த்தக விரிவாக்கப் போட்டியில் இந்தியா கடுமையான சவால்களைச் சந்திக்க வேண்டியுள்ளது. அதிலும் தென்னாசியப் பிராந்தியத்திலும், எல்லையிலும் நிற்கும் போட்டியாளன் சீனா.

ஆகவே, சீனாவுக்கு எதிரான

**-ஜோசவ் தயாளன்-**

வியூகத்தையே இந்தியா இப்போது வகுத்துள்ளது. இந்த வியூகத்தின் ஒரு அம்சமாகவே கிருஷ்ணா வந்ததும் சென்றதும்.

இடையில் அவர் நம்மைப் பார்த்ததும் பேசியதும் பேசாமல் சென்றதும் சீன வியூகத்தின் தோற்றமே. அதாவது, இலங்கையை சீனாவின் பிடியில் இருந்து தனது பிடிக்குள் கொண்டுவர வேண்டுமென்ற நோக்கத்தில் பார்க்கப்பட்டது.

## அவலங்களைப் பகிர்ந்துகொள்வோம்

வன்னியில் நடந்த இறுதிக்கட்ட யுத்தத்தின் போது, ஏராளமான வேதனை தரும் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. அவற்றினை பலர் எழுதி வருகிறார்கள். நீங்களும் உங்களுக்கு நேர்ந்த அவலங்களையும்... கண்ணெதிரே கண்டு துடித்த வேதனைச் சம்பவங்களையும்... உங்களைப் பாதித்த வலிக்கின்ற அந்தக் கொடிய நாட்களின் பதிவுகளையும் வாசகர்களோடு பகிர்ந்து கொள்ளலாம். அதற்கான களத்தினை தருகிறது சுடர்ஒளி. எனவே, நீங்களும் உங்கள் அவலங்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:
''உயிர் வலிக்கும் கணங்கள்''
சுடர்ஒளி வாரமலர்,
85, ஜெயந்தமல்லி மாராச்சி மாவத்தை,
கொழும்பு-14.




# கையடக்கத் தொலைபேசி அதிகமாக உபயோகிப்பதால் பாதிப்பு ஏற்படவாய்ப்புண்டா?

கேள்வி: வயது 25 பெண். நான் அதிகமாக *Cell Phone* உபயோகிப்பேன். எனது வேலை நிமித்தாக இதனை பலமணிநேரம் உபயோகிக்க வேண்டியுள்ளது. அது தவிர நண்பர்களுடன் அளாவளாவவும் இந்த கையடக்க தொலைபேசியைத்தான் உபயோகிக்கிறேன். கடந்த சில மாதமாக எனது வலது காதுக்குள் ஒருவித கிணுகிணுக்கும் சப்தம் கேட்டுக்கொண்டிருக்கின்றது. *(Ringing Sound)* ஒரு காது நோய் நிபுணரின் ஆலோசனை பெற்றபோது கையடக்கத் தொலைபேசி அதிகமாக உபயோகிப்பதால் இப்படி ஏற்படவாய்ப்புண்டு என்று



கூறினார். இது உண்மையா? அல்லது எனது நோயை சரியாக நிதானிக்காமல் - நான் கூறிய தகவல்களை வைத்து நேரத்திற்கு ஏற்றவாறு வைத்தியர் கூறினாரா? சந்தேகமாக இருக்கின்றது? உங்கள் ஆலோசனையை எதிர் பார்க்கின்றேன்.

பதில்: எமது உலகில் எந்த புதிய ஒரு விஷயம் அறிமுகப்படுத்தப்பட்டாலும் அதற்கு எதிர்ப்புக் காட்டுவது வழக்கமாகிவிட்டது. அது பிழையல்ல என்றாலும் சிலவேளைகளில் எதுவித ஆதாரமும் இல்லாமல் எதிர்ப்புத் தெரிவிப்பது தவறானது. ஆனால் இந்த கையடக்க தொலைபேசி விஷயத்தில் அளவுக்கதிகமாகவே பல ஆய்வுகள் நடத்தப்பட்டு கருத்துகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

காதுக்குள் ஏற்படும் Ringing in Ears எனப்படும் கோளாறை - Tinnitus என்று மருத்துவத்தில் கூறுவார்கள். இந்த கோளாறு சிலவேளைகளில் 'உஷ்' என்ற ஒலிபோலும் அல்லது ஒரு சோடாப் போத்தலைத் திறக்கும் போது அடைக்கப்பட்ட காற்று வெளியேறும் ஒலிபோலும், தண்ணீர் குழாய் திறந்திருந்தால் கேட்கும் ஒலிபோலும், விசில் அடிப்பது போலும் அல்லது பாட்டு Humming 'முணுமுணுப்பது' போலும் கேட்கும். ஆனால் நீங்கள் சொல்வது போல் தொலைபேசி மணி அடிப்பது போல் கேட்காது. Ringing in Ears என்ற வார்த்தையை நேரடியாக நீங்கள் மொழிபெயர்த்திருக்கலாம் என்று நான் நம்புகின்றேன். பொதுவாகவே இந்த 'இரைச்சல்' சப்தம் - காதில் ஏற்படும் நோய்கள், மூளை இரத்தக்குழாய் கோளாறுகள், என்பவற்றால்தான் ஏற்படுகின்றன.

ஆனால் இதுவரை கையடக்கத் தொலைபேசி உபயோகத்திற்கும் இந்த காது இரைச்சல் சப்தத்திற்கும் நிரூபிக்கப்பட்ட தொடர்பு தெளிவாக்கப்படவில்லை என்றே கூறவேண்டும். ஆஸ்திரியா நாட்டில் காது இரைச்சல் கோளாறு உள்ள 100 பேரிடம் நடைபெற்ற ஆய்வுகள்தான் ஓரளவு விஞ்ஞான பூர்வமான ஆய்வு. ஆனால் இதிலும் தெளிவான முடிவுகள் எட்டப்படவில்லை என்பதே இங்கு குறிப்பிடப்பட வேண்டும்.

என்றாலும் பெருத்த சப்தம்தான் இந்த காது இரைச்சக்கு முக்கிய காரணமாக விளங்குகின்றது. கையடக்கத் தொலைபேசி பாவனையின்போது Microwave Energy அதிகளவில் தொலைபேசியிலிருந்து வெளியேறி உட்காது (Cohlea) பகுதியை பாதிப்பதால் இந்த 'இரைச்சல்' ஏற்பட வாய்ப்பு உண்டு. குறைந்த எண்ணிக்கை தொலைபேசி பாவனையாளர்களை வைத்து இந்த ஆய்வு நடத்தப்பட்டதால் இந்த ஆய்வை முழுமையாக ஏற்றுக் கொள்ளாதவர்கள் பலர். எனிலும் உங்கள் விஷயத்தில் நீங்கள் பாவனையைக் குறைப்பது நல்லது. உபயோகிப்பது அவசியம் எனில் Ear Phones, மற்றும் Speaker Phones மூலம் உபயோகிப்பது நல்லது.

கேள்வி: பெண் வயது 41. எனக்கு ' உடலில் தசை வலி உள்ளது. உடனடியாக இருந்த இடத்திலிருந்து எழுந்திருக்க முடியாது. அப்படி எழுந்தாலும் ஒரு பத்து நிமிட நேரமாவது எழுந்து நின்ற பின்னர் தான் வலிகுறைந்து அசையமுடிகிறது. கணைக்கால், இடுப்புமூட்டு, தொடை பகுதிகளில் வலி ஏற்படுகிறது. ஆரம்பகாலத்தில் எனது மூட்டுகள், காலையில் எழுந்திருக்கும் போதுதான் வலிக்கும். இப்போது அப்படியில்லை. கடந்த ஒரு மாதமாக உயர் இரத்த அழுத்தத்திற்கு மருந்து எடுக்கிறேன். எனது மருந்துவர் விட்டமின் E மாத்திரைகளையே உபயோகிக்க கூறினார். கடந்த பத்து நாட்களாக இந்த மாத்திரைகளைப் உபயோகித்தும் பலன் இல்லை. பரிகாரம் கூறவும்.

பதில்: உங்கள் கோளாறு தனியே OSTEOARTHIRITIS எனப்படும். கீழ்வாதம் அல்ல. RHEWMATOID ARITHRITIS எனப்படும் வாதக்கோளாறுகளில் ஒன்றாக இருக்க முடியாது. உங்கள் வயதில் மேற்கூறப்பட்ட வாதப்பிரச்சினைகள் ஏற்படுவது பொதுவானதென்றாலும் நீங்கள் தந்த தரவுகள் இவற்றிற்கு அதிகமாக பொருந்துவதாகத் தெரியவில்லை. அதிக எடை, பருத்த உடம்பு என்பன மூட்டுக்கள் தேய்ந்து கீழ்வாதத்தைத் தரலாம். காலையில் மூட்டுகளில் வீக்கம் STIFNESS எனப்படும். விறைப்புத் தன்மை என்பவை REHMATOID கோளாறின் குணாதிசயங்கள். இவற்றை மூட்டுக்களில் X TRY பரிசோதனை, மற்றும் ANTI NUCLEAR FACTOR, ESR, CRP, RHUMATOID FACTOR போன்ற இரத்தப்பரிசோதனை மூலம் கண்டறியப்படலாம். இந்தப்பரிசோதனைகள் மூலம் மேற்குறிப்பிடப்பட்ட கோளாறுகள் உங்கள் பிரச்சினைக்கு காரணமல்ல என்று வெளிப்பட்டால் அடுத்ததாக உங்கள் நோயாக POLYMYOSITIS என்பது பிரச்சினையாக இருக்கலாம். உட்கார்ந்த இடத்திலிருந்து எழுந்திருப்பதில் கஷ்டம், மற்றும் தசைவலிகள் என்பன POLYMYOSITIS போன்ற கோளாறைத்தான் காட்டுகின்றன. MYOSITIS என்றால் தசைகளில் ஏற்படும் வீக்க வலியையும் POLY என்பது அனேகமான அல்லது பல கருத்தையும் கொண்ட ஆங்கிலப்பதங்கள்.



இந்த நோய் பொதுவாக காணப்படாத இணைப்புத்தசைகள் CONNELTIVE TISSUES காலில் ஏற்படும் நோய். இது ஒரு விதமான தசைவீக்க சுழற்சி INFLAMMATORY நிலை. தசைகள் சுழற்சியுற்று வீக்கமடைதல், பலவீனமடைதல் என்பன இந்த நோயின் குறிகள். மனித உடலின் அசைவுகளுக்கு உதவுகின்றன. எலும்பு சம்பந்தமான தசைகளையே SKELETAL MUSCLES தாக்குகின்றன. இந்தப்பிரச்சினை எந்த வயதிலும் ஏற்படலாம். ஆனால் 30 வயதிற்கும் 50 வயதிற்கும் இடையில் அநேகமானவர்கள் - அதிலும் பொதுவாக பெண்கள் இந்த நோய்க்கு ஆளாவதுண்டு. இந்த நோயின் குணங்குறிகள் மெல்லமெல்ல வாரக்கணக்கில் அல்லது மாதக்கணக்கில் உடலில் தோன்றும். விட்டமின் E மற்றும் வலிநிவாரணங்களில் ANTI OXIDANT மருந்துவகைகள் வலியை நீக்கி வாழ்க்கையைக் கொண்டுசெல்ல உதவுமேயொழிய முற்றாகக் குணம் காணுதல் அரிது.

கேள்வி: ஆண். வயது 33 கடந்த 8 வருடங்களாக பீடா போடும்



பழக்கம் உண்டு. இந்த பீடாக்களில் புகையிலை சேர்க்காமல் நான் போடுவேன். நண்பர்கள் இந்தப்பழக்கத்தால் வாய்ப்புற்று நோய் ஏற்படலாம் என்று பயமுறுத்துகிறார்கள். உண்மையா? நாலு வாரத்திற்கு ஒரு தடவையாவது மதுபானம் உபயோகிக்கும் பழக்கம் உண்டு. இந்த பீடாப்பழக்கத்தையும், மதுப்பழக்கத்தையும் விட உதவுவீர்களா?

பதில்: அரிப்பு ஏற்படுத்தும் IRRITANTS பொருட்களை வாய்க்குள் நிறையநேரம் குதப்பி வைத்திருப்பதால், தொடர்ந்து உபயோகிப்பதால் வாய்ப்புற்று ஏற்படவாய்ப்பு அதிகமாக உண்டு. புகையிலை, சுண்ணாம்பு பாக்கு, கராம்பு என்பவை இத்தகைய அரிப்பு ஏற்படுத்தும் பொருட்களில் சில. வெற்றிலையைக் கூட மென்று விழுங்காமல் கொடுப்புக்குள் குதப்பி வாய்க்குள் வைத்திருப்பது கூட அரிப்பை ஏற்படுத்தும் என்பதால் அதையும் தவிர்ப்பது நல்லது. இவைதவிர பல்வரிசையில் துருத்திக்கொண்டிருக்கும் பற்கள் முக்கியமாக கடைவாய்ப் பற்கள் MOLARS மற்றும் பற்கள் உள்வாய்ப்பகுதியை அடிக்கடி தேய்ந்து அதனாலும் புற்றுநோய் ஏற்படலாம்.

வாய்ப்புற்றுநோய், ஆரம்பத்தில் ஆறாத வாய்ப்புண்ணாய் அல்லது வெளிறிய வாய்த்தோல் WHITE PATCHES IN CHEEKS மற்றும் வாய்க்கட்டிகள் போல் ஆரம்பிக்கலாம். வாயினுள் ஏற்படும் எந்த மாற்றத்தையும் முதலில் புற்றுநோய் ஆரம்பம் என்ற சந்தேகம் கொண்டு பார்க்க வேண்டும் என்பது பல்வைத்தியர்களின் அபிப்பிராயம். இப்படியான நேரத்தில் BIOPSY ஒன்றை வெட்டியெடுத்து பரிசோதனை செய்யும் முறையைக் கைக்கொள்ள வேண்டும்.

அடுத்தபடியாக எரிகிற நெருப்பில் எண்ணெய் வார்ப்பதுபோல் மதுப்பழக்கத்தையும் நீங்கள் பழகியுள்ளீர்கள். மதுசாரமும் ஒரு IRRITANT தான். நேரடியாக மது வாய்ப்புற்றுக்குக் காரணமில்லாவிடினும், மற்றைய பொருட்களின் அரிப்புத்தன்மையை அதிகரிக்க வாயினுள் உள்ள புண் ஆரம்பபுற்று தோல்கோளாறு என்பவற்றை ஊக்குவிக்கும் என்பதை மனத்திற்கொள்ள வேண்டும். மது என்பதை SLOW POISON அதாவது மெல்லமெல்லக் கொல்லும் விஷம் என்று சொல்லலாம். தினமும் குடிப்பதென்றாலும் சரி, வாரத்திற்கு ஒரு தடவை குடிப்பதென்றாலும் சரி குடிக்கும் போதெல்லாம் உடலில் அழிவுத்தொழிலைச் செய்வது மது. சிறு அளவு மது முதலில் ஈரல்கலங்களைத் தாக்கி அழிவைத்தரமுன்னர் மூளைக்கலங்களைச் சிறுகச்சிறுக அழிக்கின்றது என்பது நிரூபிக்கப்பட்ட விஷயம். முதலாவது தடவைதான் மது பாதிப்புத்தரக் கூடிய மாற்றங்களே தாராதவகையில் மூளையின் கலங்கள் அழிகின்றன, பாதிக்கப்படுகின்றன என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே எந்த விதத்திலும் மதுபாவனை ஏற்றுக்கொள்ளக்கூடிய விஷயமல்ல. நீண்டநாள் அல்லது அதிகளவு மதுபாவனை ஈரல் அழற்சி, ஈரல் வீக்கம், ஈரல் அழிவு CLRROHISI சமிபாட்டுகுழாய் புற்றுநோய்கள் என்பவற்றை தரும். இதுதவிர உடலின் எதிர்புச் சக்தியைக் குறைத்து எங்கே என்று காத்துக்கொண்டிருக்கும் உடலின் எதிரிகள் உள்ளே புகபெரும் வாய்ப்பை அளிக்கும்.

இந்தப்பழக்கத்திலிருந்து விடுபட முதலில் நீங்கள் தீர்க்கமாய் முடிவு எடுக்கவேண்டும். மற்றவர்களின் விருப்பங்களுக்காக உங்கள் பழக்கங்கள் மாறாது. மனம் இருந்தால் குணம் கிடைக்கும்.

மேலும் ஒரு மனோவியல் மருத்துவர் உளவள ஆலோசகர், மருத்துவர் போன்றோரின் கூட்டு ஆலோசனைகள், உதவி, சிகிச்சை என்பவற்றால் பலன் கிடைக்கும். ALCOHOL ANONYMOUS என்கின்ற சமூக ஸ்தாபனம் உங்களைப் போன்றவர்களுக்கு போதைப்பழக்கங்களிலிருந்து விடுபட இலவச ஆலோசனைகள் சிகிச்சை என்பவற்றை அளிக்கத் தயாராக உள்ளது. அவர்களையும் தொடர்புகொள்ளுங்கள்.

**இலவச மருத்துவ ஆலோசனைகளை**

'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார்

டாக்டர்

**எஸ்.அருள் ராமலிங்கம்**

நீங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி

இலவச மருத்துவ ஆலோசனை

'சுடர் ஒளி'

85, ஜயந்த மல்லிமாராய்ச்சி மாவத்தை கொழும்பு - 14.

சுடர் ஒளி

12, டிசம்பர் - 18, டிசம்பர், 2010

85, ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14 டெலிபோன்: 0115738005
பாக்ஸ்: 0114734404
E-mail: editorial@sudaroli.com

## இலங்கை இனப்பிரச்சினையும் இந்தியாவின் நிலைப்பாடும்

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா அண்மையில் கொழும்பு வந்தபோது தமிழ்க்கட்சிகளுடனும் பேசுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

அவரது நிகழ்ச்சி நிரலிலும் அதற்கான காலம், நேரம் குறிக்கப்பட்டிருந்தது. தமிழ்க்கட்சிகளுடனான சந்திப்பின்போது இனப்பிரச்சினைத் தீர்வில் நம்பிக்கை அளிக்கக்கூடிய கருத்துக்கள் இந்திய தரப்பிலிருந்து வெளிவரலாம் என்று தமிழ்மக்கள் எதிர்பார்த்திருந்தனர். ஆனால் ஏமாற்றத்திலேயே அது முடிந்தது. இந்திய வெளிவிவகார அமைச்சர் தமிழ்மக்களின் பிரதான கட்சியான தமிழ்த்தேசியக் கூட்டமைப்பையும் சந்திக்கவில்லை. தமிழ்க்கட்சிகளின் அரங்கத்தையும் சந்திக்கவில்லை. கிருஷ்ணாவின் இறுதிக்கட்ட நிகழ்ச்சிநிரலில் தவிர்க்க முடியாத மாற்றங்கள் ஏற்பட்டதால் தமிழ்க்கட்சிகளுடனான சந்திப்பு இடம்பெறவில்லை என்று அப்பொழுது கூறப்பட்டது. எனினும் இதில் ஏதாவது அரசியல் இருக்கலாம் என்று அப்போதே ஊகிக்கப்பட்டது. அந்த ஊகம் தற்பொழுது சரியாகி விட்டது.

இலங்கை இனப்பிரச்சினை தீர்வில் இந்தியா தலையிட மாட்டாது என்று இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர்மேனன் இலங்கையில் இருந்து புதுடில்லி சென்ற சிரேஷ்ட பத்திரிகை ஆசிரியர்களிடம் தற்போது தெரிவித்துள்ளார். இனப்பிரச்சினைத் தீர்வில் தம்மிடம் ஓர் தீர்வுத்திட்டம் இருப்பதாக ஜனாதிபதி ராஜபக்ஷ சமீபத்தில் இந்து பத்திரிகை ஆசிரியர் ராமுக்கு அளித்த பேட்டியில் கூறியிருந்தார்.

தற்போது சிவ்சங்கர்மேனன் கூறுகிறார், இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியா தலையிடமாட்டாது தமிழ்க்கட்சிகள் ராஜபக்ஷ அரசுடன் பேச்சு நடத்தித் தீர்வு காணவேண்டும் என்று.

ஆகவே இந்திய அரசாங்கத்தின் போக்கில் எதுவித மாற்றமும் ஏற்பட இடம் இல்லை என்பதைத் தமிழ்க்கட்சிகள் புரிந்துகொள்ள வேண்டும். இரண்டு அரசுகளும் திட்டமிட்டே செயலாற்றுகின்றன. இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண இதுதான் சரியான தருணம் என்று இந்தியா பேச்சளவில் கூறிக்கொண்டாலும் வன்னி இறுதி யுத்தத்தின்போது அது கொண்டிருந்த இலங்கை அரசுக்கான முழு ஆதரவு நிலைப்பாட்டை சிறிதளவும் மாற்றிக்கொள்ளவில்லை. இலங்கை அரசாங்கமும் இனப்பிரச்சினையில் இந்தியா உட்பட வெளிநாடுகள் தலையிடுவதை விரும்பவில்லை. இலங்கை அரசுக்கு ஆதரவாகச் செயற்படும் இந்தியாவும் இதனையே சொல்லியிருக்கிறது.

ஆகவே தமிழ்க்கட்சிகள் இனியும் இந்தியாவை நம்பிப் பயன்இல்லை.

# விட்டுக்கொடுப்பும் பொறுமையும் குடும்ப மேம்பாட்டுக்கு அவசியம்



**கேள்வி :** எனது குடும்பத்தில் இரண்டு ஆண்களும் இரண்டு பெண்களும் என நான்கு பேர் இருக்கிறார்கள். எங்களுக்கிடையில் எந்த விதமான பெரிய குழப்பம் எதுவும் இல்லை. ஆனாலும் சில பங்கீட்டு விடயங்களில் எங்களுக்கிடையில் பெற்றோர் அநீதியாக நடந்து கொள்கிறார்கள். என்றாலும் இதனை நாங்கள் பாரதூரமாக எடுத்துக்கொள்வதில்லை. ஆயினும் மனதளவில் சில சலிப்புகள் அவ்வப்போது வந்து செல்லும். அவற்றை நாங்கள் வெளிக்காட்டிக் கொள்வதில்லை. எனது கேள்வி என்னவென்றால் இப்படியான செயற்பாடுகள் சரியானவை அல்லது இத்தகைய மனச் சங்கடங்களை நாம் பொறுத்துக் கொள்ளவேண்டுமா?

**பதில் :** குடும்ப அங்கத்தவர்களுக்கிடையில் மட்டுமல்ல முன் பின் அறிமுகம் இல்லாதவர்களிடம் கூட நீதியாக நடந்து கொள்ள வேண்டும் அதுதான் - மனிதாபிமானம்.

அநீதி , பக்கச் சார்பு, ஓரவஞ்சனை, பாரபட்சம், புறக்கணிப்பு என்பன எங்கெங்கு தலை காட்டுகின்றனவோ அங்கெல்லாம் கசப்புணர்வுகளும் மனஸ்தாபங்களும் முரண்பாடுகளும் முளை விட ஆரம்பிக்கும் . அதன் தொடர் நிகழ்வுகளாக மனக்காயங்களும் பின்னர் பழிவாங்குதல்களும் மெல்ல மெல்லத் தொடங்கும். இது காலப்போக்கில் குடும்பங்களிலும் சமூகங்களுக்கிடையேயும் நிலவுகின்ற மகிழ்ச்சியையும் மன நிறைவையும் இல்லாமல் செய்யும். அமைதியும் சீர்குலையும்.

உங்களது அந்தரங்கப் பிரச்சினைகள்
மற்றும் குடும்பப் பிரச்சினைகள்,
சந்தேகங்கள் தொர்பான கேள்விகளுக்குப்
பதிலளிக்கிறார் உள்நல ஆலோசகர்
ஏ.எச்.ஏ.ஹுஸைன்
கேள்விகள் வந்துசேரவேண்டிய முகவரி:
A.H.A. HUSSEIN
KAYAR ROAD, ERAVUR.
E-mail: abdulhussein525@gmail.com

எனவே இத்தகையதொரு பாதக நிலையை அடைவதற்கு முன்னர் எமது மனப்பாங்குகளையும் விழுமியங்களையும் சிறப்பானதாக வளர்த்துக் கொள்ள வேண்டும். சில பெற்றோர் ஆழமான மெல்லிய உணர்வுகளைப் புரிந்து கொள்ளாமல் நடப்பார்கள் அவர்களிடம் சந்தர்ப்ப சூழ் நிலைகளைப் பார்த்து நாசுக்காக (மனத்தைப் புண்படுத்தாத தன்மை) நிலைமையை விளங்கப்படுத்த வேண்டும்.

பல சந்தர்ப்பங்களில் இந்த விடயத்தில் அதிகளவான விட்டுக் கொடுப்பும் தியாகமும் பொறுமையும் தேவைப்படும். அதேவேளை நீங்களும் எதிர் காலத்தில் ஒரு பெற்றோராகப் போகின்றவர்கள் என்பதால் உங்களுக்கு ஏற்பட்ட அனுபவப் பாடத்தை முன்னுதாரணமாகக் கொண்டு உங்கள் பிள்ளைகளுக்கிடையிலும் ஏனையோருக்கிடையிலும் நீதியாக நடந்து கொள்வதோடு அவற்றையும் ஏனைய சிறந்த நெறிமுறைகளையும் கற்றுக் கொடுக்கவும் வேண்டும்.

**கேள்வி :** எனது அலுவலகத்திலுள்ள ஒருவர் மகா கஞ்சத்தனமானவர், பேனாவில் தொடங்கி சாப்பாடு வரையிலும் எப்பொழுதும் மற்றவர்களையே எதிர்பார்த்துக் காத்திருப்பார் , பல சந்தர்ப்பங்களில் வாய்விட்டு இரந்து கேட்பார். மோட்டார் சைக்கிளில் வருவார். அதனை அலுவலகத்தில் வைத்து விட்டு தனது சொந்த அலுவல்களுக்காக சக ஊழியர்களின் சைக்கிளை எடுத்துக்கொண்டு போவார். இப்படிப்பட்டவர்களிடம் எப்படி நடந்து கொள்வது? இவர்களுக்கு எவ்வாறு அறிவுரை வழங்குவது?

**பதில் :** உண்ணுங்கள் பருகுங்கள் ஆனால் வீண் விரயம் செய்யாதீர்கள் என்கின்ற நபி பெருமானாரின் அருள் மொழி வாக்கு ஒன்றும் உள்ளது. சிக்கனமாக இருப்பதில் தவறேதுமில்லை என்பதைத்தான் இந்த நபிமொழி எமக்குப் போதிக்கிறது.

நீங்கள் குறிப்பிட்டது போன்று கஞ்சத்தனம், கருமித்தனம், உலோபித்தனம் என்பவை பலரிடம் பொதுவாக உள்ள குணாம்சங்கள்.

மனிதர்களில் சிலர் பேராசையால் சூழப்பட்டிருக்கிறார்கள். அத்தகைய மனப்பாங்குகள் தான் இவ்வாறான கஞ்சத்தனம், கருமித்தனம், உலோபித்தனம் என்பவற்றுக்கு வழிவகுக்கின்றன. இதனால் சிலர் உந்தப்பட்டு தமது சுயமரியாதையையும் இழந்துவிட்டு நிற்கிறார்கள்.

அனைத்தையும் வாரிச்சுருட்டிக் கொண்டு தாமே எல்லாவற்றையும் அனுபவிக்கவேண்டும் என்பதே இவர்களது பேராசை. இவர்கள் இப்படி நினைத்தாலும் கடைசியில் ஆகப்போவது ஒன்றுமில்லை.

இவர்களைக் கையாளும் விடயத்தில் ஒரு வித நகைச்சுவை கலந்த கடினப்போக்கையும் அதேவேளை நாகரிக நடத்தையையும் கடைப்பிடிக்க வேண்டும். நேரடியாகவே உண்மையைச் சொல்ல வேண்டும் . அவரைப் போக விட்டு பின்னால் கதைப்பது கதைப்பவர்களின் பலவீனமாகவே கருதப்படும். அதேவேளை ஒருவரைத் திருத்த அத்தகைய போக விட்டுப் பின்னால் கதைக்கும் போக்கு ஒரு போதும் பயன்படாது. முயன்று பாருங்கள்.!

**கேள்வி :** எங்கள் வீட்டில் மொத்தமாக ஏழு பேர். நடுத்தர வசதிதான். நான் தான் மூத்தவள். ஓர் அலுவலகத்தில் பணியாற்றுகிறேன். அதேவேளை கஷ்டப்பட்டும் உழைக்கின்றேன். மற்றவர்களும் தொழில்புரிகின்றார்கள். இங்கு என்ன பிரச்சினை என்றால் என்னைத் தவிர மற்ற அனைவரும் ஆடம்பரப்பிரியர்கள். தமக்கு உதவாத அத்தியாவசியமில்லாத கண்டதையெல்லாம் வாங்குவார்கள். சிலவேளை அவை ஒன்றுக்குமே பயன்படாத பொருட்களாகக்கூட இருக்கும். பல சந்தர்ப்பங்களில் இவற்றைச் சகித்துக் கொண்டிருப்பது கூட சங்கடமாக இருக்கும். சமயங்களில் கவலை தாளாமல் மனம் வெதும்புவதுமுண்டு. என் குடும்பத்தில் காணப்படும் ஆடம்பர அதேவேளை அநாவசிய செலவுகளைக் கட்டுப் படுத்த என்ன வழி? ஆலோசனை சொல்லுங்கள்.




**பதில் :** இது எமது கலாசார சூழலிலுள்ள பொதுவானதொரு பிரச்சினைதான். இதற்குப் பல காரணங்கள் இருக்கக்கூடும். வரவு மற்றும் செலவுகள் திட்டமிடப்படாமை, பொதுவாக எதிர்காலம் பற்றிய விழிப்புணர்வின்மை, அத்தோடு பெருமையடித்துக் கொள்ளல் போன்ற பல்வேறு காரணங்கள் இருக்கலாம். ஏற்கெனவே கூறியது போன்று கலாசாரப் பின்னணியின் தாக்கம் இந்த விடயத்தில் கூடுதலாகவே காணப்படும். ஆயினும் அதிலிருந்து புற நடையாக விடுபட்ட உங்களைப் போன்ற பலர் நல்ல நிலைக்கு வந்திருக்கிறார்கள்.

அயல் வீட்டுக்காரர் தனது தேவைக்கென்று ஏதாவதொரு பொருளை வாங்கி விட்டால் , தங்களுக்கு அது தேவை இல்லாவிட்டாலும் எமது தன்மானம் என்னாவது என்று கருதி அயல் வீட்டுக்காரர் வாங்கிய பொருளை விட விலை சற்று அதிகமானாலும் பரவாயில்லை எப்படியாவது நாமும் வாங்க வேண்டும் என்ற மன நிலையைப் பின்னணியாகக் கொண்டது எமது கலாசாரம். கடன் பட்டாவது மற்றவர்களுக்குக் காட்டுவதற்காக வாங்கி விடுவார்கள். பின்னர் அந்தப் பொருட்கள் வீட்டில் பாவனையின்றிப் பிரயோசனமற்றுப் போய்க்கிடக்கும்.

அதேவேளை பெருமையடிப்பு என்று எதுவித காரணமும் இல்லாமல் சும்மாவே செலவு செய்யும் பழக்கமும் பலரிடம் இருக்கிறது. இப்படி ஒன்றுக்கும் உதவாத ஊதாரித்தனமான செலவுகள் செய்த பலர் நடுத்தெருவில் நின்ற பல படிப்பினை ஊட்டும் சம்பவங்களும் உண்டு. இதில் பல பிரபலங்களும் அடங்குவார்கள்.

ஆடம்பர அநாவசிய செலவுகளைக் கட்டுப் படுத்தும் ஆலோசனை கேட்டிருந்தீர்கள். அதற்கோர் முன்மாதிரியாக நீங்களே உதாரணமாக இருக்கிறீர்கள். உங்களை அவர்கள் முறையாகப் பின்பற்றினாலே முன்னேறிவிடலாம்.

ஊதாரிகளின் உழைப்பும் ஊதியமும் எங்கோ ஓர் மூலையில் இருக்கும் தந்திரமான புத்திசாலியின் பணப்பெட்டியை நிரப்பும்.

# வடபகுதியில் சிங்களக் குடியேற்றங்களைத் தொடர்ந்து, மலையகப் பெருந்தோட்டக்காணிகளும் பறிபோகும் அபாயம்...




வடபகுதியில் மேற்கொள்ளப்படும் சிங்களக் குடியேற்றங்களைத் தொடர்ந்து மலையகப் பெருந்தோட்டக்காணிகளும் பறிபோகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. ஜனாதிபதி தனது வரவு-செலவுத் திட்டத்தில் இதனைக் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

இதன் விபரீதத்தைச் சிறிதும் உணராத தலைமைகள் இதனைப் பாராட்டி சபையில் வாழ்த்துமடல்களை வாசிக்கின்றனர். இவர்களுடைய வாழ்த்துமடல்கள் அவர்களுக்கே மரணசாசனமாக அமையப்போகின்றன. இதனைச் சிந்திக்க இடம்கொடுப்பதில்லை இவர்களது பதவிமோகம்.

இவ்விடயம் தொடர்பாக மலையகத் தலைமைகள் தமது ஈகோ, பிடிவாதம், திமிர்த்தனம், வரட்டுக் கௌரவம் என்பவற்றை ஓரம்கட்டி வைத்துவிட்டு தங்களுடைய சமுதாய அக்கறையுடன் ஒன்றிணைந்து ஒரு செயற்றிட்டத்தை விரைந்து செயற்படுத்தவேண்டும்.

மலையகப் பெருந்தோட்டங்களில் பயிரிடப்படாமல் இருக்கும் தேயிலை, இறப்பர் காணிகள் சுவீகரிக்கப்பட்டு சிறு தேயிலைத் தோட்டப் பயிர்ச்செய்கையாளர்களுக்குப்



பகிர்ந்தளிக்கப்படும். மீள் நடுகைக்கு 50,000 ரூபாவும், இடைப்பயிர்ச்செய்கைக்கு 10,000 ரூபாவும் ஊக்குவிப்பாக வழங்கப்படும் என்று திட்டவட்டமாக ஜனாதிபதி கூறியுள்ளார்.

காலங்காலமாக இத்தோட்டங்களுக்காகத் தமது உடல், பொருள், உயிர் அனைத்தையும் தியாகம் செய்த காணியற்ற தோட்டத் தொழிலாளர்களுக்கு காணி வழங்கப்படும் என ஒரு வார்த்தை கூட இல்லை. இங்கே கடந்தகால சம்பவங்களை மலையகத் தலைவர்கள் சிறிது திரும்பிப் பார்க்கவேண்டும்.

மாறிமாறி வரும் அரசுகள் ஒவ்வொரு முறையும் தேர்தல் வெற்றியைக் கொண்டாடும் வகையில் தமது ஆதரவாளர்களுக்கும், போஸ்டர் ஒட்டியவர்களுக்கும் தேயிலை, இறப்பர் தோட்டக் காணிகளைப் பிடித்து பிரித்துக் கொடுத்துள்ளனர். தோட்டங்களையும் கிராமங்களையும் ஒன்றிணைக்கின்றோம் என்று கூறிக்கொண்டு தோட்ட அபிவிருத்திக்கு ஒதுக்கிய பணத்தில் கிராமங்களுக்குப் பாதை போட்டனர்.

குறிப்பாக சப்ரகமுவ பிரதேசத்தை உற்றுநோக்குவோம். அங்கு ஒரு தேர்த்திருவிழா, கலைவிழா, சங்கீத மேடை, திருமணம், சடங்கு என ஒரு வீட்டில் அல்லது கிராமத்தில் ஏற்படும் தனிப்பட்ட தகராறுகள், சண்டைகள் தோட்டத் தொழிலாளர்களின் குடியிருப்புக்களைத் தீவைத்துக் கொளுத்துவதிலும், உடைமைகளைச் சூறையாடுவதிலும், அடித்து விரட்டி கொலைசெய்வதிலும் தான் முடிந்துள்ளன. தேயிலை, இறப்பர், தோட்டக்காணிகளில் தொழிலாளர்களின் குடியிருப்புக்கு அருகில் வசிக்கும் பெரும்பான்மை இனத்தவர்களே இந்த வன்முறைகளில் ஈடுபடுகின்றனர்.

வருமுன் காக்கவேண்டிய பொலிஸார் எரிந்த வீடுகளுக்கும் சூறையாடப்பட்ட வீடுகளுக்குமே காவல் இருக்கின்றனர். அரசியல் தொழிற்சங்கத் தலைவர்களோ ஊடகங்களுக்கு அறிக்கை விடுவதுடன் தமது கடமை முடிந்துவிட்டதாக ஓய்ந்துவிடுகின்றனர்.

நமது தலைவர்கள் தம்மைக்காப்பாற்றுவார்கள் என்று மாதாமாதம் சந்தா செலுத்தி வரும் தொழிலாளர்கள் கடைசிவரை நடுறோட்டில்தான்!

கம்பளை, கண்டி, கலஹா, நாவலப்பிட்டி, புசல்லாவ ஆகிய பிரதேசங்களில் ''ஒட்சா'' அபிவிருத்தித் திட்டம் என்ற பெயரில் ஒரே இரவில் விரட்டியடிக்கப்பட்ட தோட்டத்தொழிலாளர்கள் நகரில் பிச்சைக்காரர்களாக - ஒரு வேளை சோற்றுக்காக கஷ்டப்படுவதையும், பசியால் அழுத குழந்தையின் பால் மாவிற்காக இளம் பெண்களின் கற்பு களங்கமாக்கப்பட்ட சம்பங்களையும் இந்தத் தலைவர்கள் இன்று மறந்துவிட்டார்கள்.

தோட்டத்தொழிலாளர்கள், ''மண்தோன்றா காலத்தே முன்வந்த மூத்த தமிழ்'' என்பது போல் தோட்டங்கள் உருவாகும் முன்னரே வந்தவர்கள் தோட்டத்தமிழ்த் தொழிலாளர்கள். காட்டை அழித்து செல்வங்கொழிக்கும் பூமியாக மாற்றி விட்டார்கள். ஆனால், அக்காணிகளில் அரையங்குலம் கூட அவர்களுக்கு சொந்தமாக இல்லை.

ஏன் இல்லை? 'தோட்டங்களில் மாடிவீடு கட்டிக்கொடுத்துள்ளோம்; ஏழு பேச்சில், பத்துப்பேச்சில் காணியுடன் வீடு கட்டிக்கொடுத்துள்ளோம்' என்று மலையகத் தலைமைகள் பெருமை

இரா.புத்திரசிகாமணி

பேசலாம். இவ்வாறு வழங்கப்பட்ட வீடுகளுக்கு உரிய காணி உறுதிகள் கொடுக்கப்பட்டுள்ளதா? அக்காணிகளை வைத்து வங்கிகளில் கடன்பெற முடியுமா? இப்போதும் கூட மின்சாரம் பெறவும், நகரில் இருந்து குடிநீர் பெறவும் தோட்டத்துறையின் சிபாரிசுக் கடிதம் வேண்டும் என்பதை இவர்கள் அறிய மாட்டார்களா?

அதேவேளை அரசியல் தலைவர்களுக்கு போஸ்டர் ஒட்டியவர்களுக்கும், மேடை அமைத்தவர்களுக்கும் தோட்டக் காணிகள் பிரித்துக்கொடுக்கப்பட்டு ஜீவபூமி, சுவர்ணபூமி எனக் காணி உறுதிகள் உடனுக்குடன் வழங்கப்பட்டுள்ளன. இவர்கள் எந்தத் தோட்டத்துரையிடமும் போய் லைட் கேட்கவேண்டியதில்லை.

காலம் காலமாக தோட்டத்தொழிலாளர்கள் அமைதியை விரும்புபவர்கள். அவர்களுக்கென தனியான கலை, கலாசாரம், பாரம்பரியம் என்பன உண்டு. ''கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'' என்பதின்படி கோவில் இல்லாத தோட்டங்களே இல்லை. கோவில் விழாக்களையும், பண்டிகைகளையும் ஒன்றுகூடிக் கொண்டாடி மகிழ்வார்கள். தோட்டங்களுக்கு அருகில் இருந்து திருவிழா பார்க்க வருபவர்களே அடாவடித்தனங்களிலும், வன்முறைகளிலும் ஈடுபடுகின்றனர்.

இப்போழுது தோட்டங்களில் தரிசாக இருக்கும் காணிகளும் சிறுதோட்டச் செய்கையாளர்களுக்கு பகிர்ந்து வழங்கப்படும் எனக்கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது. இங்கேதான் மலையகத் தலைமைகள் மிகவும் நிதானத்துடன் செயல்பட வேண்டும். தோட்டங்களில் தரிசாக இருக்கும் காணிகளின் விவரங்கள் திரட்டப்பட வேண்டும். அத்தோட்டங்களில் உள்ள வேலையற்ற இளைஞர், யுவதிகள் தோட்டத்தை உருவாக்க அர்ப்பணிப்புடன் செயற்பட்டவர்கள் என்ற பட்டியலைத் தயாரிக்க வேண்டும். இங்கே அரசியல், தொழிற்சங்க சாயம் பூசாமல் வர்க்கரீதியான பொதுநோக்குடன் அனைத்து தொழிற்சங்கத் தலைவர்களும் ஒரு மேசையில் அமர்ந்து இப்பட்டியலைத் தயாரிக்க வேண்டும். இந்தப்பொறுப்பை உங்கள் தொழிற்சங்கப் பிரதிநிதிகளிடமும், தோட்டக்கமிட்டி தலைவர்களிடமும் ஒப்படைக்காமல் தோட்டங்களிலுள்ள படித்த இளைஞர், யுவதிகளிடம் பொறுப்புக்கொடுக்க வேண்டும்.



வழமையாகக் காணிகள் வழங்கப் படும்போது அப்பிரதேச கிராமசேவகர் களிடம் பதிவுசெய்யப்பட்டவர்களுக்கு மட்டுமே வழங்கப்படும். அங்கே தோட்டத்தொழிலாளர்களின் பதிவுகள் கிடையாது. அங்கேயும் தொழிலாளர் களுக்கு பாரபட்சம் காட்டப்பட்டுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தை மலையகத் தலைமைகள் ஒரே குரலில் தம்மால் உண்டாக்கப்பட்ட தோட்டக் காணிகள் எங்கள் மக்களுக்கே வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை அரசின் முன்வைத்துத் தம்மவர்களுக்கு காணிகளைப்பெற்றுக்கொடுத்து அரசு அறிவித்த மானியத்தையும் வழங்கக் கோரிட வேண்டும். மலையகத் தலைமைகள் தமது போட்டாபோட்டியில் இச்சந்தர்ப்பத்தைத் தவறவிட்டால் வடக்கில் மேற்கொள்ளப்படும் குடியேற்றங்கள் போல் தோட்டக்காணிகளையும் இழக்க நேரிடும். இம்மக்கள் கடைசிவரை உங்களை மன்னிக்க மாட்டார்கள்.

# தொடர்வேன் மீண்டும்!

எங்கிருந் தாலும் எந்தன்
இதயத்தில் நிலைத்த நண்பா
திங்களோ சிலவாய் நாமும்
திருமுகத் தொடர்பே யின்றி
எங்கேயோ ஏனோ ஏதோ
இருந்துதான் விட்டோம், ஆனால்
தங்கிய நட்பு மீண்டும்
தழைத்திடத் தடைக ளில்லை!

சுட்டிடும் சுடரின் ஆட்சி
துயர்தரும் மதிய வேளை
விட்டுயான் பஸ்சை நீங்கி
வியர்த்திட நடந்து உந்தன்
கட்டிலம் வந்த போதில்
களைப்பிலை; களிப்பே கண்டேன்!
இட்டமாய் உன்றன் பேச்சில்
இன்றமிழ் ரசமும் உண்டேன்!

கவிஞனைக் கலந்த மாதின்
கைக்கனிச் சாறு தேனீர்
அவித்தநல் லரிசிச் சோறும்
ஆக்கிய மீன்கு ழம்பும்
சுவைத்தனன்! சுவைத்த போதில்
சுவையினில் முழுமை கண்டேன்
புவித்தலம் விட்டு நானும்
போம்வரை நினைவில் நிற்கும்!

வன்னிமண் விடுத்துத் தப்பி
வந்ததாம் நிலையை மீண்டும்
எண்ணியே பார்க்கும் வேளை
இதயத்தில் அச்சம் மொய்க்கும்!
எண்ணங்கள் எல்லா மந்த
இறையவன் அறிய வல்லான்
உண்மையாய் வாழ்ந்த தாலே
உயிருடன் வந்து சேர்ந்தோம்!

- கவிஞர் அ.கௌரிதாசன் -

# புதுயுகம் நோக்கிப் புறப்படு!

புதுயுகம் நோக்கிப்
புறப்படு தோழா
மதுயுகம் விட்டு
மறத்திங்கு வாடா!

வடியிலே மூழ்கின்
சருகதாய்ப் போவாய்
குடியது குலைந்து
கருகியே சாவாய்!

சம்பளப் பணத்தில்
கசிப்புநீ குடிக்க
சம்பலும் சோறும்
ருசிக்கிறார் மைந்தர்!

உனக்கொரு வீடு
வடிசாலை என்றால்
தனக்கெனத் தேடும்
சவக்காலை உன்னை!

நிகழ்காலம் உனக்கு
நிழலாக இருக்கும்
எதிர்காலம் உனக்கு
புதிராக அமையும்!

நிஜமான வாழ்க்கை
நீவாழ வேண்டின்
நிஜமாக மதுவை
நீயொதுக்க வேண்டும்!

ஏ.ஜெ.ஆர். ஷர்மின்

# மதியை தீய்க்குமே!

குறுக்கு வழியில் செருக்கில் நெருக்கி
கேடு செய்கிறான்-பொல்லா
கெடும்பு செய்கிறான்
கிறுக்க னாகி நெறிகள் பிறழ்ந்து
குற்றம் இழைக்கிறான்-வீணாய்
சிறையில் உழல்கிறான்!

நேர்மை யுள்ள நல்ல மனிதன்
நெஞ்சால் உயர்கிறான்-பரிந்து
தஞ்சம் தருகிறான்
பேர்கள் ஓங்க புகழை ஈட்டி
சரிதம் படைக்கிறான்-தொண்டில்
துரிதம் அடைகிறான்!

சான்றோன் என்ற பட்டம் கண்டு
செகத்தை வெல்கிறான்-வாழ்ந்த
யுகத்தைக் கொள்கிறான்
ஆன்றோ னாக அவனி காத்து
ஆட்சி புரிகிறான்-துன்பில்
மீட்சி தருகிறான்!

கெட்ட குணமும் கொடிய போக்கும்
குடும்பம் வெறுக்குமே-ஏற்க
குலமும் மறுக்குமே
மட்ட மான செருக்குக் கிறுக்கு
மனிதம் மாய்க்குமே-மமதை
மதியைத் தீய்க்குமே!

-மூதூர் கலைமேகம்-

# வீரமா முனிவர்

*இத்தாலி நாட்டவராய் இருந்தாலும் எம்மினத்தார்*
*சொத்தாகித் தொண்டுசெய்த சோதியவர்-நித்தமன்பாய்*
*வீரமா முனிவரென விளம்பஅவர் சொல்வியந்து*
*தீரமுரைக்கின் தமிழே தேன்.*

*பரமார்த்த குருகதையைப் படைத்துநகைச் சுவைபடர*
*தரமாய்த் தமிழ்செய்த தந்தையவர்-சிரமேற்கும்*
*தேம்பா வணிநயந்து தெள்ளுதமிழ் சேர்த்துஎழில்*
*பூம்பாப் பொழில்விளைத்தான் பொன்.*

*இத்தாலி கிரேக்கம் இலத்தீன் பிரஞ்சுஎனும்*
*முத்தான மொழிபலவும் கற்றுயர்ந்தோன்-அத்தனையும்*
*கற்றவழி நின்றுலகோர் கனிவுடன்நல் அன்புநெறி*
*பற்றிடவே செய்தான் பணி.*

- நெடுந்தீவு மகேஷ் -

# நெஞ்சோடு நெஞ்சம்

## கடவுளை வெறுக்காதே!

அன்பு அடக்கம் பொறுமை
அமைதி யார்க்கும் உடைமை
வன்பு கொடுமை கோபம்
வாழ்வு நெறியின் மடமை.

கல்வி கடமை ஒழுங்கு
காதல் அன்பு பணிவு
செல்ல அன்னை சேவை
சிறந்த வாழ்வின் போக்கு.

ஆசை பாசம் மோசம்
அண்டி வந்தால் நாசம்
ஓசை ஒளியின் வடிவம்
ஒருவன் தந்த படிமம்.

கருணை கண்ணியம் கவிதை
காதல் வாழ்வின் ஊட்டம்
சிறுமை கயமை சீற்றம்
சிறந்த வாழ்வின் மாற்றம்.

பெற்ற தாயைப் பேணு
பெரியோர் வார்த்தை போற்று
கற்ற கல்வி எல்லாம்
கடுகு என்றே எண்ணு.

- ம. கார்த்திக் -

# குறிஞ்சிக் கோவில்கள்

## டயகாமம் நகர் ஸ்ரீ அம்மன்



- கவிஞர் ஸி.எஸ். காந்தி -


அபயக்கரங் காட்டும் அம்மைக்கு மேற்கு
டயகாமம் நகரில் கோயில்-ஆகா
அற்புதச் சிற்ப வாயில்
உபயக்கரம் நீட்டும் நகரத்து முகப்பில்
வழியோரங் காக்குங் கோயில்-என்றும்
பழிபாவம் நீக்குங் கோயில்!

பார்வையை ஈர்க்குந் தேயிலைப் போர்வை
பரந்திங்கு செழுமை யூட்டும்-என்றுஞ்
சிறந்திங்கு வறுமை யோட்டும்
சீர்சேர்க்கும் ஊரில் பேர்வாங்கும் நகரில்
தார்பூணும் அம்மை கோயில்-அந்த
கார்மேகன் தங்கை கோயில்!

காலைக்கதிர் வீசி பாற்கரன் கிழை
கவின்மலை ஏறிப் பார்ப்பான்-இந்தப்
புவிபாவை பொலிந்து நிற்பாள்
மாலைகள் பூண்டு மணிமகுடங் கொண்ட
அன்னையும் பூசை ஏற்பாள்-வாட்டும்
இன்னல்கள் மாசைத் தீய்ப்பாள்!

விரிவாகை, முருங்கை, இலாடாப்பு, சவுக்கை
நிழலீந்து குளிர்மை யூட்டும்-எங்கும்
அழகீந்து பார்வை ஈட்டும்
பரிகாரங் காண பக்தர்கள் நெஞ்சம்
பராசக்தி கோயில் நாடும்-காவில்
முகாரிபொன் வண்டு பாடும்!

கருங்கோடு போல நெடும்பாதை இங்கு
நகர்நோக்கி சுழித்து ஏகும்-குன்றச்
சிகரங்கள் கிழித்துப் போகும்
வருங்கேடு தடுக்கும் மாடனும் மதுரை
வீரனும் வழியில் காவல்-நொண்டி
தீரரும் பக்கம் நிற்பார்!




வேதனை கண்டு இறையை
வெறுப்பதேன் மனிதா? வாழ்வில்
சோதனை இயற்கை யன்றோ!
சோர்ந்துநீ துஞ்ச லாமோ?
சாதனை புரிய வாழ்வில்
சந்தர்ப்பம் வாய்க்கும்; நொந்து
பாதகன் என்று அந்தப்
பரமனை இகழ்தல் பாவம்!

இன்னல்கள் வாட்டும் போழ்து
இறையில்லை என்ப தாமோ?
கண்ணில்லா குருடர் தாமும்
கடவுளை நம்பி யுள்ளார்
சின்னநின் புத்தி யாலே
சிந்திக்க மறந்து போனாய்
என்னவழி ஆய்ந்தாய் தின்ன?
திட்டுதல் இறையை ஏனோ?

தீராத பிணிகள் நின்னை
தீண்டவும் இல்லை; என்றுஞ்
சீராக இயங்கும் யாக்கை
சிறப்பாக அளித்து அன்பு
மாறாத இறையும் நின்னை
மகிதலம் மீது வைத்தும்
பேறாக எண்ணி டாது
பரமனை இகழ்தல் பாவம்!

கேட்டவை கிட்டா விட்டால்
கடவுளை நோக லாமோ
போட்டவை முளைக்கும்; சற்றுப்
பொறுமைகொள்; தெம்பு பூண்பாய்!
நீட்டிய அருட்க ரத்தால்
நிச்சயம் அருள்வான் வல்லோன்
காட்டுவாய் பக்தி நித்தம்
கடவுளை இகழ்தல் வேண்டாம்!

- வி.எம். இன்ஸார் -

# சோனியா



**சோ**னியா காந்தி... மூன்று இந்தியப் பிரதமர்களைத் தந்த குடும்பத்தின் மகாராணி. இந்தியாவின் தலைஎழுத்து, இப்போது சோனியாவின் 'கை'களில் என்றால், அது மிகை இல்லை!

✱ இத்தாலியின் லூசியானாவில் 1946ஆம் ஆண்டு டிசம்பர் 9ஆம் திகதி பிறந்தார். எட்விஜ் அன்டொனிய அல்பனா மெய்னோ (Edvige Antonia Albina Maino) என்பது இயற்பெயர். அப்பா, ஸ்டெஃபானோ. அம்மா, பாலோ மெய்னோ.

✱ கட்டட ஒப்பந்ததாரராக இருந்த தந்தை யின் மறைவுக்குப் பிறகு, தாய் மற்றும் இரண்டு சகோதரிகளுடன் இளமைக் காலம் முழுவதையும் ட்யூரி நகரத்தில் கழித்தார்.



✱ 18ஆவது வயதில் கல்விச் செலவுகளைச் சமாளிக்க, உணவகம் ஒன்றில் வெயிட்டராகப் பகுதி நேரப் பணி புரிந்தார். அப்போதுதான், ட்ரினிட்டி கல்லூரியில் பிடித்த ராஜீவ் காந்தியோடு அறிமுகம்.

✱ ஹோட்டலில் சோனியாவுக்கு அறிமுகமான கிறிஸ்டியன்தான் ராஜீவை அவருக்கு அறிமுகப்படுத்தினார். காதல் அத்தியாயங்களுக்குப் பிறகு, 'ராஜீவ்தான் கிறிஸ்டியனை வற்புறுத்தித் தன்னிடம் அறிமுகம் ஏற்படுத்திக்கொண்டார் என்ற உண்மையைக் கண்டுபிடித்தார் சோனியா.

✱ "நீ சந்திக்கும் முதல் பெண் உனக்குச் சரியானவளாக இருக்க வேண்டும் என்ற எந்தக் கட்டாயமும் இல்லை" என்பீர்கள். ஆனால், நான் பார்த்த முதல் பெண்ணே, எனக்கு மிகச் சரியான வளாக அமைந்துவிட்டாள்!" - சோனியாவை சந்தித்தவுடன், தன் அம்மா இந்திராவுக்கு ராஜீவ் எழுதிய கடிதத்தில் இடம் பெற்றிருந்த வரிகள் இவை.

✱ சோனியாவைப் பார்க்க விரும்பினார் இந்திரா காந்தி. அதைக் கேட்டதும் படபடப்பில் சோனியாவுக்கு மயக்கமே வந்துவிட்டது. அதைக் கேள்விப்பட்ட இந்திரா, சோனியாவின் தாய்மொழியான ஃபிரெஞ்சிலேயே பேசி, அவரை இயல்புக்குக் கொண்டுவந்தார்.

✱ திருமணம் முடிந்து இந்தியாவில் குடியேறிய பிறகும், பயம் கலந்த மரியாதையுடன் இந்திராவிடம் ஒட்டாமல் வளைய வந்தார் சோனியா. ஒரு விசேஷ வீட்டில் சோனியாவின் கவுனில் தையல் பிரிந்து இருந்ததைக் கண்டு, ஊசி நூலை வரவழைத்து இந்திரா தைத்துக்கொடுக்க, அந்தப் புள்ளியில் பலப்பட்டு இருக்கிறது மாமியார் - மருமகள் இடையேயான தோழமை.

✱ புது மருமகள் சோனியாவை இந்திய உணவுகளின் காரமும் புடைவைகளும் மிரட்டின. கார உணவுகளைத் தவிர்த்த சோனியா, ஆரம்ப நாட்களில் சேலை அணிந்தபோது அது எப்போதும் அவிழ்ந்து விடலாம் என்ற பயத்திலேயே இருப்பார்.

✱ வெளிநாட்டவர் என்று தன்னைக் குறிப்பிடும் விமர்சனங்களுக்கு, "எனது தோற்றம் அப்படி இருக்கலாம். ஆனால், மன தளவில் நான் ஓர் இந்தியப் பெண்!" என்று சுளீர் பதில் அளிப்பார் சோனியா.

✱ ராஜீவ் - சோனியா ஜோடி டெல்லிக்குக் குடி வந்த புதிதில், லேம்ப்ரட்டா ஸ்கூட்டரில்தான் ஊர் சுற்றுவார்கள். இப்போதும் அந்த லேம்ப்ரட்டா ஸ்கூட்டர் சவாரிதான் தனக்கு மிகவும் பிடித்திருந்தது என்பார்.

✱ 'சோனியா, நீ இந்தக் குடும்பத்தின் மீது அதிக பாசம் வைத்திருக்கிறாய். உன்னில் நான் என்னைக் காண்கிறேன்!' - சோனியாவுக்கான கடிதத்தில் இந்திரா எழுதிய வரிகள் இவை.

✱ முதல் கர்ப்பத்தில் கருவிலேயே சிதைந்து விட்டது குழந்தை. ஒன்பது மாத முழுமையான ஓய்வுக்குப் பிறகு, பெற்றெடுத்த ஆண் குழந்தைதான் ராகுல். இரண்டு வருட இடைவெளிக்குப் பிறகு, பிரியங்கா பிறந்தார்.

✱ கிறிஸ்தவப் பின்னணிகொண்ட குடும்பத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும், ராகுல் மற்றும் பிரியங்காவுக்கு இந்து மதத்தையும், இந்தியக் கலாசாரத்தையும் கற்றுக் கொடுத்தே வளர்த்தார் சோனியா.

✱ 1986இல் தன் குடும்பத்தினருடன் காந்திஜியின் நினைவு மண்டபத்தில் சோனியா அஞ்சலி செலுத்திக்கொண்டு இருந்தபோது, ஒரு துப்பாக்கி தவறுதலாக வெடித்தது. அதன் தோட்டா சோனியாவின் பாதுகாவலரின் காது அருகே உரசிச் சென்றது. அப்போது பரபரப்பு ஏற்படுத்திய சம்பவம்.

✱ இந்திரா படுகொலையான சமயம், "நீங்கள் அரசியலில் ஈடுபட்டால், நான் உங்களை விவாகரத்து செய்துவிடுவேன்" என்று ராஜீவைப் பயமுறுத்தினார் சோனியா.

✱ ராஜீவ் காந்தி பிரதமராகப் பதவிப் பிரமாணம் எடுக்கவிருந்த சமயம், அவரது கைகளைப் பற்றிக்கொண்டு, 'அரசியல் வேண்டாம். அது உங்களை என்னிடம் இருந்து பிரித்துவிடும். எனக்கு ராஜீவ் வேண்டும்' என்று கண் கலங்கினார் சோனியா. அப்போது பிரமாண அழைப்பு வரவும், சோனியாவின் கைகளை மென்மையாக விடுவித்த ராஜீவ், 'நீ சம்மதம் அளித்ததாக நினைத்துக்கொண்டு செல்கிறேன்!' என்று கிளம்பிச் சென்றார்.

✱ 1991இல் ராஜீவ் காந்தி படுகொலையான பிறகு, 'இத்தாலிக்கு வந்துவிடு!' என்று அவரது குடும்பத்தினர் வற்புறுத்தியபோது மறுத்துவிட்டார் சோனியா. அதன் பிறகு, கிட்டத்தட்ட எட்டு வருடங்கள் கழித்து, 'நேருவின் குடும்பம்தான் காலங்காலமாக காங்கிரஸ் கட்சியை நிர்வகித்து வருகிறது என்று வற்புறுத்தி, காங்கிரஸ் தலைவர்கள்தான் அவரை அரசியல் பாதையில் பயணிக்கச் செய்தார்கள்.

✱ 2004 பொதுத் தேர்தலில், சோனியா தலைமையில் காங்கிரஸ் கட்சி பெரும்பாலான தொகுதிகளில் வென்றது. கூட்டணிக் கட்சிகளின் ஆதரவுடன் காங்கிரஸ் ஆட்சியமைக்க முயற்சித்தபோது, 'சோனியா இந்தியர் இல்லை' என்று சொல்லி, அவர் பிரதமர் பதவியில் அமர்வதை எதிர்த்தது பி.ஜே.பி உள்ளிட்ட எதிர்க் கட்சிகள். உடனடியாக மன்மோகன் சிங்கைப் பிரதமர் ஆக்கினார் சோனியா.

✱ பாட்டி, தந்தை ஆகியோரின் கொடூர மரணங்கள் காரணமாக, சோனியா நிச்சயம் பிரதமர் நாற்காலியில் அமரக் கூடாது என்பதில் அப்போது தீர்க்கமாக இருந்தார்கள் ராகுல் மற்றும் பிரியங்கா.

✱ அந்தச் சமயம் Forbes பத்திரிகை வெளியிட்ட 'உலகின் மிகவும் சக்தி வாய்ந்த 100 பெண்கள் பட்டியலில் சோனியாவுக்கு மூன்றாவது இடம் கிடைத்தது.'

✱ காஞ்சிபுரம் கைத்தறிப் புடைவைகள்தான் விசேஷத் தருணங்களின்போது சோனியா விரும்பி அணிபவை.

✱ தனக்குப் பிடிக்காதவர்கள், என்ன பேசினாலும் சலனம் இல்லாமல் அதைக் கேட்பார். அதே சமயம் பிடித்தவர்கள் தவறு செய்தால், உரிமையுடன் திட்டி அவர்களை நெறிப்படுத்துவார்.

✱ ராகுலின் வளர்ச்சிபற்றி யார் பெருமையாகப் பேசினாலும், பெருமிதத்துடன் கேட்பார். அதனாலேயே காங்கிரஸ் உறுப்பினர்கள் சோனியாவைத் தாஜா செய்ய ராகுலின் இளைஞர் அணிச் செயல்பாடுகளைப் புகழ்வது வழக்கம்.

✱ ஆஃப்கன் ஹவுண்ட், கோல்டன் ரெட்லிவர், கிரே ஹவுண்ட் போன்ற ஜாதி நாய்களும், கிளிகளும் ரொம்பவும் பிரியம்.

✱ முழு ஓய்வு எடுத்துக்கொள்ளும் ஞாயிற்றுக் கிழமை முழுக்க, கர்னாடக இசை மத்தியிலேயே இவரது நாள் கழியும்.

## மாத்திரைக் கவிதைகள்

என் வேர்கள் பக்கத்து ஊருக்குள்
ஊர்ந்தாலும் - என் விழுதுகள்
உங்களையே தாலாட்டும்!

★ ★ ★

கர்ப்பத்துள் இருக்கையிலேயே - என்
குழந்தைக்கு பெயர் வைத்துவிட்டேன்
அது ஆணா பெண்ணா என்று...
இன்னும் இனம் காணப்படவில்லை!

★ ★ ★

எதிர் வீட்டு ரோஜா - என்னை
எட்டிப்பார்க்கையில்... என்
வீட்டு மல்லிகைக்குத்தான் முள் குற்றும்.

★ ★ ★

வண்டல் வண்டலாய் என்னிடம்
கனவுகள் இருக்கின்றன - ஏனோ
இரண்டு விழிகளுக்குள்...

★ ★ ★

ஒரு வேளை - எமன் மன்னித்தாலும்
மனிதர்களுக்கு மரணம் நிச்சயமே!
மனிதர்களுக்கு மனிதர்களே
தீர்வு எழுதுவதால்,...

★ ★ ★

முதல் சந்திப்புகளில் - நீ
வள்ளலாய் இருந்தாய்
நிறைய நிறையக் காதலைத் தந்து...

★ ★ ★

அம்மாவின் கைகளில்!
விளக்குமாறை செங்கோலாகவும்...
அகப்பைக் காம்பை போர் வாளாகவும்
பார்த்ததால்... மகாராணியின்
மகன் என்ற நிமிர் எனக்கு...

★ ★ ★

கனவுகள் வாடிக்கையாய் வந்து
போனாலும் - வசந்தங்கள் தள்ளுபடி
விலைக்கு விற்பனையாகின்றன.

★ ★ ★

என் வரவை மறுதலித்து - நீ
கதவுகளை மூடிய போதும்
இரக்கக்காரி என்று இனங் கண்டேன்
யன்னலை மூட மறந்தாயே...

★ ★ ★

மலையாக உறவுகளின்
வாழ்வுச் சான்றுகள் எழுப்புக் கூடுகளோ
ஆனால் - கடவுள் இருப்பதை
எப்படி நம்பமுடியும்...

★ ★ ★

உறக்கம் தான் எனக்குப் பிடித்த
தபால்க் காரன் - அவன் தானே
உன் கனவுகளைக் கொண்டு
வந்து தருகிறான்!

★ ★ ★

பல்லாக்கில் உலா வரும்
பென்னம்பெரிய மனிதர்களே
நாளை நத்தையைப் போலாவது
எங்களை ஊரவிடுங்கள்...

★ ★ ★

விரக்தியின் தாவணியால் - என்
தேகம் மூடிய போதும்
அதன் பீத்தல்கள் என்னைத்
திரும்பிப் பார்க்க வைக்கின்றன...

★ ★ ★

புழுதியில் உட்கார்ந்து கொண்டு
உனக்கான நாற்காலியை
தங்கத்தில் செதுக்கிக்
கொண்டிருக்கிறேன்...

★ ★ ★

சீதையைக் கடத்திய அரக்கர்
பரம்பரையும் அழியவில்லை
சிலுவையை சுமத்திய யூதர்
பரம்பரையும் ஒழியவில்லை..!

(மாத்திரைகள் தொடரும்)

நெடுந்தீவு முகிலன்

# ஆற்றல் படைத்தோரின் நூலாக்கப் பணியில் குமரன் புத்தக இல்லம்

நீண்ட பாரம்பரியத்தைக் கொண்ட புத்தக வெளியீட்டு நிறுவனம்; ஆழ்ந்த அகன்ற அறிவிற்காய் தனது பங்களிப்பை வழங்கி வருகிறது. 1950களிலிருந்து இந்தியாவிலும் இலங்கையிலும் பல நூல்களை வெளியிட்ட அனுபவப் பின்புலத்துடன் 1994 ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட குமரன் புத்தக இல்லம் என்னும் இவ்வெளியீட்டகம் சமூக அறிவியல், மானிடவியல், கல்வியியல், உளவியல், கலை இலக்கியம் ஆகியதுறைகளில் தமிழ்மொழிக்கும், ஆழ்ந்த அகன்ற அறிவுக்கும் செழுமை சேர்க்கும் ஆய்வு நூல்களை வெளியிடுவதை நோக்காகக் கொண்டு இயங்கி வருகிறது. இவ் வெளியீட்டகம் இருபதுக்கும் மேற்பட்ட புலமை விடயத்தளங்களில் நின்று நானூற்றைம்பதுக்கும் மேற்பட்ட தலைப்புக்களில் நூல்களை வெளியிட்டு சாதனை படைத்து நிற்கின்றது.

இது மட்டுமன்றி சிறார்களின் அறிவு விருத்தியையும், உணர்ச்சிக் கூர்மையையும் மேம்படுத்தும் நோக்கில் '' இலக்கியன் வெளியீட்டகம்'' என்ற பெயரில் சிறுவர்களுக்கான நூல்வெளியீட்டகத்தையும், ஈழத்து தமிழ்புனை கதை இலக்கியத்தின் வளத்திற்கும், அதன் வளர்ச்சி மேம்பாட்டிற்கும் அணிசேர்க்கும் வகையில் ''புனைவகம்'' என்ற வெளியீட்டகத்தையும் ஆரம்பித்து புதிய முயற்சியில் தடம்பதித்துள்ளனர்.

தற்போது இவர்களினால் வெளியிடப்படும் நூல்கள் தரம் வாய்ந்தனவாகவும், அமைப்பில் பொலிவுத்தன்மையும், நேர்த்தியான கட்டமைப்பும், பார்வைக்கு அழகும், பிசகாத அச்சுப்பதிப்பும், தரமான தாளும், அழகான அட்டை முகப்பும் கொண்டிருப்பதைப் அவதானிக்கும்போது, இத்துறையில் அவர்கள் பெற்ற அனுபவம் உலகத்தரத்தை ஒத்தனவாக இருக்கிறது.

'நூலக தகவல் அறிவியல்' என்ற பகுதியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்விசார் நூலகர் அருளானந்தம் சிறிகாந்தலட்சுமியின் 'தகவல் வளங்களும் சேவைகளும்' மற்றும் தகவல்வள முகாமைத்துவம், விமலாம்பிகை பாலசுந்தரம் எழுதிய ' கல்வி நிறுவன நூலகங்கள்' ஆகிய நூல்கள் வெளிவந்துள்ளன. மேலும், ' நூலகங்களில் தகவல் தொழில்நுட்பம்' , ' நூலகப் பகுப்பாக்கம்'; ஓர் அறிமுகம் ஆகிய மூன்று நூல்களையும் எம்.பீ.எம்.பைரூஸ் அவர்களும், 'பாடசாலை நூலகம்; ஓர் அறிமுகம்' என்ற நூலை எஸ்.எம். கமால்தீனும் வழங்கியுள்ளனர்.

மெய்யியல் சார்ந்த நூல்களாக, கலாநிதி எம்.எஸ்.அனஸ் எழுதிய 'மெய்யியல்; கிரேக்க மெய்யியல் முதற்காலம் வரை', பேராசிரியர் எம்.ஹரியண்ணாவின் 'இந்திய மெய்யியல்', செ.கணேசலிங்கன் தந்த 'அழகியலும் அறமும்', 'சித்தர்கள் சித்தாந்தமும் அபிசேகமும்' என்பனவற்றை குமரன் புத்தக இல்லம் வழங்கிவைத்துள்ளது.

உளவியல் பரப்பிற்குள் ' உளவியல்சார் உளவளத்துணை அணுகுமுறை', 'சிக்மன் பிராய்டின் கனவுகளின் விளக்கம்', 'திருவள்ளுவரும் சிக்மன் பிராய்டும்' ஆகிய நூல்களையும் தந்து அவை புதிய நோக்கில் அணுகக்கூடிய ஆர்வத்தையும் தந்துள்ளனவாக இருப்பதை அவதானிக்கலாம்.

சைவ சித்தாந்தத்தினை மிக அடிப்படையிலிருந்து விளக்கும் பிரபலம் பெற்ற டாக்டர் எம்.முத்துராமனின் 'சைவ சித்தாந்தம்' எனும் நூல் இந்துசமயம், இந்துநாகரிகம் ஆகிய துறைகளில் கற்கும் மாணவர்களுக்கும் சைவ சித்தாந்தத்தினை முழுமையாக அறிய விரும்புகின்றவர்களுக்கும் உதவக்கூடியது.

குல. சபாநாதன் இலங்கையிலுள்ள வழிபாட்டுத் தளங்களாகிய 'கதிர்காமம்', 'நல்லூர் கந்தசுவாமி', 'நயினை நாகேஸ்வரி' என்று ஒவ்வொரு தனித்தனியான நூல்களை எழுதியுள்ளார். ஆலயங்கள் தொடர்பான புகைப்படங்களும் நூல்களில் இடம்பெற்றுள்ளன. கா.சி. குலரத்தினம் எழுதிய 'அறுவகைச் சமயங்கள்' எனும் நூலும், கலாநிதி ஏ.என். கிருஷ்ணவேணி எழுதிய 'இந்து நாகரிகம்' எனும் உயர்கல்விக்கு கற்கை நெறியாக உதவக்கூடிய நூலும், ஏழாலை ஐ.பொன்னையா தந்த 'சுவேதாஸ்வர உபநிடதம்' என்ற நூலும், கலாநிதி ஆனந்தகுமாரசாமியால் எழுதப்பட்டு நவாலியூர் சோ. நடராசாவினால் தமிழாக்கம் செய்யப்பட்டதான 'சிவானந்த நடனம்' என்னும் நூலும் சமய நூல்கள் வரிசையில் குமரன் புத்தக இல்லத்தினால் வெளியிடப் பட்டுள்ளன.




மேலும், சிறந்த நூலுக்கான தமிழக அரசின் விருதைப் பெற்ற 'சோழர் காலத்து கோயிலும் சமூக மும்' பேராதனைப் பல்கலைபக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி வல்லிபுரம் மகேஸ்வரனால் எழுதப்பட்டது. கோயில்கள் பற்றிய ஆய்வுகள் நிறைய இதுவரை செய்யப்பட்டுள்ளன. ஆனாலும், பெரும்பாலும் அவ்வாய்வுகள் கோயில் களை ஒரு சமய நிறுவனம் அல்லது கட்டடக்கலை, சிற்பக்கலை ஆகியவற்றின் நிலைக்களம் என்றே நோக்கியுள்ளன. அதற்கு மாறாக திரு.வ. மகேஸ் வரன் கோயிலை ஒரு சமூக நிறுவனம் என்ற நோக் கில் ஆராய்ந்து பல புதிய உண்மைகளை இந்நூலில் வெளிப்படுத்தியுள்ளார். குறிப்பாக கோயிலுக்கும் அரசுக்கும் இருந்த தொடர்பு, கோயில் நடவடிக்கை களில் இடையர் மற்றும் பெண்களின் பங்களிப்பு மற்றும் கோயில் நிர்வாகத்தில் உள்ளூர்ச் சமூகத் தின் பங்குஆகியவற்றை விரிவாக விளக்கியுள்ளார். தமிழகத்தில் கோயில் கட்டட மரபின் வரலாற்றை இலக்கிய தரவுகளோடு தொல்லியல் தரும் செய்தி களையும் பயன்படுத்தி நிரல்படச் சொல்லியிருந்தார். மக்கள் பரவலாகப் போற்றிவந்த கிராமியத் தெய்வங்கள், குறிப்பாகப் பிடாரி போன்ற பெண் தெய்வங்கள், நாளடைவில் பல்லவ, சோழ அரச குலங்கலால் போற்றப்பட்டன என்பதைச் சுட்டிக் காட்டியுள்ளார். பல்லவர் காலத்திலும், சோழர் காலத்தின் முதற்கட்டத்திலும் கோயில்களின் செல்வாக்குடன் தென்படும் பெண்கள் அதற்குப் பின் பின்தள்ளப் படுகிறார்கள் என்பது ஒரு முக்கிய செய்தி. இந்நூல் தமிழக வரலாற்றாய்வாளர்களுக்கு மிகவும் பயன்படும் நூலாக அமைந்தது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக நுண்கலைத்துறை விரிவுரையாளர் ஏ.என். கிருஸ்ணவேணி 'இந்திய அழகியல்' எனும் நூலைப் படைத்துள்ளார். கலை அழகு பற்றிய தத்துவார்த்த ரீதியான கொள்கை விளக்கங்கள் அழகியல் என்ற வரையறைக்குள் இடம்பெறுகின்றன. இந்தியப் பாரம்பரியத்தில் அழகு பற்றிய எண்ணக்கரு மிகத் தொன்மை வாய்ந்ததாயினும் அதன் வளர்ச்சி சமஸ்கிருத அலங்கார சாஸ்திரங்களின் ஊடாகவே அறியப்படுகின்றது. இந்திய அழகியல் இருக்கு வேதம் தொட்டு இற்றைவரை நீண்ட கலை, இலக்கிய வரலாற்றுப் பின்னணியைக் கொண்டது. இப்படியாகப் புதிய வகைப்பட்ட நூல்களை சமுதாயத்தின் நன்மை கருதி வெளியிட்டுவரும் குமரன் புத்தக இல்ல வெளியீட்டகம் மகத்தான பணியை ஆற்றிவருகிறது. *

# சிறுவர் இலக்கியம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

**மே**லும் செ.கணேசலிங்கத்தின் 'உலக சமயங்கள்', பன்மொழிப்புலவர் த.கனகரத்தினத்தின் 'சிறுவர் பாடல்', பேராசிரியர் செ.சிவஞான சுந்தரம் (நந்தி) 'தம்பி தங்கைக்கு' ஆகிய சிறுவர் இலக்கிய நூல்களும் வெளிவந்தள்ளன. சொல்லறிதல், பொருளறிதல், எழுத்தறிதல், எண்ணக்கருவாக்கம் செய்தல் என்பவற்றுக்கும் அதன் வழியாக அடிப்படையான மொழித்திறன்களை வளர்த்தலுக்கும் அதன் வழியாக அடிப்படையான மொழித்திறன்களை வளர்த்தலுக்குமான 'பலர் மலர்' என்னும் தமிழ்வேள் க.இ.க.கந்தசுவாமியின் நூலை 'இலக்கியன் வெளியீட்டகம்' சிறாரின் அறிவு விருத்தியையும் உணர்திறன் கூர்மையையும் நோக்கி... முன்னெடுத்துள்ளது.

சேமமடு புத்தக நிலையத்தின் ஒரு வெளியீட்டு நிறுவனமாகிய பத்மம் பதிப்பகமும், குமரன் புத்தக இல்லத்தின் 'இலக்கியன் வெளீட்டகமும்' சிறுவர் இலக்கிய வெளியீடுகளில் அக்கறையுடன் செயற்பட்டுவருகின்றன.

சீபில் வெத்தசிங்ஹ என்பவரால் எழுதப்பட்ட 'குடைத்திருடன்' (சிறுவர் கதை). பல சர்வதேச விருதுகளைப் பெற்றுள்ள இந்நூல் ஜப்பான், சீனா, கொரியா, பிலிப்பைன்ஸ், நோர்வே, வீடன், டென்மார்க், தாய்வான், சிங்கப்பூர், குவாமி, ஹொங்கொங், ஐக்கிய இராச்சியம் ஆகிய பன்னிரண்டு நாடுகளிலும் வெளியிடப்பட்டுள்ளது. இவருடைய 'தம்பயா' (சிறுவர் கதை), 'பணியாரப் பயில்வான்' (சிறுவர் கதை), 'சண்டை' (சிறுவர் கதை), 'குட்டி முயலுக்குப் பரிசு', 'வெசக் தீபம்', 'ஓடிப்போன தாடி', 'சின்னப் பாட்டி', 'மோதக மாமா' ஆகிய சிறுவர் கதைகள் தமிழாக்கம் செய்யப்பட்டு இலக்கியன் வெளியீட்டகத்தால் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளன.

''சிறுவர் இலக்கியம் பற்றிச் சிந்திப்பவர்கள் சிறுவர்களை நன்கு அறிந்திருக்க வேண்டும்'' என்று பேராசிரியர் கா.சிவத்தம்பி கூறியுள்ளார். சிறார் தொடர்பான ரூசோவின் இயற்கை நிலைச் சிந்தனைகள் இலக்கிய வளர்ச்சிக்கு, சிறார் தொடர்பான நேர்முக அணுகுமுறைகளை முன்னெடுப்பதற்கும் பெரும் விசைகளாயின. சிறார்கள் தாமாகக் கற்றுக் கொள்ளல், தாமாகவே முயன்றுஅனுபவங்களைத் திரட்டிக் கொள்ளல், இயற்கையோடு இணைந்து வாழ்தல், தலையீடு இல்லாத வளர்ச்சி முதலிய கருத்துக்களை ரூசோ வலியுறுத்தியுள்ளார்.

இத்தகைய தன்நம்பிக்கையுடையதான செயற்பாடுகளுக்கு ஏற்ற வகையில் சிறுவர் இலக்கியம் படைப்பவர்கள் தமது ஆக்கங்களை உருவாக்கிக்கொள்ள வேண்டும். வற்புறுத்துவதோ, திணிப்பதோ, பயத்தை ஏற்படுத்துவதோ, மூடக்கொள்கைகளைப் பரப்புவதோ சிறுவர் இலக்கியங்களுக்கு ஆகாத விடயங்களாகும். சிறாரைச் சுரண்டலிலிருந்து விடுபடவைப்பதற்கு கார்ல்மார்க்ஸ் முன்வைத்த வைராக்கியமான கருத்துக்களும் சிறார் இலக்கிய ஆக்கங்களைப் பொறுத்தவரை புதிய யுகத்தைத் தோற்றுவித்தன. பாடசாலைக் கல்வி முறைமையும், அச்சகத் தொழில் வளர்ச்சியும் பன்முகமான கருப்பொருள்களை உள்ளடக்கிய சிறார் இலக்கியப் புனைவுகளை முன்னொடுக்கத் தூண்டின.

சமூக அநீதிகளைச் சுட்டிக்காட்டும் கதைகள், புகைத்தல், மதுபானம், போதைப் பொருள் பாவனை, சிறுவர் துஷ்பிரயோகம் போன்றவற்றின் கேடுகளை எடுத்துக்க காட்டும் அர்த்தத்தை உணர்த்தும் வகையிலான படைப்புகள் ஆகியவற்றை, உளவியல் கண்கொண்டு நோக்கி மிகுந்த நிதானத்துடன் சிறுவர்களுக்கு பயன்படும் வகையில் சிறுவர் இலக்கியங்கள் உருவாக்கப்பட வேண்டும். (முற்றிற்று)

# குழந்தை வளர்ப்பு



1. குழந்தை பிறந்தவுடன் சீனி, தேன், தண்ணீர் ஆகியவற்றைக் கொடுப்பது தவறான பழக்கமாகும்.

2. ஒவ்வொரு குழந்தைக்கும் முதல் ஆறு மாதங்களுக்குத் தாய்ப்பால் மட்டுமே கொடுக்க வேண்டும்.

3. குழந்தை பிறந்தவுடன் முதல் நான்கு நாட்களுக்குச் சுரக்கும் சீம்பாலை கண்டிப்பாக எல்லாக் குழந்தைக்கும் ஊட்ட வேண்டும். இதில் அதிகமான சத்தும், நோய் எதிர்ப்புக் குணமும் உண்டு.

4. தாய்ப்பால் குடிக்கும் குழந்தைக்குக் கூடுதலாகத் தண்ணீர் கொடுக்கத் தேவையில்லை.

5. தாய்ப்பால் பல நோய்களைத் தடுக்கும் சக்தி மிக்க முழு உணவு ஆகும். இதனால் வயிற்றுப்போக்கு, சளி ஆகிய வியாதிகள் வருவதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவு.

6. தாய்ப்பால் குடிக்கும் குழந்தைக்கு மூளை வளர்ச்சி நன்றாக இருக்கும்.

7. குழந்தைக்கு வயிற்றுப் போக்கு இருந்தாலும் தாய்ப்பால் கொடுப்பதை நிறுத்தக்கூடாது.

8. தாய்ப்பால் கொடுப்பதால் தாய்மார்களுக்கு மார்பகப் புற்றுநோய் வருவதற்கான வாய்ப்பு குறைகிறது. மேலும் கர்ப்ப காலத்தில் அவர்கள் போட்ட கூடுதல் எடையும் குறையும்.

9. ஆறு மாதங்களுக்குப் பிறகு தாய்ப்பால் மட்டுமின்றி வீட்டிலேயே தயாரித்த அரிசி சார்ந்த உணவுகளைக் கொடுக்க வேண்டும். அதன்பிறகு வேகவைத்த பருப்பு மற்றும் காய்கறிகளைச் சேர்த்துக் கொள்ளவும்.

10. மற்ற உணவு வகைகளுடன் சேர்த்துத் தாய்ப்பாலைக் குழந்தைகளுக்கு இரண்டு வயது முடியும் வரை கொடுக்க வேண்டும்.

11. ஆறு மாதங்களுக்குப் பிறகு குழந்தைக்கு தாய்ப்பாலுடன் சேர்த்துப் பின்வரும் உணவுகளைக் கொடுக்கலாம். தானியம், பருப்பு கலந்த உணவுகள், வேக வைத்து மசித்த காய்கறி, கீரைகள், வாழைப்பழம் போன்ற மிருதுவான பழங்கள், தயிர், பிஸ்கட், இட்லி, தோசை, பாயாசம் போன்றவை.

படிப்படியாக ஒவ்வொரு பொருளாகக் குழந்தையின் உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

12. குழந்தைகளுக்கு முட்டை மற்றும் அசைவ உணவு வகைகளை ஒரு வயதிற்கு மேல் கொடுக்கலாம்.

13. குழந்தைக்கு மிதமான சளி, காய்ச்சல், வயிற்றுப் போக்கு இருந்தாலும் தடுப்பூசி போடலாம். வயிற்றுப் போக்கு அல்லது வாந்தி இருந்தால் இளம்பிள்ளைவாத சொட்டு மருந்து மட்டும் போடக்கூடாது.

14. தடுப்பூசி போட்ட பிறகு குழந்தைகளுக்கு காய்ச்சல் ஊசி போட்ட இடத்தில் வலி, வீக்கம், கொப்பளம் ஆகியவை ஏற்படலாம். இதனால் குழந்தைகளின் உடல்நலத்திற்கு எந்தத் தீங்கும் ஏற்படாது.

15. குழந்தைக்கு குடலேற்றம் நீவுதல், சுளுக்கு எடுத்தல் கூடாது.

16. சாம்பல் பொடி, வசம்பு, டால்கம்பவுடர் ஆகியவற்றை பச்சிளங் குழந்தையின் தொப்புளில் போடக்கூடாது.

17. குழந்தைக்கு காது, மூக்கு, வாய் ஆகியவற்றில் எண்ணெய் கட்டுவது, ஊதி சளி எடுப்பது தவறு. இது குழந்தையின் நுரையீரலை பாதிப்பதோடு உயிருக்கே ஆபத்து விளைவிக்கும்.

18. உங்கள் குழந்தைக்கு வயிற்றுப்போக்கு ஏற்பட்டால் எப்பொழுதும் கொடுக்கும் உணவைக் கொடுக்க வேண்டும். தாய்ப்பால் குடிக்கும் குழந்தைக்குத் தாய்ப்பால் தரவேண்டும். இத்துடன் சேர்த்து கூடுதலாக ஓ.ஆர்.எஸ். நீர், உப்பு சேர்த்த அரிசிக்கஞ்சி, இளநீர், மோர், பருப்பு வேக வைத்த நீர், குடிநீர் கொடுக்க வேண்டும்.

19. எந்தக் குழந்தைக்கும் கிரைப் வாட்டர், போனிசான் அல்லது சத்து சொட்டு மருந்து கொடுப்பதற்கு முன் மருத்துவரைக் கேளுங்கள்.

20. நான்கு வயது வரை கைசூப்புவது இயற்கை. அதற்கு மேல் இருந்தால் மருத்துவ ஆலோசனை பெறுங்கள்.

# ஆயுள் நீடிக்க துளசி!



அடிக்கடி காபி, டீ குடிப்பவர்கள் அதைக் குறைத்துக்கொண்டு அதற்குப் பதிலாக துளசி டானிக் காபி குடிக்கலாம். இதைச் செய்ய வேண்டியமுறை:

தேவையான துளசி இலைகளை நிழலில் உலர்த்தி நன்கு பொடி செய்துகொள்ள வேண்டும். அதை வடிகட்டி காற்றுப் புகாத போத்தலில் அடைத்து வைத்துக் கொள்ள வேண்டும். அதில் ஒரு தேக்கரண்டி அளவு எடுத்து அதிகாலை வேளையில் சுடுநீரில் இட்டு டிகாஷன் செய்து கொள்ள வேண்டும். அதை வடிகட்டி அதனுடன் பால், சீனி சேர்த்து அருந்தினால் நீங்கள் புத்துணர்ச்சி பெற்றுவிடுவீர்கள்.

தொடர்ந்து துளசி டிகாஷனில் பால், சீனி கலந்து அருந்திவந்தால் ஆயுள் விருத்தியாகும். மேலும் ரத்தம் சுத்தமடையும் எலும்புகள் பலமாகும்.

# டிப்ஸ்... டிப்ஸ்... டிப்ஸ்... டிப்ஸ்...

* வாதம், பித்தம், கபம் ஆகிய முத்தோஷங்களைப் போக்குவதில் எளிய மருந்து ஓமம்.

* சிறிது இஞ்சி, பூண்டு, ஓமம் இவைகளை ஒன்றாக வைத்து அரைத்து தேனில் கலந்து சாப்பிட்டு வர இதயப் படபடப்பு நீங்கும்.

* இரண்டு தேக்கரண்டி ஓமத்தை ஒரு மெல்லிய துணியில் வைத்து முடிந்து மூக்கால் நுகர்ந்து வர கடுஞ்சளி பழுத்து வெளியேறி சளித்தொல்லை நீங்கும்.

* ஒரு ஸ்பூன் ஓமத்துடன் சிறிது கருப்பட்டி வைத்து பொடித்துத் தின்றால் வயிறு உப்புசம் குணமாகும்.

* பூண்டுடன் சிறிது ஓமம் வைத்து தேமல்மீது பூசிவர தேமல் மாறி சருமம் இயல்புநிலை பெறும்.

* வெந்தயம், ஓமம் சேர்த்து அரிசிக்கஞ்சி வைத்துக் குடித்தால் வயிற்றுக் கோளாறுகள் சீராகும்.

* ஓமத்தை லேசாக வறுத்துத் தின்றால் தொடர் வாந்தி நிற்கும்.

# பீரியட்ஸ் பிரச்சினையா?

இளம் பெண்கள், சருமத்தில் பிரச்சினை என்றாலே பியூட்டி பார்லருக்குத் தான் ஓடுகிறார்கள். சாதாரண பரு வந்தால்கூட, உடலின் உள்ளே இருக்கும் எந்தப் பிரச்சினையால் இந்த பரு வந்திருக்கிறது என்பதைத் தெரிந்து கொண்ட பிறகுதான் சிகிச்சை ஆரம்பிக்க வேண்டும். சருமத்தில் அரிப்பு, நமைச்சல், முகத்தில் கரும்புள்ளி, தேமல், படை போன்ற பிரச்சினைகளுக்கு ஒரு சாதாரண பியூட்டிஷியனால் என்ன தீர்வைத் தந்துவிட முடியும்? ஆரோக்கியமான சருமத்தை மேலும் மினுமினுக்க வைக்க மட்டும்தான் பியூட்டி பார்லர்களின் உதவியை நாட வேண்டும்.

பொதுவாகவே பீரியட்ஸ் சமயத்தில் வரும் வயிற்றுவலி, அதிக ரத்தப்போக்கு, கர்ப்பப்பையில் கட்டி, மாதவிலக்கு கறுப்பு நிறத்தில் வருதல், ஹோர்மோன் குறைபாடு, வெள்ளைபடுதல் போன்ற பிரச்சினைகளுக்குத் தகுந்த டாக்டரிடம் காட்டி தீர்வு காணாவிட்டால், உடல் முழுவதும் கெட்டநீர் பரவிவிடும். இரவிலும் சரியான தூக்கம் இருக்காது, சருமம் தடிப்பாகும், தொற்றுக்காரணமாக கொப்புளம் வரும், நமைச்சல் வரும். இதை சொறிய சொறிய சோரியாஸிஸில் கொண்டுவந்து விடும். தூக்கம் இல்லாத காரணத்தினால் ஹோர்மோன்கள் செயல்பாடும் சரியாக இருக்காது. இது உங்களுக்கு மேலும் பலப்பல வியாதிகளைத் தேடித்தரும்.



பீரியட்ஸ் பிரச்சினை அல்லது வெள்ளைபடுதல் என்று எந்தப் பிரச்சினை வந்தாலும், முதலில் சருமத்தில்தான் அதன் அறிகுறிகள் தென்படும். எனவே, இப்படிப்பட்ட பிரச்சினை எனில் அறிகுறிகள் வரும் முன்பே தகுந்த டாக்டரை உடனே தேடுங்கள்.

பீரியட்ஸ் பிரச்சினைகள் வராமலிருக்க...

* பெண் குழந்தைகளுக்கு பத்து வயது ஆகிவிட்டாலே, தினம் ஓர் எள் உருண்டை கொடுங்கள். உணவில் அதிகமாக நல்லெண்ணெய் சேருங்கள்.

* பீரியட்ஸ் சமயத்தில் தயிர் (மோர் சாப்பிடலாம்) பப்பாளி, அன்னாசி, மாங்காய் கண்டிப்பாக சாப்பிடக்கூடாது.

* எள், நல்லெண்ணெய் கூட பீரியட்ஸ் சமயத்தில் சேர்க்கக்கூடாது. கர்ப்பப்பையை எடுத்துவிட்டவர்களுக்கும் கூட மேற்கண்ட பிரச்சினைகள் வரும் வாய்ப்புகள் அதிகம். எனவே, தகுந்த மருத்துவரை கலந்து ஆலோசித்து சிகிச்சை பெற்றால் சருமப் பிரச்சினைகளிலிருந்து தப்பிக்கலாம்.

# மறுப்பு சொல்வதிலும் பொறுப்பு தேவை

'ஒரு வார்த்தை வெல்லும், ஒரு வார்த்தை கொல்லும்'' என்பார்கள். இதில் கொல்லும் வார்த்தை ரகத்தைச் சேர்ந்ததுதான் 'மறுப்பு' என்பது.

பல்வேறு சூழல்களில் நாம், சில விஷயங்களுக்கு மறுப்புத் தெரிவிக்கவேண்டிய அவசியம் ஏற்படலாம். அது முகத்தில் அடித்தாற்போல் இருந்தால் கேட்பவரின் மனதை சங்கடப்படுத்தும். சில சமயம் எதிர்ப்புகளையும், உறவு முறிவுகளையும் ஏற்படுத்தலாம்.

எனவே, மறுப்பு சொல்வதில் பொறுப்பு அவசியம். நாகரிகமான முறையில் மறுப்புத் தெரிவிக்க சில ஐடியாக்கள்...

* பெரும்பாலும் பிறர் உதவி கேட்கும்போதுதான் மறுப்புச் சொல்லவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அந்த நேரத்தில் அவர் கேட்கும் பணமோ, பொருளோ நமக்கும் தேவை இருப்பதால்தான் இப்படிப்பட்ட சங்கடமான நிலை வருகிறது. இது கடினமான சூழல்தான். அந்த நேரத்தில் முதலில் கடைப்பிடிக்கவேண்டியது பொறுமை.

* எடுத்த எடுப்பில் 'முடியாது' என்று சொல்லிவிடாதீர்கள். 'நான் யோசித்துச் சொல்கிறேன். சிறிது காலம் அவகாசம் கொடேன்' என்று கேளுங்கள்.

* அந்த இடைவெளிக்குள் பதற்றமான சூழல் மாறிவிடும். நிதானமாகச் சிந்தித்து முடிவெடுக்க வாய்ப்புக் கிடைக்கும். அப்போது அவர் கேட்ட உதவியை, அவரது தேவையை உங்களால் நிறைவேற்ற முடியுமா? என்று யோசியுங்கள்.

* நல்ல முடிவு கிடைத்துவிட்டால் அதைச் சொல்லலாம். கண்டிப்பாக மறுக்கவேண்டிய சூழல் ஏற்பட்டால், உங்களால் முடியாமல் போனதற்கான காரணத்தையும், அதே பொருள் அல்லது பணம் உங்களுக்கும் தேவையாயிருப்பதையும் தெளிவாக விளக்குங்கள்.

* தன் தேவைக்குப்போக மீதி இருந்தால் கண்டிப்பாக உதவுவதாகக் கூறலாம். அல்லது அந்தச் சூழலில் அவரது தேவையை யாரால் நிறைவேற்ற முடியும் என்று ஊகித்து அவரை அணுகும்படி வழிகாட்டலாம். நீங்களே முயற்சி செய்து அவருக்கு உதவி கிடைக்கும்படியும் செய்யலாம்.

* மேலதிகாரியாக இருந்து தனக்குக் கீழே பணிபுரிபவர்களின் கோரிக்கையை நிராகரிப்பதிலும் அவசர முடிவு எடுக்கக்கூடாது.

* சில நேரங்களில் மறுக்க வேண்டியதை மறுக்காமல் இருந்தாலும், உங்களுக்கு இழப்பு ஏற்படலாம். நெருக்கமான நண்பன் கேட்கிறானே என்று மறுக்காமல் காரியத்தில் இறங்கினால் உங்களுக்கு நேரம், பொருள், பணம் ஏதேனும் இழப்பு ஏற்படலாம்.

* அதேபோல உங்களால் செய்ய முடிந்த செயலுக்கும் நீங்கள் 'முடியாது' என்று மறுத்தால் அது உறவு முறிவை ஏற்படுத்தலாம். எனவே, உங்களால் இயன்றதைச் செய்வதற்கு எப்போதும் தயாராக இருங்கள்.

* பொதுவாக 'ஸாரி', 'மறந்துவிட்டேன்', 'முடியாது' போன்றவற்றை அநாவசியமான வார்த்தைகளாக எடுத்துக் கொள்ளலாம். இவற்றை அடிக்கடி உபயோகப்படுத்துவது நீங்கள் தன்னம்பிக்கையும், உறுதியும், தெளிவும் அற்றவர் என்பதையே காட்டும். எனவே இவற்றைத் தவிர்க்கப் பழகுங்கள். தவிர்த்தவர்களே முன்னேறி இருக்கிறார்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள்!

# மிஸெல் ஒபாமாவின் வியப்பூட்டும் ஆடையணிகள்!

அமெரிக்க அதிபர் பராக் ஒபாமாவின் மனைவி மிஸெல் ஒபாமா தனது அசத்தும் ஆடையணிகள் மூலம் உலகின் கவனத்தை பெரிதும் கவர்ந்து வருகிறார். கடந்த கோடைகாலத்தின்போது அவர் விடுமுறை விடுதிக்கு சென்றபோது அணிந்திருந்த கட்டை காற்சட்டையும்,



புயங்களை வெளிகாட்டும் மேற்சட்டையும் சர்ச்சையை தோற்றுவித்திருந்தன. எனினும், அண்மையில் இந்தோனேசியாவுக்கு பராக் ஒபாமாவுடன் வந்திருந்த மிஸெல் அணிந்திருந்த ஆடைகள் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தின.

இந்த விஜயத்தின்போது இருவரும் பிரசித்திபெற்ற ஜகார்த்தா நகரில் இஸ்டிக் லால் பள்ளிவாசலுக்கு விஜயம் செய்தனர். அச்சமயம் மஞ்சள் நிற முழுக்காற்சட்டையும், கை நீண்ட மேற்சட்டையும் அணிந்து தலையை மூடி, பாதங்களுக்கும் காலுறை அணிந்தே மிஸெல் சென்றார். இஸ்லாமிய சட்டங்களின்படி பெண்ணொருவர் தனது முழு அங்கங்களையும் மறைத்தவாறே உட்புக வேண்டும் என்ற சம்பிரதாயத்தை மிஸெல் இம்மியளவும் பிசகாது நிறைவேற்றினார்.

இந்தோனேசிய ஜனாதிபதியின் மாளிகையில் அவர்கள் இருவருக்கும் இராப்போசன விருந்துபசாரம் நடைபெற்றபோது மிஸெல் இந்தோனேசியாவில் வாங்கிய ஆடையையும், அலங்கார மாலை ஒன்றையும் அணிந்து அசல் இந்தோனேசியப் பெண் போல விருந்தினர்களை அசத்தினார். வேறொரு நாட்டிலிருக்கும்போது அந்த நாட்டின் கலாசாரத்துக்கு ஏற்ப உடையணிவதில் மிஸெல் கை தேர்ந்தவர்; அக்கறை காட்டுபவர். இந்தோனேசிய ஜனாதிபதியையும் அவரது பாரியாரையும் சந்தித்தபோது அணிந்திருந்தது கறுப்பு நீண்ட காற்சட்டையும் சிவப்பு, கறுப்பு கலந்த கைநீண்ட குர்தாவுமே. இந்தோனேசியாவை விட்டு வெளியேறும்போது மிஸெல் வெள்ளை நிற நீண்டகவுன் அணிந்து அனைவரையும் கவர்ந்தார்.

அண்மையில் இந்திய ஜனாதிபதி திருமதி பிரதீபா பட்டேல், அவரது கணவர் தேவசிங் பட்டேல் ஆகியோரின் அழைப்பை ஏற்று ஒபாமா தம்பதியினர் இந்திய விஜயத்தை மேற்கொண்டனர். இரவு போசனத்திற்கு இந்திய ஜனாதிபதி மாளிகைக்கு சென்ற போது மிஸெல் பாதங்கள் வரை நீண்டிருந்த சாயாவும், கை நீண்ட பிளவுஸும் அணிந்திருந்தார். அவ்வாறே புது டெல்லியின் மகாத்மா காந்தியின் நினைவுத்தூபியைத் தரிசிக்க சென்றபோதும் இந்தியப் பெண்ணாகவே மிஸெல் தோற்றமளித்தார்.

ஒவ்வொரு நாட்டுக்கும் விஜயம் செய்யும்போது அந்த நாட்டின் கலாசாரத்துக்கேற்ப உடையணிவதுடன் இயன்றவரை நகைகளை குறைத்து எளிமையாகவே மிஸெல் காட்சியளிப்பார். கடந்த தீபாவளிப் பண்டிகையின்போது ஒபாமா தம்பதியினர் இந்திய விஜயத்தை மேற்கொண்டனர். தீபாவளியன்று மும்பாய்க்கு விஜயம் செய்தபோது அசல் இந்திய பெண்ணைப்போல உடையணிந்து மும்பை மாணவ - மாணவிகளுடன் சரிசமமாக நடனமாடி மகிழ்ந்தார் மிஸெல். அவரது அழகிய நடனம் அனைவரையும் கவர்ந்திழுத்தது. சற்று நேரம் நடனத்தை ரசித்துக்கொண்டிருந்த பராக் ஒபாமாவும் நடனத்தில் கலந்து கொண்டதே அவ் விழாவின் உச்சக்கட்டமெனக் கருதப்பட்டது.

''அமெரிக்காவின் முதற்பெண்மணி எங்களுடன் சரிக்கு சரி நடனமாடினார் என்பதை எங்களால்



இன்னும் நம்பமுடியவில்லை. அது கனவா என இன்றும் சந்தேகம் எங்களுக்கு உண்டு'' என்கின்றனர் பிரமித்துப்போன மும்பை மாணவிகள்.

பாடசாலையை விட்டு செல்வதற்கு முன்பு சகல மாணவர்களுக்கும் குறிப்பு புத்தகங்கள், பென்சில்கள், பேனாக்கள், அடங்கிய வெள்ளை மாளிகையின் படம் பதித்த பைகளை விநியோகித்தார் மிஸெல்.

உலகின் முதற் பெண்மணி என்ற பந்தா துளியும் இல்லாமல் மக்களோடு மக்களாக நெருங்கிப்பழகும் மிஸெல் தனது கணவனின் வெற்றியில் அசைக்க முடியாத பங்கை வகிக்கிறார் என்பது பெரும்பாலானோரின் கருத்து. ✱

சுப்பர்

# காப்புறுதிப் பணத்துக்கு பலிக்கடாவான மனைவி

தனது மனைவியின் பேரில் எடுக்கப்பட்டிருந்த 10 இலட்சம் ரூபா காப்புறுதிப் பணத்தைப் பெறுவதற்காக அவளுக்கு மாத்திரைகளில் நஞ்சு கலந்து கொடுத்து அவளைத் தீர்த்துக்கட்டிய கணவன் ஒன்பது வருடங்களின் பின் கைதாகிய சம்பவம் ஒன்று தம்புத்தேகம பிரதேசத்தை உலுக்கியுள்ளது. மர்மக் கதைகளில் கொலையாளி தான் தப்பித்துக்கொள்வதற்காக கொலை பற்றிய தகவல்கள் வெளிவராமல் இருக்குமாறு மிகவும் துல்லியமாகத் திட்டம் தீட்டுவது பற்றி வாசித்துள்ளோம். பிரேத பரிசோதனையின் போது மரணத்துக்கான காரணத்தைக் கண்டுபிடிக்க இயலாதவாறு கொலையாளிகள் புத்திசாலித்தனமாகத் திட்டம் தீட்டி மருத்துவ நிபுணரை ஏமாற்றுவதில் திறமை படைத்தவர்கள்.

பல வருடங்களுக்கு முன் இலங்கையின் பிரபல மருத்துவர் ஒருவரை காட்டுக்குள் அவரது வாகனத்திலேயே கடத்திச் சென்ற கொலையாளிகள் அவரது கைகால்களைக் கட்டிவிட்டு வாகனத்தின் புகை போக்கியின் (சைலன்ஸர்) அருகில் கிடத்தினர். அதன்பின் வாகனத்தை இயக்கிவிட்டு ''எக்ஸலரேட்டர்'' மீது கல்லொன்றை வைத்துவிட்டுச் சென்று விட்டனர். வாகனம் வெளியேற்றுவது காபன் மொனோக்ஸைட் நச்சுவாயு. அதனைச் சுவாசித்தால் சில நிமிடங்களில் மரணம் நிச்சயம். ஆனால் பிரேத பரிசோதனையில் மரணத்துக்கான எந்தத் தடயமுமே இராது. சற்று நேரத்தில் அங்கு வந்த கொலையாளிகள் சடலத்தின் கட்டுக்களை அவிழ்த்துவிட்டு சென்றுவிட்டனர். கஜகரணம் போட்டும் மரணத்துக்கான காரணத்தை மருத்துவர்களால் ஊகிக்க முடியவில்லை. எனினும், பொலிஸார் மேற்கொண்ட தீவிர நடவடிக்கைகளால் கொலையாளிகள் நீண்ட காலத்திற்குப் பின் சிக்கினர். இந்தத் துல்லியமான திட்டத்துக்கெல்லாம் மகுடம் வைத்தது போல உள்ளது தம்புத்தேகம சம்பவம். ஒன்பது வருடங்களுக்கு முன் லலித் தேசப்பிரிய சோமசிங்கவுக்கு 31 வயது. அப்பிரதேசத்தின் ஒரு சண்டியன் என்பதால் சண்டி என்பது அவனது பட்டப்பெயர். அவனது அழகிய மனைவி தமயந்தி ரட்ணாயக்காவுக்கு வெறும் பதினெட்டே வயது. இரு தரப்புப் பெற்றோர்களின் சம்மதத்துடன் சட்டபூர்வமாக நடந்தேறியது அவர்களது திருமணம். திருமணம் முடிந்து சில மாதங்களிலேயே தனது மனைவிக்கு 10 இலட்சம் ரூபாவுக்கு ஆயுள் காப்புறுதி ஒன்றை எடுக்க சண்டி ஏற்பாடுசெய்தான். கணவனின் உள்மனதில் இருந்த சூழ்ச்சியை அறியாத அப்பாவி மனைவி அவன் தன் நலனில் காட்டும் அக்கறையைக் கண்டு நெகிழ்ந்துபோனாள். சில மாதங்கள் கடந்தன. மனைவி முன்னைப்போலவே திடகாத்திரமாக இருந்தாள். காப்புறுதியை எடுக்கும்போதே சண்டியின் மனதில் இருந்த சூழ்ச்சி வேலைசெய்யத்தொடங்கியது. மனைவி இறந்த பின் காப்புறுதிக் கொடுப்பனவு சட்டபூர்வமாக அவளது கணவனுக்குச் சேரவேண்டும் என்பது நியதி. அதன் அடிப்படையிலேயே காப்புறுதியை சண்டி எடுத்துள்ளான். மனைவியின் இறப்பின் பின் மட்டுமே காப்புறுதிப் பணம் அவனுக்குக் கிடைக்கும். அதுவும் இயற்கை அல்லது விபத்து மரணமாக இருக்கவேண்டும்.

திட்டத்தின் முதல் கட்டம் ஆரம்பமானது. ஒருநாள் நள்ளிரவில் இருவரும் ஒரு கட்டிலில் உறங்கியபோது தூக்கிவாரிப் போட்டுக்கொண்டு எழுந்தவன் மனைவியை உலுக்கி எழுப்பினான். தூக்கக் கலக்கத்தில் இருந்த அவளிடம் கட்டிலில் பாம்பு ஒன்று ஊர்ந்ததைக் கண்டதாகவும் அது அவளைத் தீண்டிவிட்டது எனவும் கூறினான். பாம்பென்றதும் மனைவியின் தூக்கக் கலக்கம் தொலைந்துபோனது. தன்னைச் சுதாரித்துக்கொண்டு கட்டிலைவிட்டு இறங்கியவள் தனது உடம்பு முழுவதும் தடவிப் பார்த்தாள். பாம்பு தீண்டிய தடயம் எதுவுமே இல்லை. சூழ்ச்சிக்கார சண்டி அதை ஏற்க மறுத்தான். நிச்சயமாகத் தான் பாம்பைக் கண்ணால் கண்டதாகக் கூறிக்கொண்டு மெத்தையைக் கீழே இழுத்துப் போட்டான். அதன் பின் தயாராக வைத்திருந்த தடி ஒன்றால் கட்டிலின் அடித்தட்டில் பலமுறை அடித்தான். இதோ இருக்கிறது அந்தப் பாம்பு என்று அதை தடியால் தூக்கி மனைவியிடம் காட்டினான். அது ஏற்கனவே அடித்துக் கொல்லப்பட்ட பாம்பின் உயிரற்ற உடல் என்பது அவனுக்கு மட்டுமே தெரிந்திருந்த உண்மை.

அதனைத் தொடர்ந்து கலக்கமுற்ற மனைவியை வைத்தியசாலைக்குக் கூட்டிச் செல்ல முயன்றான். பாம்பு தீண்டவில்லை என்றாலும் எதற்கும் வைத்தியப் பரிசோதனை செய்துகொள்வோம் என்று வற்புறுத்தி அவளை அரச வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றான். பாம்புக்கடி என்றதும் பரபரப்பானது வைத்தியசாலை. தீவிரப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் பாம்பு தீண்டியதற்கான எந்த அடையாளமும் இருக்கவில்லை என வைத்தியர்கள் கூறினர். ஆனால், சண்டி ஏற்கனவே திட்டமிட்டிருந்தபடி தனது அடுத்தகட்டத்தை ஆரம்பித்தான். மனைவி பயந்திருப்பதால் நிம்மதியாக உறங்க அவளுக்கு ஏதாவது மருந்து மாத்திரைகள் தரும்படி வைத்தியரிடம் கேட்டான். மனைவி மீது அவன் வைத்திருந்த அன்பைப் பார்த்து நெகிழ்ந்துபோன வைத்தியர்கள் கெப்ஸ்யூல் ஒன்றை எழுதி அதனை மருந்துக்கடையில் வாங்கிக்கொள்ளுமாறு கூறி இருவரையும் அனுப்பிவிட்டனர்.

மருந்துக்கடையில் அதனை வாங்கிய சண்டி வீட்டுக்கு வந்ததும் குளியலறைக்குச் சென்றான். ஏற்கனவே அவன் பொடி செய்து வைத்திருந்த கியூரேட்டர் நச்சு மாத்திரை சட்டைப்பையில் இருந்தது. மருந்துக் கடையில் வாங்கிய கெப்ஸ்யூலைக் கழற்றி மருந்தைக் கொட்டிவிட்டு தயாராக வைத்திருந்த நச்சுப்பொடியை நான்கு கெப்ஸ்யூல்களுக்குள் அடைத்தான். மரணப் பொறி தயாராகிவிட்டது. அவன் வெளியில் வந்தபோது மனைவி உறங்கிக்கொண்டிருந்தாள். அவளைத் தட்டியெழுப்பிய சண்டி இரண்டு கெப்ஸ்யூல்களை விழுங்கச்சொன்னான். அவற்றை விழுங்கிய சில நிமிடங்களில் மனைவி நிலைகுலைந்தாள். அத்துடன் மேலும் இரு கெப்ஸ்யூல்களையும் விழுங்கச்செய்தான். ஓரிரு நிமிடங்களில் அவளது உயிர் பிரிந்துவிட்டது. உடனடியாக அவளது உடலை அதே வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றான். ஏற்கனவே பாம்புக்கடி என்று குழப்பமடைந்திருந்த வைத்தியர்களுக்கு இவனது கபட நாடகம் தெரியவில்லை.


அதன் பின் சம்பிரதாயபூர்வமாக பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. சண்டி எதிர்பார்த்தபடியே மரணத்துக்கான காரணம் கண்டுபிடிக்கப்படவில்லை. அதனையடுத்து சடலம் புதைக்கப்பட்டது. எதிர்பார்த்தபடியே 10 இலட்சரூபா காப்புறுதிப் பணம் சண்டியின் கைக்கு வந்தது. நீண்டகாலமாகவே வேன் ஒன்றை வாங்கவேண்டும் என அவன் திட்டமிட்டிருந்தபடி அதனை வாங்கி சிறிது காலம் பாவித்தான். முதலீட்டை மேலும் பெருக்கிக்கொள்ள அவனது இரண்டாவது திட்டம் செயலானது. வேனை தீயிட்டுக் கொளுத்திவிட்டு மின்னொழுக்குக் காரணம் எனக் காட்டினான். வேனின் முழுக் காப்புறுதிப் பணமும் அவனுக்குக் கிடைத்தது. அப்பணத்தைக் கொண்டு பஸ் ஒன்றை குத்தகை அடிப்படையில் வாங்கினான். ஒருசில தவணைகளுக்கு மேல் குத்தகைப் பணத்தைச் செலுத்தாததால் நிதிநிறுவனம் பஸ்ஸை சுவீகரித்துக்கொண்டது. அதன் பின் சிறிது காலம் தனிமையில் வாழ்ந்தவன் இரு பெண்களுடன் தொடர்பு வைத்துக்கொண்டான். அவர்கள் இருவருக்கும் முறையே 15, 17 வயதுகள் மட்டுமே. இருவரும் அவனை சட்டபூர்வமாகத் திருமணம் செய்யுமாறு வற்புறுத்தவே மேலும் சாக்குப் போக்குச் சொல்லி காலம்கடத்தி வந்தான்.

அவன் விதைத்த வினை ஒன்பது வருடங்களின் பின் விஸ்பரூபம் எடுத்தது. சிறுமிகள் இருவருடன் இவன் வாழ்க்கை நடத்தி வருவதாக அயலவர்கள் பொலிஸாருக்குத் தெரிவித்த தகவலை அடுத்து சண்டி கைதுசெய்யப்பட்டான். ஏற்கனவே அவனது மனைவியின் உறவினர்களுக்கு அவளது திடீர் மரணம் பற்றியும் அதனையடுத்து சண்டி வேன், பஸ் என படாடோபமாக வாழ்ந்ததையும் பற்றிச் சந்தேகம் இருந்தது. கைதுசெய்யப்பட்ட சண்டி பொலிஸாரின் ''விசேட'' கவனிப்பின் பின் ஒன்பது வருடங்களுக்கு முன்பு நடந்த சம்பவத்தை விலாவாரியாக எடுத்துக்கூறியதையடுத்து அவனது திட்டமிட்ட கொலை இரகசியம் அம்பலமானது. சமீபத்தில் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட சண்டி விளக்கமறியலில் வைக்கப்பட்டான். ஒன்பது வருடங்களுக்கு முன்பு தன்னால் குரூரமாகக் கொலை செய்யப்பட்ட அப்பாவி மனைவியின் நினைவுகள் இப்போது அவனுக்கு வருமானால் அந்த சித்திரவதையே அவன் பெறக்கூடிய உச்சபட்ச தண்டனை என்பது எமது கருத்து.

## சொற்சிலம்பம் போட்டி இல. 447

சொற்சிலம்பம் 447 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2010 ஆம் ஆண்டு டிசம்பர் 25 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஜனவரி 02 ஆம் திகதி சுடர் ஒளியில் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல. 445 இற்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன. தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக ரூபா 250 உம், இரண்டாவது பரிசாக ரூபா 150 உம், மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

### சொற்சிலம்பம் போட்டி இல. 447



**இடமிருந்து வலம்**

1. நோன்பு
6. பேணுதல் - பத்திரப்படுத்துதல்
7.இதை இழுத்த குரங்கு என்று சொல்வார்கள்.
9. பாம்பு
10. குதிக்க - தாண்ட
11. கோடரியால் விறகைத் துண்டாடுவதை இப்படிச் சொல்வர்.
12. ஒரு பறை 13. இந்திரன் சபையில் ஆடும் ஓர் அப்ஸரா ஸ்திரி 14. தவசி
17. சாய்தல் - (விலை) குறைதல்
18. வெட்டுவதற்கு உதவும் உபகரணம்
20. ஆண்மான்

**மேலிருந்து கீழ்**

1. மரியாதை செய்தல் - விருந்தளித்தல்
2. அறிவீனன் - எறியப்படும் பயனற்ற நெல்
3. ஹிந்து மத ஆசிரமங்களில் மூன்றாவதாக இருப்பது.
4. மாத ஊதியம் 5. கபடமில்லாதவன் - பேதை
8. சூறாவளி. 14. பத்தாந்திதி - பத்தாவது
15. குதிரை
16. ஒவ்வோர் உடலினுள்ளும் இது உண்டு. அது நித்தியமானது. அதற்கு அழிவில்லை. ஆனால், இதனை பௌத்த மதம் மட்டும் நிராகரிக்கிறது.
18. நீக்கு - பிரித்துவிடு.
19. சாப்பிடு.

அனுப்பவேண்டிய முகவரி:
'சுடர் ஒளி' 85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை, கொழும்பு-14.

### சொற்சிலம்பம் போட்டி இல.445

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 உ | 2 ல | 3 கா | ய | 4 த | ம் | ■ | 5 தி |
| 6 ல | க | ரி | ■ | ரை | ■ | 7 இ | ரை |
| 8 க | ரி | ய | ■ | ■ | ■ | சை | ■ |
| ப் | ■ | ம் | ■ | 9 கா | 10 சா | க் | 11 க |
| 12 ப | தி | ■ | 13 க | ரு | க் | க | ல் |
| ற் | ■ | 14 அ | லி | ■ | 15 கா | லை | ■ |
| று | ■ | 16 சா | ப் | 17 பா | டு | ■ | 18 சு |
| ■ | 19 ச | ம் | பா | தி | ■ | 20 இ | மை |

**பரிசு பெறுவோர்**

01. திருமதி ஜீவா கணபதி
46/59,ரோபர்ட் குணவர்தன மாவத்தை,
கிருலப்பனை,
கொழும்பு 06.

02.சி. லக்ஷன்,
மணியகம்,
வாசிகசாலை வீதி,
கொம்மாதுறை,
செங்கலடி.

03. க.சகீலா பேகம்,
282, ஓடாவியார் விதி
ஏறாவூர்- 02

**பாராட்டுப் பெறுவோர்**

1. வே.கார்த்திகேசு, வாழைச்சேனை.
2. திருமதி ராஜினி புண்ணிய மூர்த்தி, மட்டக்களப்பு.
3. எஸ்.ரஞ்சினி, மட்டக்களப்பு.
4. சி.பாலசுந்தரம், சண்டிலிப்பாய்.
5. செல்வி.பாலச்சந்திரன் கிருஷாந்தி. வண்ணார்பண்ணை.
6. திருமதி.பு.ஜேசுரத்தினம், தெகிவளை.
7. மு.நளினி, மன்னார்.
8. கோ.கிஷாந், சேனைக் குடியிருப்பு-1.
9. பாத்திமா ஹமீதா, மாத்தறை.
10. திருமதி.மதனிகா நடராஜா, தெஹிவளை.
11. திருமதி.பி.செல்வ ராணி, கொழும்பு-14.
12. ஏ.எம்.ஹனீபா, அநுராதபுரம்.



எம்.பாலகிருஷ்ணன்,
நீர்வேலி.

**கேள்வி:** தைரியம் இல்லாதவர்களால் வாழ முடியாதா?

**பதில்:** ஏன் முடியாது? அப்படி யார் சொல்கிறார்கள்? வாக்களித்தவர்களின் தலையிலே மிளகாய் அரைக்கும் அரசியல்வாதிகளோடு வாழ்ந்து கொண்டு தானே இருக்கிறோம்! இவர்கள் காரில் போனால், அவர்களது பாதுகாப்புக்காகச் செல்லும் காக்கிச்சட்டைகள் மக்களையும், வாகனங்களையும் துரத்தோ துரத்து என்று துரத்தி ஓரம்கட்ட வைக்கும் அவலத்தைப் பார்த்துக் கொண்டு தானே இருக்கிறோம்! தனியார் சொத்துக்களையும் நிலங்களையும் அபகரிக்கும் அட்டூழியத்தையும், அகதிகளாக உள்ள மக்களைச் சொந்த நிலங்களிலேயே குடியேறவிடாத அடாவடித்தனத்தையும் நாம் பார்த்துக் கொண்டு தானே இருக்கிறோம்! அவற்றையெல்லாம் சகித்துக்கொண்டு வாழ்கிறோமே! இனி, வாழ்வதற்குத் தைரியம் அவசியமா என்பது பற்றி நீங்களே முடிவு செய்து கொள்ளலாம்.

எஸ்.நிஷாந்தி,
ஹற்றன்.

**கேள்வி:** இந்தச் சின்னஞ்சிறு நாட்டுக்கு சுமார் 100 பேர் கொண்ட அமைச்சரவை தேவையா?

**பதில்:** தேவை, கின்னஸ் சாதனைக்கு!

எம்.பகீரதன்,
வாழைச்சேனை.

**கேள்வி:** இன்றைய சமூகச் சூழ்நிலையில் ஆண்மைக்கு அழகு எது பித்தா?

**பதில்:** இன்றைக்கு மட்டுமல்ல என்றைக்கும் அழகு வரதட்சனை வாங்காமலிருப்பது.

எஸ்.தேவிகா,
திருகோணமலை.

**கேள்வி:** உங்களுக்குத் தேர்தலில் நிற்கும் ஆசை உண்டா?

**பதில்:** பணபலத்தையும் ரவுடியிஸத்தையும் பயன்படுத்தி தேர்தலில் வெற்றி பெறக்கூடிய திறமை எனக்கு இல்லை.

எம்.எச்.ஹக்கீம்,
அக்கரைப்பற்று.

**கேள்வி:** நாட்டு மக்களின் தற்போதைய நிலை என்ன?

**பதில்:** எங்கும் வறுமை, எதிலும் பஞ்சம் என மக்கள் பரிதவிக்கின்றனர். இதற்கு மீட்சி கிட்டுமா அல்லது மோட்சம் தான் கிட்டுமா என மக்கள் ஏங்குகின்றனர். வழமைபோல் அமைச்சர்கள் கப்சிப்.

கே.வரதராஜா,
சண்டிலிப்பாய்.

**கேள்வி:** நாடாளுமன்றத்தில் பெரும் அமளிதுமளி என்று பத்திரிகைகள் முழங்குகின்றனவே?

**பதில்:** எல்லாம் ஜனாதிபதியின் பிரித்தானிய விஜயத்தால் வந்த வினை. அது அநுமானின் வால் போன்று தொடர்ந்து கொண்டே சென்று எத்தனை பேரை ஓரம் கட்டவைக்குமோ தெரியாது.

எம்.சதாசிவம்,
புத்தளம்.


**கேள்வி:** நீதிபெறுவது என்பது கல்லில் நார் உறிப்பது போல் ஆகிவிட்டதே?

**பதில்:** ஆனால், பொன்சேகா-விவகாரத்தில் அது கம்பியூட்டர் வேகத்தில் இயங்கியதைக் காணவில்லையா? ஒரு வழக்கு முடியும் போது வாதி கிழவனாக மாறும் அளவுக்கு ஆமை வேகத்தில் நகர்வது, நம்நாட்டு மக்களின் தலையெழுத்து அன்றி வேறென்ன?

ஸபருல்லாகான்,
மாவனல்ல.

**கேள்வி:** தமிழ் மொழியில் அரபுச் சொற்களும் கலந்திருக்கின்றதா?

**பதில்:** சமஸ்கிருதம், பாலி, ஹீப்ரு மொழிகள் போலன்றி அரபு மொழி வாழும் மொழியாகும். அந்த மொழியில் இருந்து தமிழ் பேசும் முஸ்லிம்களிடையே மட்டும் வழங்கும் சொற்கள் பெருந்தொகையாக இருப்பது போன்றே பொது வழக்கிலுள்ள சொற்களும் பல இருக்கின்றன. இலாகா, தகவல், வசூல் போன்றன இதற்கு உதாரணங்கள்.




பி.சாந்தினி,
எருக்கலம்பிட்டி.

**கேள்வி:** விக்கிலீக்ஸ் அம்பலப்படுத்தியுள்ள இரகசியங்கள் பற்றி?

**பதில்:** எந்த இரகசியங்களும் ஒரு நாள் வெளிவந்தே தீரும் என்பதற்கு ஓர் அத்தாட்சி இது. இலங்கையில் நடைபெற்றன என நம்பப்படும் போர்க் குற்றங்களுக்குப் பொறுப்பானவர்கள் யார் என்பதையும் அது அம்பலப்படுத்தி உள்ளது. இதனால் சிலவேளை ஐ.நா குற்றவிசாரணைகள் மீண்டும் அரங் கேறக் கூடும் என்ற பயமும் அரசாங்க மட்டத்தில் நிலவுகிறது. புலம் பெயர்ந்த தமிழர்களுக்கு இது ஒரு பலமான பிடியாகி விட்டது. இதனால், அமெரிக்கா பெரும் நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கிறது. அமெரிக்காவை நிர்வாணமாக்கிவிட்டது விக்கிலீக்ஸ். அதனுடைய சர்வதேச உறவுகள் பாதிக்கப்படும் அளவுக்கு நிலைமை மாறிவிட்டிருக்கிறது. மேலும், மத்திய கிழக்கிலுள்ள அமெரிக்கப் படைகளின் பாதுகாப்பும் இப்போது அதற்குப் பெரும் பிரச்சினையாக மாறி இருக்கிறது. தாலிபான்களின் மூர்க்கத்தனமான தாக்குதலுக்கு அவர்கள் உள்ளாகக் கூடும் என்று அது கலங்குகிறது. தினை விதைத்தவர்கள் அதனை அறுக்கத்தானே வேண்டும்!

ரி.முத்துக்குமாரன்,
பெரிய நீலாவணை.

**கேள்வி:** லண்டனில் எமது ஜனாதிபதிக்கு இவ்வளவு அவமானம் நேரக் காரணம் என்ன?

**பதில்:** யுத்தக் குற்றச்சாட்டுகள் தான் இதற்கு முக்கிய காரணமாகும். அத்துடன் யுத்தம் முடிந்து பதினெட்டு மாதங்களாகியும் அகதிகள் வாழ்க்கையில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. காணாமற்போனோரைக் கண்டுபிடிக்க அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இன்னும் பல முகாம்களில் கடும் மழைக்கு மத்தியில் ஆதரவற்ற தமிழ் மக்கள் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறார்கள். தம்முடைய அநாதரவான நிலையை யாரிடம் சொல்வது என் அங்கலாய்த்தபடி அவர்கள் இருக்கின்றனர். வெளிநாடுகளில் அடைக்கலம் புகுந்த தமிழர்கள் இவற்றையெல்லாம் அறியாதவர்களாகவா இருக்கிறார்கள்? இதனால் தான் ஜனாதிபதிக்கு எதிராக அங்கே அவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். இதற்கு எதிராக பிரிட்டிஷ் அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் கையை விரித்துவிட்டது. அவர் இதன் பிறகாவது தமிழர் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் முயற்சியில் தீவிரமாக இறங்காவிட்டால், உலக அரங்கில் தனது நற்பெயரைக் காப்பாற்றிக் கொள்ள இதுவரை செலவழித்தது போன்று இத்தனை பில்லியன் பணத்தைச் செலவிட வேண்டிய தேவையே ஏற்பட்டிராது.

ஆர்.கமலேஸ்வரி,
புங்குடுதீவு.

**கேள்வி:** பிரிட்டனில் எமது ஜனாதிபதியின் உரை ரத்துச் செய்யப்பட்டமைக்குக் காரணமாக இருந்த புலம்பெயர்ந்த தமிழர்களின் ஆர்ப்பாட்டத்துக்கு எதிராக முல்லைத் தீவிலும் கிளிநொச்சியிலும் நடந்த ஆர்ப்பாட்டங்களின் விளைவு என்ன?

**பதில்:** அரசாங்கத்தினதும் ஆயுதப் படையினரதும் முகமூடி கிழிந்து போனதுதான் ஏற்பட்ட விளைவு.

ஈ.ராசையா,
கண்டி.

**கேள்வி:** முக்கிய பொறுப்புகளில் இருந்து பாராட்டுப் பெற்ற பல அமைச்சர்கள், செயலாளர்களோ காரியாலயங்களோ இன்றி, வெற்று மனிதர்களாக்கப்பட்டுள்ளார்களே?

**பதில்:** ஓயாமல் பேசி ஓட்டைகளை அடைக்க முயற்சிசெய்துகொண்டிருந்த அவர்கள் இப்போதாவது கொஞ்சம் ஓய்வு எடுப்பது நல்லது தானே!







**அஸ்வினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்**

அறிவுக்கூர்மையுடன் செயல்களில் ஈடுபட்டு வெற்றி பெறும் மேஷ ராசி அன்பர்களே!

முயற்சியுடன் செயல்பட்ட பணிகளில் முன்னேற்றமான போக்கு காணப்படும். பணம் கொடுக்கல்-வாங்கலில் கவனமாக இருப்பது நல்லது. முக்கிய ஆவணங்களில் கையெழுத்திடுவதை தள்ளிப் போடுவது அவசியம். குடும்பத்தில் விருந்தினர் வருகையும் அதனால் செலவுகளும் ஏற்படும். தாய்வழி உறவு நிகழ்ச்சிகளில் பெண்கள் கலந்து கொண்டு மகிழ்வார்கள். கலைஞர்கள், பிரபல நிறுவனங்களில் இருந்து வந்த ஒப்பந்தங்களில் உற்சாகமாக ஈடுபடுவர். பணவரவு அதிகமாகும். தொழில் ரீதியான பயணங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு. பங்குச்சந்தை வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் காணப்படும். முதலீடுகளை அதிகமாக்க முற்படுவீர்கள்.

அதிர்ஷ்ட எண்கள்: 1,3,9. அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு. அதிர்ஷ்டக்கிழமை: செவ்வாய்.




**கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1,2 ஆம் பாதங்கள்**

கலையுணர்வுடன் காரியங்களில் ஈடுபடும் ரிஷப ராசி அன்பர்களே!

செவ்வாய், புதன் ஆகிய இருதினங்களில் கொடுக்கல்-வாங்கலில் சங்கடங்கள் ஏற்படக்கூடும். பயணங்களைத் தள்ளி வைப்பது நல்லது. நீண்ட நாட்களாக எதிர்பார்த்த நண்பரை சந்தித்து மகிழக்கூடும். அவர் மூலம் ஒரு நல்ல காரியம் நடைபெற வாய்ப்பு உள்ளது. குடும்பத்தில் மங்கல நிகழ்வுகள் நடைபெறலாம். மகன் அல்லது மகளுக்கு அதிக சம்பளத்துடன் புதிய வேலை கிடைக்கக் கூடும். வேலை பார்க்கும் பெண்களுக்கு அலுவலகம் மூலம் வருமானம் அதிகமாகும். கலைஞர்களுக்கு வருமானம் அதிகமுள்ள புதிய ஒப்பந்தத்தால் மகிழ்ச்சி ஏற்படும். சிலருக்கு வீடு, வாகனங்கள் வாங்கும் யோகம் உண்டாகும். பங்குச்சந்தை வியாபாரம் நன்றாக நடைபெற்று அதிக லாபம் கிடைக்கும்.

அதிர்ஷ்ட எண்கள்: 5,6,9. அதிர்ஷ்ட நிறம்: நீலம். அதிர்ஷ்டக்கிழமை: வெள்ளி.





**மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

சத்தியம், நேர்மைக்கு கட்டுப்படும் மிதுன ராசி அன்பர்களே!

ஆர்வத்தோடு செயல்பட்டு பல காரியங்களில் வெற்றி அடைவீர்கள். நீண்ட நாள் எதிர்பார்த்த தகவல் கடிதம் மூலம் வந்து சேரலாம். பிரச்சினைகள் பேச்சு வார்த்தையால் சுமுகமாக தீரும். முக்கிய தகவல் ஒன்று பயணத்தை உருவாக்கலாம். குடும்பம் சீராக நடைபெறும். தம்பதிகளின் ஒற்றுமை பலப்படும். வீட்டுக்குத் தேவையானதை வாங்கி மகிழ்வீர்கள். பிரிந்த தம்பதிகள் ஒன்றுசேர வாய்ப்புண்டு. வேலை தேடும் இளைஞர்களுக்கு, படித்த படிப்புக்கு ஏற்ற வேலை கிடைக்கும் வாய்ப்பு உண்டு. பங்குச்சந்தை வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் பெற நிலையான பங்குகளை வாங்குவது நல்லது.

அதிர்ஷ்ட எண்கள்: 6,7,9. அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு. அதிர்ஷ்டக்கிழமை: செவ்வாய்.




**புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயில்யம்**

செய்யும் வேலைகளை நுணுக்கமாகச் செய்யும் கடக ராசி அன்பர்களே!

செய்யும் சில காரியங்கள் மனதுக்குத் திருப்தி அளிக்கும். அவசியமான காரியம் ஒன்றுக்காக அதிக அலைச்சல் உண்டாகலாம். வரவேண்டிய பணவரவுகள் சிறிது தாமதமாகக் கிடைக்கக்கூடும். தொலைந்த பொருட்கள் அல்லது ஆவணங்கள் கிடைக்க வாய்ப்புண்டு. குடும்பத்தில் அவ்வப்போது சிறுசிறு பிரச்சினைகள் உருவாகலாம். பெண்கள், சாமர்த்தியத்தால் அவைகளை சமாளிப்பார்கள். கலைஞர்கள் ஆர்வ மிகுதியால் கடினமான பணிகளில் நேரடியாகக் கலந்து கொள்ள நேரலாம். வாகனங்களில் செல்லும்போது சிறிய விபத்துகளைச் சந்திக்க நேரும். வேகத்தை விட்டு விவேகத்தை கைக்கொள்வது அவசியம். பங்குச்சந்தை வியாபாரம் சுமாராக நடைபெறும்.

அதிர்ஷ்ட எண்கள்: 1,3,9. அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு. அதிர்ஷ்டக்கிழமை: செவ்வாய்.




**மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம்**

ஆன்மிக விஷயங்களில் அதிகப்பற்றுக் கொண்ட சிம்ம ராசி அன்பர்களே!

சில செயல்களில் தீவிர முயற்சியுடன் பாடுபட்டு நல்ல முன்னேற்றம் அடைவீர்கள். பணவரவுகள் சிறிது தாமதித்தே வந்துசேரும். உறவினர்கள் வழியில் ஏற்பட்ட சிக்கலை மவுனமாக இருந்தே தவிர்த்து விடுவீர்கள். விலகி இருந்த நண்பர் மீண்டும் வந்து சேரலாம். குடும்பத்தில் கடன் பிரச்சினைகள் மற்றும் தேவையற்ற வார்த்தைகளைப் பேசுவதால் மனசஞ்சலம் ஏற்படலாம். பெண்கள் வேலையில் ஈடுபடும்போது கவனம் தேவை. கலைஞர்கள் புதிய வாய்ப்பைப் பெற்றாலும், எதிர்பார்த்த வருமானம் இல்லாமல் போகலாம். பழைய கடன்கள் சச்சரவை ஏற்படுத்தக்கூடும். பங்குச்சந்தை வியாபாரத்தில் சுமாரான லாபம் கிடைக்கலாம். பழைய பங்குகளை விற்க அவசரப்பட வேண்டாம்.

அதிர்ஷ்ட எண்கள்: 3,6,9. அதிர்ஷ்ட நிறம்:வெளிர்மஞ்சள். அதிர்ஷ்டக்கிழமை: வியாழன்.




**உத்திரம் 2,3,4 ஆம் பாதங்கள், அஸ்தம், சித்திரை 1,2 ஆம் பாதங்கள்**

முன்யோசனைகளுடன் செயல்களில் ஈடுபடும் கன்னி ராசி அன்பர்களே!

இந்த வாரம் செயல்களில் அதிக முயற்சியோடு ஈடுபட்டு வெற்றிகளைப் பெறுவீர்கள். சாமர்த்தியமான செயல்களால் காரியங்களை சாதித்துக் கொள்வீர்கள். தள்ளிப்போட்ட காரியங்களை முடித்து விடுவீர்கள். எதிர்ப்புகளால் உண்டான மனக்குழப்பம் நீங்கும். பிரிந்தவர்கள் ஒன்றுசேர வாய்ப்புண்டு. குடும்பத்தில் சீரான முன்னேற்றம் காணப்படும். கடன்களை அடைத்து விடுவீர்கள். மகன் அல்லது மகளின் மூலம் குடும்ப பொருளாதாரம் விரிவடையும். பெண்கள், சகோதர வழி உறவுகளில் நடைபெறும் மங்கல நிக்ழ்ச்சிகளில் பங்கேற்பார்கள். கலைஞர்கள் புதிய நிறுவனங்களின் ஒப்பந்தங்களைப் பெறுவார்கள். பொருளாதார வசதி அதிகரிக்கும்.

அதிர்ஷ்ட எண்கள்: 5,8,9. அதிர்ஷ்ட நிறம்: வெளிர்நீலம். அதிர்ஷ்டக்கிழமை: சனி.




**சித்திரை 3, 4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்**

கலைநுணுக்கத்துடன் காரியங்களைச் செய்யும் துலாம் ராசி அன்பர்களே!

திட்டமிட்டு முயற்சியுடன் செய்யும் வேலைகளில் வெற்றிகளை அடைவீர்கள். தளர்வடையும் வேலைகளில் நண்பர்களின் ஆதரவு பயனுள்ளதாக அமையும். பணம் வருவதற்கு முன் செலவுகள் முன்னால் வந்து நிற்கும். எதிர்பார்த்த முக்கிய தகவல் வந்து மகிழ்ச்சி ஏற்படலாம். குடும்பத்தில் சிறுசிறு கடன் தொல்லைகள் தலை தூக்கும். பெண்களுக்கு ஆரோக்கியக் குறைபாடு ஏற்பட்டு அகலும். திருமணம் தள்ளிப்போய் வந்த கன்னிப்பெண்கள் மற்றும் இளைஞர்களின் கல்யாணக் கனவு நனவாகும் சூழ்நிலை உண்டு. கலைஞர்கள் எதிலும் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. பங்குச்சந்தை வியாபாரம் சுமாராக நடைபெறும்.

அதிர்ஷ்ட எண்கள்: 5,8,9. அதிர்ஷ்ட நிறம்: நீலம். அதிர்ஷ்டக்கிழமை: சனி.




**விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

கவலைகளை மறந்து களிப்புமிகு முகத்துடன் கனிவாகப் பேசும் விருச்சிக ராசி அன்பர்களே!

வெற்றி பெற்ற செயல்களினால் மகிழ்ச்சி அடைவீர்கள். சில செயல்களில் வெற்றி அடைய சிரமப்பட வேண்டியிருக்கும். கிடைக்க வேண்டிய தனவரவுகள் குறிப்பிட்டபடி கிடைப்பதில் தடை இருக்காது. குடும்பத்தில் சிறுசிறு பிரச்சினைகள் அவ்வப்போது காணப்படும். குடும்ப அங்கத்தினர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். பெண்களுக்கு சிறுசிறு ஆரோக்கியக் குறைபாடு ஏற்படலாம். கன்னிப்பெண்கள் மனம் இனிக்கும் சம்பவம் ஒன்று நடந்து, அவர்களை மகிழ்விக்கும். கலைத்துறையைச் சேர்ந்தவர்கள் பிரபல நிறுவனங்களின் பணிகளில் ஈடுபடுவார்கள். வங்கி சேமிப்பு உயரும். பங்குச்சந்தை வியாபாரம் நன்றாக நடைபெற்று, எதிர்பார்க்கும் லாபம் கிடைக்கும்.

அதிர்ஷ்ட எண்கள்: 3,5,6. அதிர்ஷ்ட நிறம்: வெளிர்மஞ்சள். அதிர்ஷ்டக்கிழமை: வியாழன்.




**மூலம், பூராடம், உத்திராடம் 1 ஆம் பாதம்**

உறுதி மிக்க எண்ணங்களும் கம்பீரமான தோற்றமும் கொண்ட தனுசு ராசி அன்பர்களே!

உற்சாகமாகச் செயல்பட்டாலும், தீவிர முயற்சிகள் இருந்தாலும், சில காரியங்களில் மட்டுமே நீங்கள் எதிர்பார்க்கும் திருப்தி கிடைக்கும். தளர்வடைந்த செயல்களைச் செய்ய முயற்சிகளை மேற்கொள்வீர்கள். எதிர்பார்த்த முக்கிய தகவல் கிடைக்கக் கூடும். வீடு, மனை வாங்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு வெற்றி கிடைக்கும் வாய்ப்புகள் உண்டு. வெகுதொலைவில் இருந்து வரும் செய்தி திடீர் பயணத்தை உருவாக்கலாம். குடும்பத்தில் சிறு சிறு கடன் பிரச்சினைகள் இருக்கும். வீட்டுக்கு தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். கலைஞர்கள் புதிய வாய்ப்புகளைப் பெற முயற்சிகளை மேற்கொள்வர். வாய்ப்பு கிடைத்தாலும் எதிர்பார்க்கும் பணவசதிகள் இல்லாமல் இருக்கலாம்.

அதிர்ஷ்ட எண்கள்: 1,5,9. அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு. அதிர்ஷ்டக்கிழமை: செவ்வாய்.




**உத்திராடம் 2,3,4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதங்கள்**

கம்பீரமான தோற்றத்துடன் காட்சியளிக்கும் மகர ராசி அன்பர்களே!

இந்த வாரம் செயல்களில் சிறப்பாகப் பணியாற்றி, முன்னேற்றமான பலன்களை அடைவீர்கள். எதிர்பார்க்கும் தனவரவுகள் திட்டமிட்டபடி வந்து சேரும். தொலைபேசி வழியாக முக்கிய செய்தி உங்களுக்கு வந்து சேரலாம். குடும்பத்தோடு நீண்ட தூர பயணம் மேற்கொள்ளத் திட்ட மிடுவீர்கள். குடும்பத்தில் ஏற்படும் சிறுசிறு பிரச்சினைகளை பெண்களே சாமர்த்தியமாகச் சமாளித்து விடுவார்கள். சுபநிகழ்ச்சிகள் நடத்த முன்னேற்பாடுகளை மேற்கொள்வீர்கள். குலதெய்வ வழிபாடு உள்ளத்தில் குதூகலம் பிறக்கச் செய்யும். கலைஞர்கள் புதிய ஒப்பந்தங்களில் பணியாற்றுவர். வருமானம் அதிகமாகும். பங்குச்சந்தையில் புதிய நண்பர்கள் வருகையால் முதலீடுகள் அதிகமாகும்.

அதிர்ஷ்ட எண்கள்: 5,6,9. அதிர்ஷ்ட நிறம்: பச்சை. அதிர்ஷ்டக்கிழமை: புதன்.




**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1,2,3 ஆம் பாதங்கள்**

அறிவுக் கூர்மையுடன் செயல்களைச் . செய்து வெற்றிபெறும் கும்ப ராசி அன்பர்களே!

தளர்வடைந்த செயல்களில் வெற்றி அடைய தக்க நபர்களின் ஒத்துழைப்பு அவசியமாகலாம். சிறிது தாமதமானாலும், வரவேண்டிய பணவரவுகள் வந்து சேர்ந்திடும். தரும காரியங்களுக்காக செலவு செய்யும் எண்ணம் மேலோங்கும். சிலர் ஆன்மிக பயணம் மேற்கொள்வர். குடும்பத்தில் கணவன்-மனைவி ஒற்றுமை அதிகமாகும். வேலைக்குப் போகும் பெண்கள் வேலையில் அதிகக் கவனம் செலுத்த வேண்டிய கட்டாயம் ஏற்படலாம். பிரிந்த கணவன்- மனைவி ஒன்று சேர வாய்ப்புண்டு. கலைஞர்கள் புதிய ஒப்பந்தத்தைப் பெற்று உற்சாகத்துடன் பணிகளில் ஈடுபடுவார்கள்.

அதிர்ஷ்ட எண்கள்: 5,6,9. அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை. அதிர்ஷ்டக்கிழமை: புதன்.




**பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

கருத்தாழம் மிக்க எழுத்துத் திறமை கொண்ட மீன ராசி அன்பர்களே!

சில காரியங்களில் வெற்றியடைய தீவிர முயற்சி தேவைப்படலாம். உங்களுக்கு வரவேண்டிய பணம் வருவதில் பிரச்சினைகள் ஏற்படலாம். உறவினர்களில் சிலர் உங்கள் மூலம் சில காரியத்தை சாதித்துக் கொள்ள முயற்சிப்பார்கள். நீங்கள் பிணைகளில் கையெழுத்து போடுவதை மட்டும் தற்போது தவிர்ப்பது நல்லது. குடும்பத்தில் சிறு சிறு தொல்லைகள் ஏற்படும். கல்விக்கான செலவுகள் இருக்கும். பெண்கள் சேமிப்பை செலவழித்து சில பிரச்சினைகளை சமாளிப்பார்கள். கலைஞர்கள் புதிய ஒப்பந்தங்களில் பணிபுரிவார்கள். வருமானம் எதிர்பார்த்த அளவு இல்லாவிட்டாலும், வேலையில் திருப்தி காணப்படும். பங்குச்சந்தை வியாபாரம் சிறப்பாக நடைபெறும். லாபம் ஓரளவுக்கு அதிகமாகலாம்.

அதிர்ஷ்ட எண்கள்: 2,5,6. அதிர்ஷ்ட நிறம்: வெண்மை. அதிர்ஷ்டக்கிழமை: திங்கள்.

# தொடர்வேன் மீண்டும்!

எங்கிருந் தாலும் எந்தன்
இதயத்தில் நிலைத்த நண்பா
திங்களோ சிலவாய் நாமும்
திருமுகத் தொடர்பே யின்றி
எங்கேயோ ஏனோ ஏதோ
இருந்துதான் விட்டோம், ஆனால்
தங்கிய நட்பு மீண்டும்
தழைத்திடத் தடைக ளில்லை!

சுட்டிடும் சுடரின் ஆட்சி
துயர்தரும் மதிய வேளை
விட்டுயான் பஸ்சை நீங்கி
வியர்த்திட நடந்து உந்தன்
கட்டிலம் வந்த போதில்
களைப்பிலை; களிப்பே கண்டேன்!
இட்டமாய் உன்றன் பேச்சில்
இன்றமிழ் ரசமும் உண்டேன்!

கவிஞனைக் கலந்த மாதின்
கைக்கனிச் சாறு தேனீர்
அவித்தநல் லரிசிச் சோறும்
ஆக்கிய மீன்கு ழம்பும்
சுவைத்தனன்! சுவைத்த போதில்
சுவையினில் முழுமை கண்டேன்
புவித்தலம் விட்டு நானும்
போம்வரை நினைவில் நிற்கும்!

வன்னிமண் விடுத்துத் தப்பி
வந்ததாம் நிலையை மீண்டும்
எண்ணியே பார்க்கும் வேளை
இதயத்தில் அச்சம் மொய்க்கும்!
எண்ணங்கள் எல்லா மந்த
இறையவன் அறிய வல்லான்
உண்மையாய் வாழ்ந்த தாலே
உயிருடன் வந்து சேர்ந்தோம்!

**- கவிஞர் அ.கௌரிதாசன் -**

## புதுயுகம் நோக்கிப் புறப்படு....!

புதுயுகம் நோக்கிப்
புறப்படு தோழா
மதுயுகம் விட்டு
மறத்திங்கு வாடா!

வடியிலே மூழ்கின்
சருகதாய்ப் போவாய்
குடியது குலைந்து
கருகியே சாவாய்!

சம்பளப் பணத்தில்
கசிப்புநீ குடிக்க
சம்பலும் சோறும்
ருசிக்கிறார் மைந்தர்!

உனக்கொரு வீடு
வடிசாலை என்றால்
தனக்கெனத் தேடும்
சவக்காலை உன்னை!

நிகழ்காலம் உனக்கு
நிழலாக இருக்கும்
எதிர்காலம் உனக்கு
புதிராக அமையும்!

நிஜமான வாழ்க்கை
நீவாழ வேண்டின்
நிஜமாக மதுவை
நீயொதுக்க வேண்டும்!

**ஏ.ஜெ.ஆர். ஷர்மின்**



## மதியை தீய்க்குமே!

குறுக்கு வழியில் செருக்கில் நெருக்கி
கேடு செய்கிறான்-பொல்லா
கெடும்பு செய்கிறான்
கிறுக்க னாகி நெறிகள் பிறழ்ந்து
குற்றம் இழைக்கிறான்-வீணாய்
சிறையில் உழல்கிறான்!

நேர்மை யுள்ள நல்ல மனிதன்
நெஞ்சால் உயர்கிறான்-பரிந்து
தஞ்சம் தருகிறான்
பேர்கள் ஓங்க புகழை ஈட்டி
சரிதம் படைக்கிறான்-தொண்டில்
துரிதம் அடைகிறான்!

சான்றோன் என்ற பட்டம் கண்டு
செகத்தை வெல்கிறான்-வாழ்ந்த
யுகத்தைக் கொள்கிறான்
ஆன்றோ னாக அவனி காத்து
ஆட்சி புரிகிறான்-துன்பில்
மீட்சி தருகிறான்!

கெட்ட குணமும் கொடிய போக்கும்
குடும்பம் வெறுக்குமே-ஏற்க
குலமும் மறுக்குமே
மட்ட மான செருக்குக் கிறுக்கு
மனிதம் மாய்க்குமே-மமதை
மதியைத் தீய்க்குமே!

**-மூதூர் கலைமேகம்-**

# வீரமா முனிவர்

*இத்தாலி நாட்டவராய் இருந்தாலும் எம்மினத்தார்*
*சொத்தாகித் தொண்டுசெய்த சோதியவர்-நித்தமன்பாய்*
*வீரமா முனிவரென விளம்பஅவர் சொல்லியந்து*
*திரமுரைக்கின் தமிழே தேன்.*

*பரமார்த்த குருகதையைப் படைத்துநகைச் சுவைபடர*
*தரமாய்த் தமிழ்செய்த தந்தையவர்-சிரமேற்கும்*
*தேம்பா வணிநயந்து தெள்ளுதமிழ் சேர்த்துஎழில்*
*பூம்பாய் பொழில்விளைத்தான் பொன்.*

*இத்தாலி கிரேக்கம் இலத்தின் பிரஞ்சுஎனும்*
*முத்தான மொழிபலவும் கற்றுயர்ந்தோன்-அத்தனையும்*
*கற்றவழி நின்றுலகோர் கனிவுடன்நல் அன்புநெறி*
*பற்றிடவே செய்தான் பணி.*

**- நெடுந்தீவு மகேஷ் -**

# நெஞ்சோடு நெஞ்சம்

## கடவுளை வெறுக்காதே!

அன்பு [illegible]கம் பொறுமை
அனை[illegible]யார்க்கும் உடைமை
வ[illegible] கொடுமை கோபம்
[illegible]வு நெறியின் மடமை.

கல்வி கடமை ஒழுங்கு
காதல் அன்பு பணிவு
செல்ல அன்னை சேவை
சிறந்த வாழ்வின் போக்கு.

ஆசை பாசம் மோசம்
அண்டி வந்தால் நாசம்
ஓசை ஒளியின் வடிவம்
ஒருவன் தந்த படிமம்.

கருணை கண்ணியம் கவிதை
காதல் வாழ்வின் ஊட்டம்
சிறுமை சுயமை சீற்றம்
சிறந்த வாழ்வின் மாற்றம்.

பெற்ற தாயைப் பேணு
பெரியோர் வார்த்தை போற்று
கற்ற கல்வி எல்லாம்
கடுகு என்றே எண்ணு.

**- ம. கார்த்திக் -**

# குறிஞ்சிக் கோவில்கள்



**- கவிஞர் ஸி.எஸ். காந்தி -**

## டயகாமம் நகர் ஸ்ரீ அருள்மாரி

அபயக்கரங் காட்டும் அம்மைக்கு மேற்கு
டயகாமம் நகரில் கோயில்-ஆகா
அற்புதச் சிற்ப வாயில்
உபயக்கரம் நீட்டும் நகரத்து முகப்பில்
வழியோரங் காக்குங் கோயில்-என்றும்
பழிபாவம் நீக்குங் கோயில்!

பார்வையை ஈர்க்குந் தேயிலைப் போர்வை
பரந்திங்கு செழுமை யூட்டும்-என்றுஞ்
சிறந்திங்கு வறுமை யோட்டும்
சீர்சேர்க்கும் ஊரில் பேர்வாங்கும் நகரில்
தார்பூணும் அம்மை கோயில்-அந்த
கார்மேகன் தங்கை கோயில்!

காலைக்கதிர் வீசி பாற்கரன் கீழை
கவின்மலை ஏறிப் பார்ப்பான்-இந்தப்
புவிபாவை பொலிந்து நிற்பாள்
மாலைகள் பூண்டு மணிமகுடங் கொண்ட
அன்னையும் பூசை ஏற்பாள்-வாட்டும்
இன்னல்கள் மாசைத் தீய்ப்பாள்!

விரிவாகை, முருங்கை, இலாடாப்பு, சவுக்கை
நிழலீந்து குளிர்மை யூட்டும்-எங்கும்
அழகீந்து பார்வை ஈட்டும்
பரிகாரங் காண பக்தர்கள் நெஞ்சம்
பராசக்தி கோயில் நாடும்-காவில்
முகாரிபொன் வண்டு பாடும்!

கருங்கோடு போல நெடும்பாதை இங்கு
நகர்நோக்கி சுழித்து ஏகும்-குன்றச்
சிகரங்கள் கிழித்துப் போகும்
வருங்கேடு தடுக்கும் மாடனும் மதுரை
வீரனும் வழியில் காவல்-நொண்டி
திரரும் பக்கம் நிற்பார்!




வேதனை கண்டு இறையை
வெறுப்பதேன் மனிதா? வாழ்வில்
சோதனை இயற்கை யன்றோ!
சோர்ந்துநீ துஞ்ச லாமோ?
சாதனை புரிய வாழ்வில்
சந்தர்ப்பம் வாய்க்கும்; நொந்து
பாதகன் என்று அந்தப்
பரமனை இகழ்தல் பாவம்!

இன்னல்கள் வாட்டும் போழ்து
இறையில்லை என்ப தாமோ?
கண்ணில்லா குருடர் தாமும்
கடவுளை நம்பி யுள்ளார்
சின்னநின் புத்தி யாலே
சிந்திக்க மறந்து போனாய்
என்னவழி ஆய்ந்தாய் தின்ன?
திட்டுதல் இறையை ஏனோ?

தீராத பிணிகள் நின்னை
தீண்டவும் இல்லை; என்றுஞ்
சீராக இயங்கும் யாக்கை
சிறப்பாக அளித்து அன்பு
மாறாத இறையும் நின்னை
மகிதலம் மீது வைத்தும்
பேறாக எண்ணி டாது
பரமனை இகழ்தல் பாவம்!

கேட்டவை கிட்டா விட்டால்
கடவுளை நோக லாமோ
போட்டவை முளைக்கும்; சற்றுப்
பொறுமைகொள்; தெம்பு பூண்பாய்!
நீட்டிய அருட்க ரத்தால்
நிச்சயம் அருள்வான் வல்லோன்
காட்டுவாய் பக்தி நித்தம்
கடவுளை இகழ்தல் வேண்டாம்!

**- வி.எம். அன்ஸார் -**


கபீஷ்
01
புத்தாக்கம் : கே.கான்
02
சிகால் நரி தன்னுடைய வயிற்றை நிரப்புவதற்காக உணவு தேடி அலைந்து கொண்டிருந்த போது கஷ்பு ஆமை தென்பட்டது.
தனியாகஇருக்கிறான் இன்றைய உணவுக்குச் சரி.
கஷ்பு என்னோடு வாயேன். ஆமை ஒன்று துன்பத்தில் இருக்கிறது.
எங்கே?
அந்த மலை மீது புதரில் சிக்கியிருக்கிறது. ஏதோ ஒரு துஷ்டப் பறவை எங்கிருந்தோ அதனைக் கொண்டு வந்து எறிந்திருப்பது போல் தோன்றுகிறது.
பயங்கரமான விஷயம்! என்னுடைய சகாக்களையும் கூட்டிவருகிறேன்.
அவ்வளவு நேரம் எங்கே இருக்கிறது! அதை உடனடியாக வெளியேற்றாவிட்டால்........அது...
ஓ இறைவா!
என்னுடைய முதுகில் ஏறிக் கொண்டால் அவசரமாகப் போய்ச் சேரலாம்.
நல்லது.
கஷ்பு சிகாலின் முதுகில் ஏறிச் சென்றது.
சிகால், நீ எவ்வளவு நல்லவன்! எந்த மிருகம் ஆமைக்காக இவ்வளவு உதவி செய்யப் போகிறது!
தந்திரமுள்ள நரி இனிய வார்த்தைகளைப் பேசிப் பேசி கஷ்புவை மலைக்கு இட்டுச் சென்றது.
ஆமை எங்கே சிக்கியிருக்கிறது?
அந்தப் புதரிலே.
அதேவேளை கபீஷ் குரங்கு மலைக்குக் கீழாக கடலை நோக்கிச் சென்றுகொண்டிருந்தது. சடுதியாக அதன் கழுத்து மேல் நோக்கித் திரும்பியபோது அது கண்டது-
அப்பப்பா! இது சிகால் அல்லவா... அதனோடு ஆமை!
இந்தத் துஷ்டன் அப்பாவி ஆமையை மேலே இருந்து தள்ளிவிடுவான். உடனே நான் ஏதாவது செய்தாக வேண்டும்.
இங்கே சிகால் தன்னுடைய சூழ்ச்சித் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று நினைத்தது.
புதரினுள் எனக்கு ஆமை தெரியவில்லையே!
அதிசயம் தான்! எங்கே போய் விட்டது அது? சற்றைக்கு முன் கூட இருந்ததே. ஐயோ!
என்ன விஷயம்?
எனக்குக் காய்ச்சல் ஏறிக்கொண்டிருக்கிறது. குறட்டைக்கிறது.
உண்மையிலேயே குளிரால் நடுங்குவது போன்று சிகால் நடுங்கியது. இதனால் கஷ்பு விழுந்துவிட்டது.
...கற்பாறையில் மோதித் தெறித்தது. சற்று நேரத்துக்கு மலை மீது தரித்து நின்றது.
03
சிகால், என்னைக் காப்பாற்று!
ஆஹ்!
ஆனால், அதற்கு கற்பாறை மீது கால்களை வைத்திருக்க முடியவில்லை.
காப்பாற்று!
விழுந்துவிட்டது. எனது திட்டம் நிறைவேறி விட்டது.
நிலத்தில் விழுந்தவுடனே அதனுடைய ஓடு துண்டுதுண்டாகிப் போய்விடும்.
அது சேட்டமாகக் கிடக்கும் - நான் வந்து அதற்கு உணவளிப்பேன் என்ற எதிர்பார்ப்பில் ஹா ஹா ஹா.
விழுந்துவிடப் போகிறேன் என்று நினைத்தது.
04
விழுந்தவுடன் திகைத்துப் போய்விட்டது.
சப்
இதற்குள் சிகால் மெல்ல மெல்ல கற்பாறையில் இருந்து இறங்கிக் கொண்டிருந்தது.
சிகால் என்னை விழுத்தியது.
அவனுக்கு எப்போதுமே ஞாபகத்தில் இருக்கக் கூடிய பாடம் படிப்பிக்கிறேன்.
ஓ!
கபீஷின் வால்! அவன் எங்கிருந்து வந்துவிட்டான்? அவன் நிச்சயமாக என்னை விழுத்தாட்டி விடுவான்
ஓ....ஹ! ஆஹ! என்னுடைய எலும்புகள் முறிந்துவிட்டதே!
இந்த ஆமை பத்திரமாக இருக்கிறதே.
மாட்டேன்.
முற்றிற்று




இந்த 2010 டிசம்பர் மாத விடுமுறையில் நீங்கள் என்ன செய்ய விரும்புகிறீர்கள்? விரலைக் கடித்துக்கொள்ள முன்னர் திட்டமிடுவோமா?

சரி, இந்த விடுமுறைக்கு அம்மப்பா வீட்டுக்குப் போவீர்களா, அப்பப்பா வீட்டுக்குப் போவீர்களா? வேறு உறவினர்களின் வீடுகளுக்குப் போகத் திட்டமிட்டிருக்கிறீர்களா?

# இந்த விடுமுறையில்.....

தூர இடத்திலிருந்து வந்து உங்கள் வகுப்பில் படிக்கும் உங்கள் நண்பன் ஒருவனின் வீட்டுக்குப் போகலாம் என்றிருக்கிறீர்களா? எங்கே போனாலும் ஜாலியாக இருக்கவே விரும்புவீர்கள்.



விடுமுறை என்பது, விநோதம், விளையாட்டு, அரட்டைக் கச்சேரி, குரட்டைத் தூக்கம் என்பனவற்றுக்கு மட்டுமல்ல என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். விடுமுறையிலே நீங்கள் சம்பாதிக்க வேண்டும்! எதை? அறிவை!

நீங்கள் உறவினர், நண்பர்களின் வீடுகளுக்குச் சீராடச் சென்றால், அங்கே காண்கின்ற நல்ல பழக்க வழக்கங்கள் எவை என்பதை உற்றுநோக்குங்கள். உங்கள் வயதினரான பிள்ளைகள் உங்களைவிடத் திறமைசாலிகளாக இருந்தால், அவர்கள் பாடங்களை எப்படி அணுகுகிறார்கள், எப்படிப் படிக்கிறார்கள் என்று பாருங்கள். நீங்கள் செல்லும் இடத்தில் புகழ்பெற்ற விளையாட்டு வீரர்கள் எவரும் இருந்தால், அவரிடமிருந்து பல நுணுக்கங்களை அறிந்துகொள்வதற்காக அவரைச் சந்தித்துக் கேட்டுப் பாருங்கள்.

நீங்கள் சுற்றுலா தான் போகிறீர்களா? நல்லது. நீங்கள் போகும் இடத்துக்கு அதற்கு முன்னரும் பலர் போயிருப்பார்கள். அவர்களும் சில விஷயங்களைப் படித்துக் கொண்டிருக்கக் கூடும். அதுபோல் நீங்களும் உல்லாசமாகப் பொழுதுபோக்குவதோடு, அறிவை வளர்த்துக் கொள்ளவும் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஹவென்ஸாங், பாகியன், இப்னு பதூதா ஆகியோரைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அவர்கள் உலகை அறியும் அடங்கா ஆவலோடு சுற்றுலா சென்றார்கள். அப்போது அவர்களுக்குக் கிடைத்த அனுபவங்களையும் அறிவையும், நாடு திரும்பிய பின்னர் எழுத்திலே வடித்தார்கள், இப்போது நூற்றுக் கணக்கான வருடங்கள் கழிந்துவிட்டன. ஆனால், இன்றும் கூட புராதன இந்தியா, இலங்கை பற்றிய அவர்களது பிரயாணக் கதைகள் நம்பகமான வரலாற்றுக்கு நிகரானவையாக விளங்குகின்றன. நீங்களும் வரலாறு படைக்க முடியும் என்பதை மறந்துவிடாதீர்கள். ஆனால், அவர்களது கண்ணோட்டம் உங்களுக்கு அவசியம் தேவை. அதை நீங்கள் வளர்த்துக் கொள்ள முடியும். இன்னும் ஏன் தாமதம்? தொடங்குங்கள் உங்கள் பயணத்தை. இப்போது பேயாப் பெருமழையும் குறைந்து கொண்டு வருகிறதல்லவா!

**தினா**

## புதுவருடம்




# யார் வீட்டுக்கு வருவீங்க?



அன்று அம்மம்மாவாகிய அவள் தன்னுடைய வீட்டுக்குத் திரும்பத் தயாராகிக் கொண்டிருக்கிறாள். அதனால், பேத்தி சோக மயமாகக் காணப்பட்டாள்.

மூன்று, நான்கு மாதங்களுக்கு முன்னர் மகளின் பிள்ளைப் பேற்றுக்கு அவள் இங்கே வந்தாள். தங்கினாள். பேத்தி உம்மும்மா, உம்மும்மா என்று எப்போதும் அவளையே சுற்றிவந்து கொண்டு இருந்தாள்.

இப்போது மீண்டும் அவள் தன்னுடைய வீட்டுக்குப் போகும் நேரம் வந்துவிட்டது. பேத்தி படுசுட்டி. ஏதாவது குறும்பு செய்துகொண்டே இருப்பாள்.

அவள் பேத்தியிடம், ''கதீஜா, நீங்க உம்மா சொல்றபடி கேட்டுக் கொண்டு, நல்ல பிள்ளையா இருந்தால், மறுபடியும் உங்க வீட்டுக்கே வந்து நிப்பேன் இல்லாட்டி ஆயிஷா தங்கச்சி வீட்டுக்குத் தான் போவேன்'' என்றாள்.

அப்போது நான்கு வயது கூட நிரம்பாத சுட்டி சொன்ன பதில் அவளுடைய வாயை அடைக்கச் செய்துவிட்டது.

''உம்மும்மா, நானும் சொன்னது கேட்டுக் கொண்டு, ஆயிஷாவும் சொன்னது கேட்டுக் கொண்டு, நல்ல பிள்ளைகளாக இருந்தா நீங்க யார்ட வீட்டுக்குப் போவீங்க?'' என்று கேட்டாளே ஒரு கேள்வி!

**ஸீனத் ரஹ்மா**

## சிறுவர் நீங்கள்!

இறைவன் அடி போற்றி
இன் சொல் தினம் பேசி
சின்னஞ் சிறுவர் நீங்கள்
சிறப்புடனே வளர்ந்து



பெரியோர் சொற் கேட்டு
பெருமை பல சேர்த்து
சிறுவயது வாழ்க்கையிதை
சீராக வாழ்ந்திடுக.....

கல்வி நன்றாய் கற்று
நல்லதையே நினைத்து
நல்லதையே செய்து
வள்ளவனாய் வளர்ந்திடுக!

கெட்டிக்காரன் என்று
பட்டம் பல பெற்று
பல்லாண்டு காலம்
எல்லோரும் பெற்ற - இம்
மண்ணில் சிறுவர் நீங்கள்
மாண்புடனே வாழ்ந்திடுக!

*லோகேஸ்வரி*
*கிருஷ்ணமூர்த்தி*


## ஜோக்ஸ்

* ஒரு சிறுமிக்கு அழகாக இருக்க வேண்டுமென்ற ஆசை வந்தது. அவள் ப்ளாஸ்டிக் சிகிச்சை நிபுணரிடம் சென்றாள். ப்யாஸ்டிக் ஸேர்ஜரிக்கு ஆகும் செலவைக் கேட்டாள்.

அவர் 10,000 ரூபாவாகும் என்று சொன்னார்.

சிறுமி உடனே கேட்டாள்: ப்ளாஸ்டிக்கை நான் கொண்டுவந்து தந்தால் எவ்வளவு செலவாகும்?

* யானையொன்று பாலத்தைக் கடந்து கொண்டிருந்தது. அதன் முதுகின் மேல் ஈயொன்று உட்கார்ந்து விட்டது. பாலம் உடையப் போவது போல் ஓசை வந்துகொண்டிருந்தது. அப்போது ஈ கேட்டது: தோழா, நாங்கள் போய்ச் சேர்ந்துவிடுவோமா, அல்லது நான் இறங்கிவிட்டுமா?



இந்த அதிசயமான மிருகத்துக்குள் வேறுபல மிருகங்களின் அங்கங்கள் மறைந்திருக்கின்றன அவற்றை கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்...

# கேள்வி நேரம்

**கன்னத்தில் ஊசியைக் குத்திக் கொண்டு பிச்சை கேட்டு வருகிறார்களே. அவர்களுக்கு நோகாதா?**

நம்முடைய நாக்கில் இனிப்பு, கசப்பு, உப்பு, புளிப்பு என்ற நான்கு சுவைகளை உணர்த்தக் கூடிய உறுப்புக்கள் உள்ளது போல நம்முடைய தோலில் 01. தொடுதல் 02. அழுத்துதல் 03. சுடுதல் 04. குளிர்தல் 05. நோதல் என்ற ஐந்து விதமான உணர்ச்சிகளைத் தரக்கூடிய உறுப்புக்கள் உள. அவை மிக நுண்ணியவையாக இருப்பதால் கண்ணுக்குப் புலனாவதில்லை.

இவற்றுள் நோவு உணர்த்தும் உறுப்புக்களே உடலில் அதிகமாகக் காணப்படுகின்றன. மற்றவித உறுப்புக்கள் அனைத்தும் இரண்டு மடங்கு உள்ளனவாகக் கூறுகிறார்கள். மிக மிகச் சிலவாகக் காணப்படுவது கன்னத்திலும் துடையிலும் காதுமடலிலுமாகும். அதனால் தான் கன்னத்தில் ஊசியை அதிக நோவு இல்லாமல் நுழைத்து விடலாம்.

இந்த உறுப்புக்கள் பல்லிலும் நகத்தினடியிலும் கண்ணிமைகளிலுமே ஏராளமாகக் காணப்படுகின்றன, அதனால் தான் நகத்தினடியில் ஏதேனும் பட்டால் அதிகமாக வலிக்கிறது. கண்ணில் ஏதேனும் தூசி விழுந்துவிட்டால் அது இமையுடன் உராயும் போது பொறுக்க முடியாத நோவு உண்டாகிறது. பல்வலி உண்டானால் அதைத் தாங்குவது மிகவும் கஷ்டமான காரியம்.

## சின்னத் தம்பி காத்திருந்தான்...

வளைந்து வானம் பரந்திருக்க
வண்ண நிலா சிரிக்கும்
பஞ்சு முகில் அலைகளாகப்
பாய்ந்து பாய்ந்து அருகுவரும்
(வளைந்து வானம்...)



சிரித்த நிலா சிறை புகுந்து
கொஞ்ச நேரம் மறைந்திருக்கும்
கள்ளத்தனம் கொண்ட முகில்
மெல்ல மெல்ல விலகி ஓடும்
பௌர்ணமியின் மீள் வரவு
பால் வெளியாய் பரந்திருக்கும்
(வளைந்து வானம்...)

மீள மீள மேகப்பொதி
நிலவுப் பெண்ணைக் கவர்ந்துகொள்ளும்
மறைந்து கொண்ட நிலவதுவும்
மாறிமாறிக் காட்சியாகும்
நாளும் இது நீளாதா...?
வான்வெளியைப் பார்த்தபடி
சின்னத்தம்பி காத்திருந்தான்...
(வளைந்து வானம்...)

**பா.பொன்நிலவன்,**
**மீசாலை.**

# ரஜினியுடன் சேர்ந்து நடிக்க மாட்டேன் - கமல்



ரஜினியும் கமலும் சேர்ந்து நடிக்க வேண்டுமென்பதே அனைத்து ரசிகர்களின் ஆசையாக இருக்கிறது.

ஆனால், ''நானும் ரஜினியும் சேர்ந்து நடிப்பதில்லை என்று பல வருடங்களுக்கு முன்பே ஒப்பந்தம் செய்துகொண்டோம்'' எனக் கமல் கூறியுள்ளார்.

சமீபத்தில் 'மன்மதன் அம்பு' படக்குழுவினர் செய்தியாளர்களைச் சந்தித்தனர். அப்போது ஷங்கர் இயக்கத்தில், சூப்பர் ஸ்டார் ரஜினி 'எந்திரன்' படத்தில் நடித்தார். இந்தியாவிலே பெரிய பட்ஜட் படமாகவும் வெற்றிப் படமாகவும் அமைந்துள்ளது எந்திரன்.

அதே போல நீங்களும் ஒரு பெரிய பட்ஜெட் படத்தில் நடிக்கும் திட்டமுள்ளதா? ஏற்கனவே இதற்காக நீங்கள் முயற்சி எடுத்துள்ளீர்கள் என்று கூறுகிறார்களே என்று செய்தியாளர்கள் கேட்டனர்.

அதற்குக் கமல், 'நான் யாரையும் பின்பற்றுவதில்லை. எனக்கென்று தனித்துவம் இருக்கிறது. நடிப்பில் எனக்குச் சந்தேகம் ஏற்பட்டால், என் குரு சிவாஜியைத்தான் நினைப்பேன். அவரிடம் இருந்து கற்றுக்கொள்ள நிறைய இருக்கின்றன.

என்னையும், ரஜினியையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டாம். எங்களை நாங்கள் ஒப்பிட்டுப் பார்ப்பதில்லை. அதேவேளை, நாம் இருவரும் சேர்ந்து நடிப்பதில்லை என்றும் பல வருடங்களுக்கு முன்பே ஒப்பந்தம் செய்துகொண்டோம்.

'இளமை ஊஞ்சலாடுகிறது' காலத்திலேயே இந்த முடிவை எடுத்துவிட்டோம். எங்களுக்குள் நல்ல அன்பு இருக்கிறது, நல்ல நட்பு இருக்கிறது, அது இருந்தாலே போதும்.

'பட்ஜட்' என்று பார்த்தா, 'தசாவதாரம்' பெரிய பட்ஜெட் படம்தான். அதேபோல் இந்த 'மன்மதன் அம்பு'ம் பெரிய பட்ஜெட் படம்தான்'' - என்றார்.

மேலும், இனி நீங்கள் எழுதும் கதைகளில் மட்டுமே நடிப்பீர்களா என்ற ஒரு கேள்விக்குக் கமல் பதிலளிக்கையில்,

''நல்ல கதையை யார் எழுதினாலும், அதில் நான் நடிப்பேன். உங்களிடம் நல்ல கதை இருந்தால், நான் நடிக்கத் தயார் என்றார்.



# நயன் - திரிஷா இடையே பனிப்போர்...!

திரிஷா கதாநாயகியாக நடிக்க வேண்டிய 'சாவித்திரி' என்ற தெலுங்குப் படத்தின் வாய்ப்பு தற்போது நயன்தாராவுக்குச் சென்றுள்ளது.

திரிஷாவுக்கும் நயன்தாராவுக்கும் இடையிலான போட்டி தமிழ், தெலுங்கு என இரண்டு பக்கத்திலும் பேசப்படுகிறது.

நயன்தாரா கதாநாயகியாக நடிக்க வேண்டிய படத்தின் வாய்ப்பை திரிஷா பெறுவதும், திரிஷா நடிக்க வேண்டிய படத்தின் வாய்ப்பை நயன்தாரா பெறுவதுமாக, இவர்களின் போட்டி இருந்து வந்தது.

பிரபுதேவாவுடனான காதலை அடுத்து நயன்தாரா, படங்கள் ஒப்புக்கொள்வதைக் குறைத்துக்கொண்டார். இதையடுத்து இவர்கள் பற்றிய பரபரப்பு அடங்கியிருந்தது.

இப்போது படங்களில் தொடர்ந்து நடிக்க நயன்தாரா முடிவு செய்துள்ளார். இதனால், தெலுங்குப் பட உலகில் இவர்களுக்கிடையிலான போட்டி மீண்டும் தலை தூக்கியுள்ளது.

தேஜாவின் இயக்கத்தில் வெங்கடேஷ் நடிக்கும் படம் 'சாவித்திரி'. இந்தப் படத்தில் கதாநாயகியாக நடிக்க திரிஷாவிடம் கேட்கப்பட்டது. அவரும் ஒப்புக் கொண்டார்.

ஆனால், திடீரென்று நயன்தாரா நடிக்கிறார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இதையடுத்து நயன்தாரா - திரிஷா இடையேயான பனிப்போர் மீண்டும் ஆரம்பித்துள்ளது.

# பிஸியான லக்ஷ்மி ராய்!



முன்னணி நடிகையாக இல்லாவிட்டாலும் கூட கை நிறையப் படங்களுடன் பிஸியாகக் காணப்படும் லக்ஷ்மி ராய், திரையுலகினருக்கு பெரும் அதிசயமாக தோன்றுகிறார்.

லக்ஷ்மி ராய் இதுவரை ஒரு ஸ்டார் என்ற அந்தஸ்தையே எட்டவில்லை.

ஆனாலும் படு பிஸியாகக் காணப்படுகிறார் - தொடர்ந்து செய்திகளில் அடிபட்டவண்ணமிருக்கிறார். தமிழில் தற்போது அஜித்துடன் 'மங்காத்தா', ராகவா லாரன்ஸ் இயக்கத்தில் 'காஞ்சனா' ஆகிய படங்களில் நடித்து வரும் லக்ஷ்மி ராய்க்கு, மலையாளத்தில் ஏகப்பட்ட படங்கள் கைவசம் இருக்கின்றனவாம். தற்போது 'மங்காத்தா' படத்திற்காக பாங்கொக்கில் முகாமிட்டுள்ளார் லக்ஷ்மி ராய். அதை முடித்துக் கொண்டு திரும்பிய பின்னர் மலையாளப் படங்களில் நடிக்கப் போகிறார்.

மலையாளத்தில் 'கிறிஸ்டியன் பிரதர்ஸ்', 'கேஸனோவா', 'யோதா 2' ஆகிய படங்களில் நடித்து வருகிறார். 'மங்காத்தா' தவிர தமிழில் இவர் நடித்து வரும் இன்னொரு படம் 'காஞ்சனா'. 'முனி' படத்தின் 2ஆவது பாகமாக இது உருவாகிறது என்பது குறிப்பிடத்தக்கது. ஸ்டார் அந்தஸ்து இல்லை, முக்கியத்துவம் வாய்ந்த நடிகையாகவும் இல்லை. ஆனாலும் பட்டு பிஸியான நடிகையாக லக்ஷ்மி ராய் இருப்பது உண்மையிலேயே ஆச்சரியம்தான்.

*தற்போது உருவாகிக்கொண்டிருக்கும் 'தெய்வமகன்' படத்தில், தனது அதிரடி நடிப்பை வெளிப்படுத்தியிருக்கிறார் அனுஷ்கா.*

*நடிகர் விக்ரமுடன் இணைந்து அனுஷ்கா 'தெய்வமகன்' படத்தில் நடித்துக்கொண்டிருக்கிறார்.*

*இந்தப் படத்தில் நீதிமன்றத்தையே அதிர வைக்கும் அளவுக்கு, வாதாடும் வழக்கறிஞர் வேடத்தில் அவர் நடிக்கிறார்.*

*பக்கம் பக்கமாகப் பேசவேண்டிய வசனங்கள் இந்தப் படத்தில் அனுஷ்காவிற்கு வழங்கப்பட்டிருக்கின்றனவாம். முக்கியமாக பெண்களின் உரிமைக்காகக் குரல் கொடுத்துப் பேசியிருக்கிறார். இந்தப் படத்தில் அனுஷ்காவின் நடிப்பு மிக அருமையாக அமைந்திருக்கிறது என படக்குழுவினர் தெரிவிக்கின்றனர். விக்ரமே சில இடங்களில் இவரது நடிப்பைப் பார்த்துப் பிரமித்து, பாராட்டவும் செய்தாராம்.*

*இதற்கெல்லாம் காரணம் 'அருந்ததி' படம் கொடுத்த வெற்றி தான் என்கிறார் அனுஷ்கா.*

# தெய்வ மகனில் கலக்கும் அனுஷ்கா!



# ஹிந்தி நாயகனின் காதலியானார் ரீமா


ஹிந்தப் படநாயகன் மனோஜ் பாஜ்பாயிக்கு காதலியாகிறார் நம்ம ரீமாசென்.
ஹிந்தி நடிகர் மனோஜ் பாஜ்பாய் நடிக்கும் படத்தில் ரீமாசென் நடிக்கவுள்ளார். இந்தப் படம் தமிழில் சூப்பர் ஹிட்டான 'சுப்ரமணியபுரம்' படதின் 'ரீமேக்'.
''என் நடிப்பைப் பார்த்து வியந்து பாராட்டிய டைரக்டர்களில் ஒருவர்தான் அனுராக். இவருடைய படத்தில் பெங்காலிப் பெண்ணாக நடிக்கிறேன். ஹிந்தி நடிகர் மனோஜ் பாஜ்பாயின் 'கேர்ள் ப்ரெண்ட்'டாக உணர்வுபூர்வமான பாத்திரத்தில் வருகிறேன்.
'ஆயிரத்தில் ஒருவன்' படத்துக்குப் பிறகு வாய்ப்புகள் பல வந்தன. இதில் சில என்னைக் கவர்ந்துள்ளன.
தமிழில் ஒரு சுற்றுச் சுற்றி வரப்போகிறேன்'' என்று நம்பிக்கையுடன் தெரிவித்துள்ளார் ரீமா.
டைரக்டர் செல்வராகவன் கூட ரீமாவை விரைவில் அழைக்கலாம் என்றும் கூறுகிறார்கள்.



# தலைவன் இருக்கிறான் படத்தில் கமலுடன் ஜோடி சேர்கிறார் அனுஷ்!

'தலைவன் இருக்கிறான்' படத்தில் கமல்ஹாசனுடன் ஜோடி சேரும் வாய்ப்பு, அனுஷ்காவுக்குக் கிட்டியுள்ளது என சினிமா வட்டாரங்களில் பேச்சடிபடுகிறது
ஏற்கனவே அனுஷ்கா ஆறடி உயரமானவர். அவரது உயரத்தைப் போலவே சினிமா வில் அவரது நிலையும் அதிரடியாக உயர்ந்துவருகிறது.
முதலில் விஜய், சூர்யா, விக்ரம், சிம்பு என அடுத்தடுத்து பெரிய நாயகர்களுடன் நடிக்கும் அனுஷ்காவிற்கு, தற்போது இன்னொரு இன்ப அதிர்ச்சி வந்துள்ளது.
'தலைவன் இருக்கின்றான்' படத்துக்கு அனுஷ்காவை கமல் ஒப்பந்தம் செய்யவிருக்கிறார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

# அஜித்தின் பிறந்த தினமான மே 1இல் மங்காத்தா வெளியீடு



'மங்காத்தா' படம் பற்றிய தகவல்கள் தினந்தோறும் வெளிவந்து அஜித் ரசிகர்களை மகிழ்வித்த வண்ணம் உள்ளன.
'மங்காத்தா' படப்படிப்பு நடைபெறும் இடங்கள், திகதி என அனைத்தும் அஜித் ரசிகர்களை வந்தடைகின்றன. தற்போது, இரண்டு கும்பல்களுக்கிடையே நடைபெறும் போராட்டத்தை மையப்படுத்தியதே 'மங்காத்தா'வின் கதை என தற்பொழுது தகவல்கள் வெளியாகியுள்ளன.
இந்தப் படத்தின் முதற்கட்டப் படப்படிப்பு பாங்கொங்கில் நடைபெற்றது. தற்பொழுது சென்னையிலுள்ள 'ஸ்டுடியோ' ஒன்றில் மிகப்பெரிய 'செட்' அமைக்கப்பட்டு படப்படிப்பு நடைபெற்றுவருகிறது.
'மங்காத்தா' படத்தில் அஜித், அர்ஜுன், திரிஷா, சினேகா, கணேஷ் வெங்கட்ராம், பிரேம்ஜி அமரன், லக்ஷ்மிராய் உள்ளிட்டோர் நடிக்கின்றனா.
இப்படத்தில் நடிக்கக் கடைசி நேரத்தில் நாகார்ஜுனா மறுத்துவிட்டமையால், அவருக்குப் பதிலாக அர்ஜுன் நடிக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. விளையாடு மங்காத்தா உட்பட இப்படத்தின் மூன்று பாடல்களுக்கும், படத்தின் தீம் இசைக்கும் யுவன் ஏற்கனவே இசை அமைத்து முடித்துவிட்டார். இந்தப் படம் அடுத்தவருடம் மே 1இல் அஜித்தின் பிறந்தநாளன்று திரைக்கு வரவுள்ளது.



# கமல் ஒரு ரகசிய கவிஞன்

**வைரமுத்து பாராட்டு**

'மன்மதன் அம்பு' படத்துக்காக உலக நாயகன் கமல்ஹாசன் 'இலட்சியச் செறிவோடும் கவிதை நயத்தோடும்' பாடல் வரிகளை எழுதியதை படக்குழு மட்டுமின்றி தமிழ்ச் சினிமாவின் முன்னணி பாடலாசிரியரான கவிப்பேரரசு வைரமுத்துவும் ரசித்து அசந்து போயுள்ளாராம்.
தமிழ்த் திரையுலகில் கமல் ஒரு 'ரகசியக் கவிஞன்' என்று கவிப்பேரரசு மனம் திறந்துப் பாராட்டியுள்ளார்.
அது மட்டுமின்றி கமலை உச்சி முகர்ந்து, ''தமிழுக்கு மேலும் பல தங்கக் கவிதைகளை வாரி வழங்குக உலக நாயகனே'' என்றும் உற்சாகப் படுத்தியுள்ளார்.
உலக நாயகனைப் போற்றுகிற விதமாக கவிப்பேரரசு கவிதைகளையும் எழுதியிருக்கிறாராம்.



படம்-காவலன்
விஜய்-அசின்





















## 'ஊருக்கு நல்லது சொல்வேன்' நூல் வெளியீடு

தினக்குரல் பிரதம ஆசிரியர் வீ.தனபால சிங்கம் எழுதிய 'ஊருக்கு நல்லது சொல்வேன்' எனும் தினக்குரல் ஆசிரியத் தலையங்கங்களின் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா கடந்த ஞாயிற்றுக் கிழமை கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள்.



## 9000 தற்கொலைப்படகுகள் ஈரானில் ஆயத்த நிலையில்

ஈரானிய கடற்படை கமோண்டோக்கள் தலைமையில் 9000 தற்கொலைப் படையணி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளதாக இங்கிலாந்திலிருந்து வெளியாகும் "சன்" பத்திரிகை பரபரப்பு செய்தியொன்றை வெளியிட்டுள்ளது. ஈரானிய கடற்படையினரால் ஆரம்பிக்கப்பட்டுள்ள இப்படையில் எல்லாப்படகுகளிலும் சி4 ரக வெடிமருந்துகள் நிரப்பப்பட்டுள்ளன. பாரசீக வளைகுடாவில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ள அமெரிக்க அல்லது எதிரி நாட்டுக் கப்பலுடன் இப்படைகள் மோதும் போது 70 மீற்றர் சுற்றளவுக்கு கப்பலில் சேதமேற்படும். அப்போது எதிரி நாட்டுக் கப்பல்கள் செயல் இழப்பது மட்டுமல்லாமல் பல உயிரிழப்புகளும் ஏற்படும் எனவும் நம்பப்படுகிறது. 0,000 கமாண்டோக்கள் பயிற்சி பெற்று யுத்தத்திற்கு ஆயத்தமாயுள்ளனர். தற்கொலைப் படகுகளை அமைப்பதற்கு நியமிக்கப்பட்ட ஒரு பொறியியலாளர் நாட்டிலிருந்து த ப்பியோடியே இத்தகவல்களை மேற்படி பத்திரிகைக்கு கொடுத்திருக்கிறார்.

தற்கொலை படகுகளை உற்பத்தி செய்ய தனக்கு உத்தரவு வழங்கப்பட்டதாகவும் இதற்குத் தேவைப்படும் வெடிபொருட்கள் மிகவும் அபாயகரமானவை என்றும் தெரிவித்த அவர் ஈரானிய மக்கள் போரை விரும்பவில்லை என்றும் செய்தி வெளியிட்டிருக்கிறார். 6 மீற்றர் நீளமுள்ள 15,000 படகுகள் இந்த தற்கொலைப் படையணியில் சேர்த்துக் கொள்ளப்பட இருப்பதாகவும் அவர் தனது பேட்டியில் வெளியிட்டுள்ளார். 2000ஆம் ஆண்டில் யேமன் நாட்டில் அமெரிக்க கடற்படை படகு தாக்கப்பட்டதில் 17 கடற்படையினர் உயிரிழந்தனர்.

தொகுப்பு : பாலா.


புபே செட்



வீட்டுக்கும்
மற்றும்
ஹோட்டலுக்கு
ரூபா 3950/-யிலுந்து
டயிடஸ் ஸ்டோஸ்
லிபட்டி பிளாசா 2574446
புறக்கோட்டை 2439422



TAG DER OFFENEN TÜR



-70%
Wegen Umbau auf alle markierten Artikel

Samstag 11. Dezember 09.00-17.00 Uhr

Sonntag 12. Dezember 11.00-17.00 Uhr

Möbel Ferrari
HINWIL Wässeristrasse 28 Tel. 044 931 20 40
Direkt-Kredit-6 Monate ohne Zins

Gratis Kaffee und Panettone für die ganze Familie!



இப்பத்திரிகை கொழும்பு - 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2010, டிசம்பர் 12ஆம் திகதி வெளியிடப்பட்டது

WESTERN UNION | yes!

money transfer

yes!

## வெஸ்டர்ன் யூனியன் மூலம்
## வெளிநாட்டிலிருந்து பணத்தினைப் பெற்று
# பெறுமதி மிக்க பரிசுகளை
## வென்றிட ஒரு அரிய சந்தர்ப்பம்!





மாதாந்த சீட்டிழுப்பின் மூலம் தங்க நாணயங்களை வென்றிடும் அதிர்ஷ்டசாலிகள் ஐவரில் ஒருவராகவோ அல்லது ஐரோப்பாவிற்கான பயணமொன்றினை வென்றிடும் அதிர்ஷ்டசாலிகளாகவோ விரும்புகிறீர்களா?

2010 ஒக்டோபர் 20ஆம் திகதியிலிருந்து எந்தவொரு வட பிராந்திய வெஸ்டர்ன் யூனியன் பிரதிநிதிகள் மூலமாகவும் பணத்தைப் பெற்றுக்கொண்டால், மாதாந்தம் இடம்பெறும் அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் நீங்களும் பங்குபற்றி தங்க நாணயங்களையும், இருவர் ஐரோப்பா பயணிப்பதற்கான அதிர்ஷ்டத்தினையும் வென்றிடலாம்

| சீட்டிழுப்பு | வெற்றியாளர் தொகை | சீட்டிழுப்பு திகதி | பரிசுகள் |
|---|---|---|---|
| 1 வது சீட்டிழுப்பு | 05 | 24 நவம்பர் 2010 | 5 தங்க நாணயங்கள் |
| 2 வது சீட்டிழுப்பு | 05 | 28 டிசெம்பர் 2010 | 5 தங்க நாணயங்கள் |
| 3 வதும் இறுதியுமான சீட்டிழுப்பு | 07 | 17 ஜனவரி 2011 | 5 தங்க நாணயங்களுடன் இருவருக்கான ஐரோப்பா பயண டிக்கெட் |

தாமதம் செய்யாதீர்கள்! உடனேயே பணம் அனுப்புபவருக்கு அறிவித்து பெறுமதிமிக்க பரிசுகளை
'றிடும் சந்தர்ப்பத்தினைப் பெறுங்கள்.
மேலும் விபரங்களுக்கு எந்தவொரு வெஸ்டர்ன் யூனியன் பிரதிநிதி நிலையங்களையும் அணுகுங்கள்.

## வெஸ்டர்ன் யூனியன்

- விரைவானது
- நம்பிக்கையானது
- இலகுவானது
- சட்டபூர்வமானது
- நாடளாவிய 4100 பிரதிநிதிகளையும் இலங்கையின் வட பகுதியில் 70 கிளைகளையும் உள்ளடக்கியது.

- இந்நிகழ்வு 2010 ஒக்டோபர் 20ஆம் திகதி ஆரம்பித்து 2011 ஜனவரி 15ஆம் திகதியுடன் முடிவடையும்.
- 5 தங்க நாணயங்களின் வெற்றியாளர்கள் ஒவ்வொரு மாதமும்: 24 நவம்பர் 2010, 28 டிசெம்பர் 2010, 17 ஜனவரி 2011. ஒரு சீட்டிழுப்பில் பங்குபற்றும் ஒருவர் ஒரு தங்க நாணயத்தினை மாத்திரமே வெல்லலாம். வெஸ்டர்ன் யூனியன் மூலம் பணம் பெற்றுக்கொள்ளும் ஒருவர் எத்தனை சீட்டிழுப்பிலும் பங்குபற்றலாம்.
- எந்த அளவு பணத்தினைப் பெற்றுக்கொண்டாலும் ஒரு பரிமாற்றத்தினை மேற்கொள்ளும் ஒருவர் ஒரு முறை மாத்திரமே பங்கு பற்றுவதற்கு தகுதியுடையவராவார்.
- ஐரோப்பா பயணத்திற்கான வெற்றிபெறும் தகுதி இருவருக்கு உரியது.
- இச்சீட்டிழுப்பு 2011 ஜனவரி 17 ஆம் திகதி இடம்பெறும்.
- இதன் ஏற்பாட்டாளர் முன்னறிவத்தலின்றி பயணிக்கும் நாட்டில் மாறுதலை ஏற்படுத்தலாம்.
- வெற்றியாளாகள் தமது பரிசுகளை 2011 ஜனவரி 22ஆம் திகதி இடம்பெறும் இறுதி இசை விழாவின்போது பெற்றுக்கொள்ளலாம். பரிசுகளை பெறுவதற்கான இறுதித் திகதி 2011 பெப்ருவரி 15ஆம் திகதியாகும். பயணச் சீட்டுகளை வெல்வோர் பயணிக்கும் தினத்தினை சீட்டுகளை பெறமுன்னரே அறிவிக்கவேண்டும்.
- ஏற்பாட்டாளரின் அனுமதியுடன், விமானச் சீட்டினை பணமாக மாற்றிக் கொள்ளலாம்.
- பயணச் சீட்டும், சேவையும் மூன்றாந்தரப்பினர் அல்லது பயண முகவரினாலோ மேற்கொள்ளப்படும். இச்சேவையினரால் அளிக்கப்படும் சேவைக்கோ பயண செலவு மற்றும் மேலதிக வரிக்கட்டணங்கள் வீசா கட்டணங்கள் அல்லது பயணத்தின்போது ஏற்படும் செலவுகளுக்கு வெஸ்டர்ன் யூனியன் பொறுப்பாளிகள் அல்ல.


**தங்க நாணயங்கள் மற்றும் ஐரோப்பா பயண அதிர்ஷ்ட சீட்டிழுப்பு நிபந்தனைகளையும் சட்ட திட்டங்களையும் உள்ளடக்கும்**

licence No. WP/GT/3168


பிரதான பிரதிநிதிகள்

MMBL Money Master | NDB வங்கி | மக்கள் வங்கி | ශ්‍රී ලංකා තැපැල් இலங்கை அஞ்சல் SRI LANKA POST | UNION BANK


# 24 கரட்



அதிகச் சத்துக்கள் அடங்கிய காய்கறிகளில் கரட்டும் ஒன்று. இது கிழங்கு வகையைச் சேர்ந்தது. விற்றமின் அதிக மாக உள்ளது. காரட்டின் என்ற சத்துப் பொருள் உள்ளது. அதனால்தான் கரட் என்ற பெயரைச் சூட்டி யுள்ளனர். கரட்டின் என்ற சத்துப் பொருள்தான் விற்றமின் உண்டாவதற்கு முக்கியக் காரணமாக உள்ளது. கரட் மஞ்சள் கலந்த சிவப்பு நிறத்தில் முள்ளங் கியைப் போன்று காணப் படும். இதனு டைய மேல் தோல் மிகவும் மெல்லி யதாகச் சதைப் பற்றுடன் சேர்ந்தாற் போலக் காணப்படும்.



உடல் வளர்ச்சிக்கு வேண்டிய சத்துப் பொருள் கரட்டில் உள்ளது.




ஜீரண மண்டல உறுப்புக்களான குடல், கல்லீரல், மண்ணீரல் போன்றவை பலம் பெறும். இதனால் ரத்தஓட்டம் சீராக அமையும். கண்களுக்குக் குளிர்ச்சியைத் தந்து தெளிவான பார்வையை அளிக்கும். நோய்க் கிருமிகளை எதிர்த்துப் போராடி வெல்லும். உணவை ஜீரணமாக்க வைக்கும். வயிற்றிலுள்ள புழுக்களை அழிக்கும். கரட் சாப்பிட்டால், மூளை, இதயம் ஆகிய உறுப்புக்கள் சுறுசுறுப்பாக இயங்கும்.

கரட்டின் நடுப்பகுதியில் மஞ்சளாகக் காணப்படுவது, காரட்டீன் ஆகும். இந்தக் காரட்டின் இருப்பதால் எல்லா வியாதிகளையும் தீர்க்கக்கூடிய ஆற்றல் பெற்றதாக உள்ளது. கரட்டை நறுக்கிப் பொரியலாகவோ, கூட்டாகவோ செய்யலாம். பருப்புடன் சேர்த்துச் சாம்பாராகவும் வைக்கலாம். இது உடலுக்குக் குளிர்ச்சியைத் தரும். கரட்டுடன் மிளகு சேர்த்து சூப் தயாரித்து அருந்தலாம். மற்ற காய்கறிக ளுடன் இணைத்துச் சமைக்கலாம். கரட்டைச் சமைக்கும் போது அதனு டைய சத்து குறைந்து போகும் என்பர். மற்ற காய்கறிகளை வேக வைக்கும்போது அவைகளின் சத்து குறைந்து விடும். கரட்டைப் பச்சையாகச் சாப்பிட்டால் எந்தச் சத்தும் அழியாமல் நமக்கு அப்படியே கிடைப்பதைப் போல,கரட்டை வேக வைத்துச் சாப்பிட்டாலும் அப்படியே கிடைக்கும். வேக வைப்பதால் கரட்டின் சத்துக்கள் கொஞ்சமும் குறைவதில்லை. கரட்டைச் சாறாகப் பிழிந்தும் சாப்பிடலாம். தோல் பகுதிக்கு அருகில்தான் கரட்டின் சத்து உள்ளது. எனவே கரட்டை நன்கு கழுவி, தோல் பகுதியைச் சீவாமல் தான் பயன்படுத்த வேண்டும். ஆனால் கரட்டைப் பலமுறை நன்கு கழுவ வேண்டும்.

**கரட் உண்பதால் உண்டாகும் நன்மைகள்:**

1. இரத்தத்தைச் சுத்தப்படுத்தும்.
2. இரத்தத்தை விருத்தியடையச் செய்திடும்.
3. இரத்த ஓட்டத்தைத் தூண்டும்.
4. எளிதில் ஜீரணமாகும்.
5. உடல் வளர்ச்சிக்கு உதவும்.
6. இரத்தத்தின் கார, அமிலத்தன்மையைச் சீராக வைக்கும்.
7. கண் பார்வை தெளிவடையும்.
8. சிறுநீரை அதிகரிக்கும்.
9. கல்லடைப்பைப் போக்கும்.
10. கல்லீரலில் உள்ள மாசுகளைப் போக்கும்.
11. குடற்புண் வராமல் தடுக்கும்.
12. இரத்தத்தில் உள்ள கொழுப்புச்சத்தைக் குறைக்கும்.
13. மாலைக்கண் நோயைக் குணமாக்கும்.
14. சர்க்கரை நோயைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும்.
15. மாத விலக்கின்போது சரியான அளவு சுதகத்தை வெளியேற்றும்.
16. மலட்டுத் தன்மையைப் போக்கும்.
17. இருமலைப் போக்கும்.
18. புற்றுநோய், எலும்புருக்கி நோய் வராமல் தடுக்கும்.
19. மலச்சிக்கலைப் போக்கும்.
20. வயிற்றிலுள்ள பூச்சிகளை வெளியேற்றும்.
21. பெருங்குடல் வீக்கம், இரைப்பைப் புண் என்பனவற்றைக் குணமாக்கும்.
22. இரத்தத்திலிருந்து தேவையற்ற யூரிக் அமிலம் வெளியேற்றப்படும்.
23. சிறு நீரகக் கற்கள் கரைகின்றன.
24. சயரோகம் குணமாகும்.
25. இருதயம் நன்கு சீராக இயங்கும்.
26. நினைவாற்றலை அதிகரிக்கும்.
27. மஞ்சள்காமாலை விரைவாகக் குணமாகும்.
28. நெஞ்சுவலி, முதுகுவலி நீங்கும்.
29. தாய்மார்களுக்குப் பால் சுரக்கும்.
30. பருக்கள் மறையும்.
31. எண்ணெய் வழிவது போல



இருக்கும் முகம் பளிச்சென்று பிரகாசமடையும்.


சிலர் கரட்டை வேக வைத்தால் அதிலுள்ள சத்துக்கள் குறைந்து விடுகின்றன என்று சொல்கிறார்கள். இக்கருத்து தவறானது. நீங்கள் எந்த முறையில் கரட்டைச் சாப்பிட்டாலும், அதனுடைய முழுச்சத்துக்களும் உங்களுக்கு அப்படியே கிடைக்கிறது. அதனால்தான் கரட், 24 கரட்டாக எல்லோராலும் மதிக்கப்படுகிறது.

# பண்டிகைக்கால சமையல் குறிப்புகள்

## பைனாப்பிள் பருப்பு பாயாசம்

தேவையானவை:

பாசிப்பருப்பு - ஒரு கப்
கடலைப் பருப்பு - 1/2 கப்
அன்னாசி - 2
சீனி - 250 கிராம்
ஏலக்காய்த்தூள் - சிறிதளவு
வறுத்த முந்திரிப்பருப்பு - 10
பால் - 1 லீட்டர்
(காய்ச்சி ஆறவைக்கவும்)



செய்முறை: பாசிப்பருப்பையும், கடலைப்பருப்பையும் வெறும் தாய்ச்சியில் போட்டு பொன்னிறமாக வறுத்து, குழைவாக வேகவிடவும். வெந்த பருப்புகளுடன் சீனி சேர்த்துக் கலந்து, கொதிக்க வைத்து இறக்கி... ஏலக்காய்த்தூள், முந்திரிப்பருப்பு சேர்க்கவும். காய்ச்சிய பாலை இதில் விட்டுக் கலந்து, சாப்பிடுவதற்கு முன்பு அன்னாசியை சிறு துண்டுகளாக நறுக்கி மேலே போடவும்.

குறிப்பு: பருப்பு, பால், அன்னாசி என மணமும், சுவையும் வித்தியாசமாக இருக்கும் இந்தப் பாயாசம். விரும்பினால், சிறிது பாதாம், முந்திரியை அரைத்துச் சேர்க்கலாம்.

## வெஜிடபிள் வடை

தேவையானவை:

வெள்ளை உளுத்தம்பருப்பு - 250 கிராம்
பொடியாக நறுக்கிய கோஸ், வெங்காயம், துருவிய கேரட் - தலா ஒரு கப்
பொடியாக நறுக்கிய இஞ்சி - ஒரு தேக்கரண்டி
பச்சை மிளகாய் - 4
பொடியாக நறுக்கிய கறிவேப் பிலை - சிறிதளவு
எண்ணெய், உப்பு - தேவையான அளவு

செய்முறை: உளுத்தம்பருப்பை அரை மணி நேரம் ஊற வைத்து, களைந்து, தண்ணீரை வடிகட்டி இஞ்சி, பச்சை மிளகாய் சேர்த்து அரைக்கவும். இதில் உப்பு, நறுக்கிய வெங்காயம், கோஸ், கரட் துருவல், கறிவேப்பிலை சேர்த்துப்



பிசையவும். கடாயில் எண்ணெய் விட்டு, காய்ந்ததும் பிசைந்த மாவை வடைகளாகத் தட்டிப் போட்டு, பொன்னிறமாகப் பொரித்து எடுக்கவும்.

## ரவா பொங்கல்

தேவையானவை:

ரவை - 250 கிராம்
முந்திரிப்பருப்பு, மிளகு - தலா 10
நெய் - ஒரு மேசைக்கரண்டி
பொடியாக நறுக்கிய இஞ்சி, சீரகம் - தலா ஒரு தேக்கரண்டி
பொடியாக நறுக்கிய கறிவேப்பிலை - சிறிதளவு
உப்பு - தேவையான அளவு.

செய்முறை: ரவையை நெய்யில் பொன்னிறமாக வறுக்கவும். மிளகு, சீரகத்தைப் பொடிக்கவும். ரவையின் அளவில் நான்கு மடங்கு தண்ணீர் எடுத்து, நன்றாகக் காய்ச்சி, கொதிக்க விட்டு அதில் ரவையைப் போட்டுக் கிளறி, உப்பு போட்டு வேகவிடவும். நெய்யில் முந்திரிப்பருப்பு, பொடித்த மிளகு-சீரகம், இஞ்சி, கறிவேப்பிலை இவற்றை தனித்தனியே வறுத்து,



எல்லாவற்றையும் வெந்த பொங்கலில் சேர்த்துக் கிளறி இறக்கவும். சுவையான ரவா பொங்கல் தயார்.